26

32°c
கூடிய வெப்பநிலை 40 c
குறைந்த வெப்பநிலை 27 c
தெளிவான, வரண்ட காலநிலை காணப்படும்.

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பிரெஞ்சுமொழி கற்பதற்கு

FRENCH அரசாங்கம், FRENCH EMBASSY
ஆகியன அங்கீகரிக்கும் உலகின் முதல்தர
சர்வதேச நிறுவனம் AF மட்டுமே.
FRENCH கற்க விரும்புவோர்
எமது அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES பெறுங்கள்.

புதிய வகுப்புகள் 26.04.2014 8.30 a.m.
இன்றே பதிவுசெய்யுங்கள்
61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093

விலை: யாழ். – 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=
சுடர்: 29 ■ கதிர்: 148 ■ வள்ளுவர் ஆண்டு: 2045 | சித்திரை 10, புதன் 23.04.2014

# யாழ். கல்வி மாநாட்டுக்கு வர வெளிநாட்டினருக்குத் தடை

## விதித்தது கொழும்பு அரசு; தமிழரின் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 23
வடமாகாண கல்வி மேம்பாடு தொடர்பில் இன்றும் நாளையும் வடமாகாணக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் மாநாடு இடம்பெறவுள்ளது. வெளிநாட்டுக் கல்வியியலாளர்களும் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துக்களைத் தெரிவிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், அதற்கு கொழும்பு மத்திய அரசு தடை விதித்துள்ளது.
"வடக்கில் பல தசாப்தங்களுக்குப் பின்னர் இவ்வாறான மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் எங்குமே இல்லாத அளவுக்கு இவ்வாறான ஒரு மாநாட்டை நாம் ஏற்பாடு செய்துள்ளோம். வெளிநாடுகளிலுள்ள பேராசிரியர்கள் கல்வியியலாளர்கள் எனப் பலருக்கும் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டது. அவர்களில் 7 பேர் இங்கு வருவதற்கு சம்மதம் தெரிவித்திருந்தனர். ஆனால் கொழும்பு அரசு அதற்குத் தடை விதித்துவிட்டது. தடை பற்றிய விவரத்தை மத்திய கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன எமக்கு அறியத் தந்துள்ளார். வெளிநாட்டுக் கல்வியியலாளர்களை இந்த மாநாட்டுக்கு அழைக்க வேண்டாம் என்று அது கூறியுள்ளது. இதனால் வெளிநாட்டுக் கல்வியியலாளர்களது வருகை நிறுத்தப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார் வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா.
கோண்டாவிலில் உள்ள ராஜேஸ்வரி மண்டபத்தில் கல்வி மாநாடு இன்று ஆரம்பமாகி நடைபெறுகிறது. அது தொடர்பில் அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு வடமாகாண கல்வி அமைச்சு செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.
அப்போது, மாநாட்டில் வெளி

23ஆம் பக்கம் பார்க்க

## அனைத்து துறைகளிலும் இலங்கை முன்னேற்றம்

### பாராட்டுகின்றார் தென் கொரிய வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, ஏப்.23
போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் இலங்கை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார் கொரியக் குடியரசின் வெளிவிவகார அமைச்சர் யுமியுங்-ஹ்வான்.
கடந்த மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்திருந்தது தென்கொரியக் குடியரசு. அதன்பின்னர் இருநாட்டு உறவுகளிலும் மறைமுகமான

23ஆம் பக்கம் பார்க்க

## எங்கே அந்த 13 ஆயிரம் பேர்?

### கிளிநொச்சி மாவட்ட மீள்குடியமர்வு தொடர்பில் மாவை.சேனாதிராசா எம்.பி. கேள்வி

கிளிநொச்சி, ஏப்ரல் 23
கிளிநொச்சி மாவட்டத்தில் போர் ஆரம்பமாவதற்கு முன்னர் காணப்பட்ட சனத்தொகையை விடவும் தற்போது மீள்குடியமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. சுமார் 13 ஆயிரம் பேருக்கு என்னாயிற்று என்றே தெரியவில்லை. அவர்கள் எங்கே? - என்று கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா.
இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் மீளக்குடியமர்த்தப்பட்டுவிட்டனர் என்று இலங்கை அரசு கூறிக் கொண்டிருக்கின்றது. ஆனால் கிளிநொச்சி மாவட்டத்தின் சில இடங்களில் இன்னமும் மக்கள் மீள்குடியமர்த்தப்படாது உள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.


மாவை சேனாதிராசா.
*கோப்புப் படம்*

23ஆம் பக்கம் பார்க்க

## தலைமைப் பதவியில் இருந்து தூக்குங்கள் மஹிந்தவை

பொதுநலவாய அமைப்பிடம் ஐ.தே.க. கோருமாம்

பக். 2

## வடமாகாண உறுப்பினராக தவராசா இன்று பதவியேற்பு

### கமலின் வெற்றிடத்தை நிரப்புகிறார்

யாழ்ப்பாணம், ஏப்.23
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வடக்கு மாகாண சபையின் யாழ்.மாவட்ட உறுப்பினராக, கமலேந்திரனின் வெற்றிடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள சி.தவராசா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் இன்று மாலை 5 மணிக்கு பதவிப் பிரமாணம் செய்துகொள்ளவுள்ளார் என்று கூறப்படுகின்றது. அத்துடன் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் இவருக்கு நாளைய தினம் வழங்கப்படவுள்ளது என்றும் தெரியவருகின்றது.
வடக்கு மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில், ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட முன்னாள் அமைப்பாளர் க.கமலேந்திரன் போட்டியிட்டு வெற்றி பெற்றதுடன் எதிர்க்கட்சித் தலைவராகவும் நிய

23ஆம் பக்கம் பார்க்க

## இந்தியா செல்லவில்லை வடக்கின் முதலமைச்சர்


வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.
*கோப்புப் படம்*


யாழ்ப்பாணம், ஏப்.23
இந்திய மத்திய அரசு வடக்கு மாகாண முதலமைச்சரை புதுடில்லிக்கு அழைத்துள்ளது என்று இந்திய ஊடகங்களில் நேற்று செய்திகள் வெளியாகியிருந்தபோதும், இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகமும், வடக்கு மாகாண முதலமைச்சர்

23ஆம் பக்கம் பார்க்க

## பரராஜசிங்கம், லசந்த அரசாலேயே கொலை

### எரிக் சொல்ஹெய்ம் கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.23
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க ஆகியோர் இலங்கை அரசாலேயே படுகொலை செய்யப்பட்டனர்.




23ஆம் பக்கம் பார்க்க

பின்தொடருங்கள் எம்மை...
முகநூல் www.facebook.com/uthayan.print
டுவிற்றர் https://twitter.com/UthayanPrint



## கஸினோவை கூட்டமைப்பும் எதிர்க்கும்

பக். 2

## பிரதம செயலாளரை நோக்கி கை காட்டுகிறார் அமைச்சர்

### மேலதிக பணியாளருக்கான ரூ.20 மில்லியன் நிதி தொடர்பில்

யாழ்ப்பாணம், ஏப். 23
வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள வெற்றிடங்களுக்கு மேலதிகமாகப் பணியாளர்கள் உள்வாங்கப்பட்டது மட்டுமன்றி அவர்களுக்கென மாதாந்தம் 20 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றமைக்கு வடமாகாண பிரதம செயலாளரே பொறுப்புக் கூறவேண்டும் என்று தெரிவித்துள்ளார் வடமாகாண கல்வி அமைச்சர். த.குருகுலராஜா.
வடமாகாண கல்வி அமைச்சுச் செயலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பின் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

23ஆம் பக்கம் பார்க்க

## துண்டுப் பிரசுர விவகாரத்தால் சங்கிலித் தொடராகக் கைதுகள்

### கணினி நிறுவன உரிமையாளர் ஒருவரும் பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் கைது

யாழ்ப்பாணம், ஏப்.23
'தமிழீழ மலரும்' துண்டுப் பிரசுரம் தயாரிக்க உதவி செய்தார் என்ற குற்றச்சாட்டில் கடந்த வாரம் கணினி நிலைய உரிமையாளர் ஒருவரும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரியவருகின்றது.
கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகில் 'தமிழீழம் மலரும்' என்ற துண்டுப் பிரசுரம் ஒட்டினார் என்று கூறி இளைஞர் ஒருவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார். அதன் தொடர்ச்சியாக இணுவிலைச் சேர்ந்த அவரது நண்பர் ஒருவரும் கைது செய்யப்பட்டிருந்தார்.
குறித்த துண்டுப் பிரசுரங்களை அச்சடிக்க உதவி செய்தார் என்ற குற்றச்சாட்டில் மானிப்பாய் வீதியில் கணினி நிலையம் வைத்திருந்த ஒருவரை கடந்த வாரம் கொழும்பிலிருந்து வந்த பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளதுடன், அவரது கடையையும் 'சீல்' வைத்து மூடியுள்ளனர் என்று கூறப்படுகின்றது. ராஜரட்ணம் சுதர்சன் (வயது - 30) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், அவரது கணினியிலிருந்து மேற்படி துண்டுப் பிரசுரங்கள் தயாரிக்கப்பட்டமைக்கான தடயங்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் மேலும் கூறப்படுகின்றது. (ந-5)

## தொலைபேசி எண் 1984 அறிமுகம்

யாழ்ப்பாணம், ஏப்.23
போதைப் பொருள் பாவனை தொடர்பான தகவல்களை 1984 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும் என்று அறிவித்துள்ளது தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை. இது குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளும் யாழ்ப்பாணத்தில் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்திச் சபையின் கீழ் செயற்

23ஆம் பக்கம் பார்க்க

# தலைமைப் பதவியிலிருந்து மஹிந்தவை உடன் நீக்குக

## பொதுநலவாய அமைப்பிடம் ஐ.தே.க. கோரிக்கை

கொழும்பு, ஏப்.23

இலங்கையில் கொலைக் கலாசாரத்துடன் கூடிய மாபியாக்களின் ஆட்சியை நடத்தி பொதுநல்வாயத்தின் கொள்கைகளை தொடர்ச்சியாக மீறிவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை, பொதுநல வாயத்தின் தலைவர் பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்று அவ்வமைப்பின் செயலாளர் நாயகத்திடம் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுக்கவுள்ளது.

ஐ.தே.கவின் எம்.பிக்கள் குழு மீது அம்பாந்தோட்டையில் மேற்கொள்ளப் பட்ட தாக்குதல் சம்பவத்தின் அடிப்படையிலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளது என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது;

இலங்கையில் மாபியாக்களின் ஆட்சி இடம்பெறுகின்றது என்பது அம்பாந்தோட்டையில் வைத்து ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் முழு உலகத்துக்கும் எடுத்துக்காட்டியுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டதே தவிர, தாக்குதலுடன் தொடர்புடைய அம்பாந்தோட்டை நகரமேயர் உள்ளிட்ட குழுவினரிடம் பொலிஸார் எந்த வாக்குமூலத்தையும் பெறவில்லை.

அம்பாந்தோட்டை நகரமேயர் கையில் துப்பாக்கியை கொண்டு வரும் காட்சி ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட்டு முழு உலகமே அதைப் பார்த்தது. நகர மேயரின் நடவடிக்கை தொடர்பில் சரியான ஆதாரங்கள் இருக்கின்றபோதும் அவரைக் கைதுசெய்ய எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையின் தலைவர் மட்டுமல்ல, அவர் பொதுநலவாய நாடுகளின் தலைவராவார். அந்த நாடுகளுக்கும் அவர் முன்னுதாரணமாக இருக்க வேண்டும். பொதுநலவாயத்தின் கொள்கைகளைப் பாதுகாப்பதற்கு அவர் கடமைப்பட்டுள்ளார். இருப்பினும் அம்பாந்தோட்டையில் எமது கட்சி உறுப்பினர்களின் மீது நடத்திய தாக்குதலினூடாக மீண்டும் ஒரு முறை பொதுநலவாயத்தின் கொள்கைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீறியுள்ளார்.

இவ்வாறான நிலையில், பொதுநலவாய அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தை நடத்தி, பொதுநலவாயத்தின் கொள்கைகளை தொடர்ச்சியாக மீறிவரும் இலங்கை அரசின் நடவடிக்கை குறித்து ஆராய்ந்து தற்போதைய தலைமைப் பதவியிலிருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுநலவாயத்தின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவிடம் நான் கோரிக்கை விடுக்கின்றேன். இதற்காக பொதுநலவாய செயலாளர் நாயகத்திடம் எதிர்வரும் நாள்களில் நான் தனிப்பட்டமுறையில் கோரிக்கை விடுக்க உள்ளேன் - எனத் தெரிவித்துள்ளார். (ற-சி)

# கூட்டமைப்பின் கூட்டம் திருகோணமலையில்

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ்ப்பாணத்தில் நடைபெற விருந்து ஒத்திவைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 30 ஆம் திகதி திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு - கிழக்கு மாகாண நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் வவுனியாவில் இடம்பெற்றிருந்தது. அதன் பின்னர் கடந்த பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றிருந்தது.

இந்த நிலையில் மூன்றாவது கூட்டம் கடந்த 19 ஆம் திகதி யாழ்.மாவட்டத்திலேயே மீளவும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் குறித்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் ஒத்தி வைக்கப்பட்ட கூட்டம் இந்த மாதம் 30 ஆம் திகதி திருகோணமலை நகர சபை மண்டபத்தில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த ஆண்டு மே தினக் கூட்டம் சாவகச்சேரியில் இடம்பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ற-5)

# ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராக சர்வதேசத்தில் சாட்சி சொல்வேன்



கொழும்பு,ஏப்.23

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினரால் மேற்கொள்ளப்பட்ட மனிதஉரிமை மீறல்கள்குறித்துஎந்தவொருஅனைத்துலக விசாரணையின் முன்பாகவும் சாட்சியளிக்க நான் தயாராகவுள்ளேன்.

இவ்வாறு ஜனநாயக கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரில் பங்கேற்ற படையினரை நான் பாதுகாப்பேன். ஆனால், இலங்கை ஜனாதிபதியின் குடும்பத்தினரது மனித உரிமை மீறல்கள் குறித்த சாட்சியங்களை அளிப்பேன்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் அண்மையில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல், இந்த அரசின் மனிதஉரிமை மீறல்களுக்கான கடைசி உதாரணம்.

இந்தத் தாக்குதலை ஒருங்கிணைத்து நடத்திய அம்பாந்தோட்டை மாநகர முதல்வர் எராஜ் ரவீந்திர பெர்னாண்டோ உள்ளிட்டவர்களைக் கைது செய்து அரசால் நடவடிக்கை எடுக்க முடியுமா? என்று தெரியவில்லை.

அரசின் ஊழல் திட்டங்களை அம்பலப்படுத்தும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் மனித உரிமைகள் தொடர்ந்தும் மீறப்படுகின்றன.

இந்தத் தாக்குதல் ஜெனீவா தீர்மானத்தை நியாயப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது -என்றார். (ச)

# பல்கலைக்கழக அனுமதிப் படிவம் இன்று பெறலாம்

யாழ்ப்பாணம், ஏப்.23

2013/2014 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான படிவம் இன்று புதன்கிழமை முதல் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாண முகவர் நிலைய புத்தக சாலைகளில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-173)

# கஸினோ சட்டமூலத்தை கூட்டமைப்பு எதிர்க்கும்

கொழும்பு, ஏப்.23

நாடாளுமன்றில் அரசால் கொண்டுவரப்படவுள்ள கஸினோ சூதாட்ட சட்ட மூலத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையாக எதிர்க்கும் என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன். நாட்டைச் சீரழிக்கும் அரசின் செயற்பாடுகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு போதும் ஆதரவு வழங்காது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடும் எதிர்ப்பால் மீளப் பெறப்பட்ட கஸினோ சூதாட்ட சட்ட மூலத்தை சொற்பத மாற்றங்களுடன் நாளை வியாழக் கிழமை நாடாளுமன்றில் அரசு கொண்டுவரவுள்ளது. இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றில் நிறைவேற்றவிடமாட்டோம் என்று அரசின் பங்காளிக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் எதிர்க்கட்சிகளான ஜே.வி.பி., ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன சூளுரைத்துள்ளன.

> “இலங்கையில் மக்கள் பலர் வறுமையில் வாடுகின்றனர். ஆனால், இது தொடர்பில் அக்கறை செலுத்தாத அரசு, நாட்டை சூதாட்ட களமாக்க முயற்சிக்கின்றது. நாட்டையும் மக்களையும் சீரழிக்கும் அரசின் இந்தச் செயற்பாடுகளுக்கு நாம் ஒரு போதும் ஆதரவு வழங்கமாட் டோம்.

குறித்த சட்டமூலம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று அக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் கூறும்போது:

“இலங்கையில் மக்கள் பலர் வறுமையில் வாடுகின்றனர். ஆனால், இது தொடர்பில் அக்கறைசெலுத்தாத அரசு, நாட்டை சூதாட்ட களமாக்க முயற்சிக்கின்றது. நாட்டையும் மக்களையும் சீரழிக்கும் அரசின் இந்தச் செயற்பாடுகளுக்கு நாம் ஒரு போதும் ஆதரவு வழங்கமாட்டோம். எனவே, நாடாளுமன்றில் அரசால் கொண்டுவரப்படவுள்ள கஸினோ சூதாட்ட சட்ட மூலத்தை நாம் கடுமையாக எதிர்ப்போம்”- என்று தெரிவித்தார். (ற-சி)

# வாளுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 23

யாழ். மண்டைதீவில் வாள் மற்றும் கத்தியுடன், யுவதி ஒருவரைக் கடத்திக் கொண்டு வாகனத்தில் சென்றபோது கைது செய்யப்பட்டவர்களில் பிரதான சந்தேக நபருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டதோடு ஏனையவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அவருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

கடந்த மாதம் மண்டைதீவுச் சந்தியில் பொலிஸார் மறித்துச் சோதனை செய்தபோது யுவதே ஒருவருடன், குறித்த வாகனத்தில் இருந்து தடை செய்யப்பட்ட வாள் மற்றும் கத்தி என்பவற்றை பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அனைவருக்கும் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நேற்று இந்த வழக்கு மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே பிரதான நபர் தவிர்ந்த ஏனையவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அதன்படி அவர்கள் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒவ்வொரு ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் யாழ். பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்றும் நீதிமன்று உத்தரவிட்டது. பிரதான சந்தேகநபர் எதிர்வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (ற-4)

# இதுவரை 103 நாடுகள் வருகை தருவது உறுதி

## இளைஞர் மாநாட்டில் கலந்துகொள்ள

இலங்கையில் நடைபெறவிருக்கும் உலக இளைஞர் மாநாட்டில் தமது நாட்டின் பிரதிநிதிகள் கலந்துகொள்வதை இதுவரை 103 இற்கும் அதிகமான நாடுகள் உறுதிசெய்துள்ளன.

அதில் 40 நாடுகளின் அமைச்சர்களும் அரசியல் உயர் அதிகாரிகளும் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

103 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இளைஞர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளதோடு, 350 இற்கும் அதிகமான இளைஞர்கள் பல்வேறுபட்ட சிவில் சமூக அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

> “350 இற்கும் அதிகமான இளைஞர்கள் பல்வேறுபட்ட சிவில் சமூக அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

இந்தமுறை இலங்கையில் நடைபெறவிருக்கும் உலக இளைஞர்கள் மாநாட்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைத் தலைவர் உட்பட இன்னும் பல ஐக்கிய நாடுகள் சபையின் உயர் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

உலக இளைஞர் மாநாடு எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதன் ஆரம்ப நிகழ்வு அம்பாந்தோட்டை, மாகம்புர ருஹூணு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

# வடக்கில் உள்ள அனைவரும் புலிகளே அவர்களை விட்டு வைக்கவே கூடாது

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவரின் கருத்து இது

கொழும்பு, ஏப்.23

வடக்கில் வாழும் அனைவரும் விடுதலைப் புலிகளே. இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு புனர்வாழ்வு வழங்கப்பட்டாலும் இவர்களின் கொள்கைகளையும் மன நிலையையும் மாற்ற முடியாது. தீவிரவாதிகள் எப்போதும் தீவிரவாதிகளாகவே வாழ்வார்கள். அதன் வெளிப்பாடே இன்று மீண்டும் தலைதூக்கியுள்ளது. - இவ்வாறு தெரிவித்துள்ளார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது;

“வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் இன்னமும் முற்றாக அழிக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர, புனர்வாழ்வு வழங்கினாலும் புலிகளின் கொள்கையை அழிக்க முடியாது.

விடுதலைப் புலித் தீவிரவாதிகள் வடக்கில் முழுமையாக அழிக்கப்படவில்லை. குறைந்த அளவிலான தீவிரவாதிகளே கொல்லப்பட்டனர். எனினும் இன்னும் வடக்கில் புலிகள் வாழ்கின்றனர். அவர்களைப் பாதுகாத்து போராட்டத்திற்கு தயார் படுத்தும் செயலை தமிழ் தேசியக் கூட்டமைப்பு செய்து வருகிறது.

சம்பந்தன், சுமந்திரன் போன்றோர் சர்வதேச ரீதியில் தீவிரவாதிகளுக்கான ஆதரவைத் தேடுவதுடன் வடக்கில் எஞ்சியுள்ள விடுதலைப் புலிகளை வலுப்படுத்தும் செயற்பாட்டையும் செய்து வருகின்றனர். அதற்கமைய சர்வதேச அமைப்புக்களுடன் கைகோர்த்து விடுதலைப் புலிகள் இன்று வடக்கை சீரழிக்க ஆரம்பித்து விட்டது.

இதனை உடனடியாக கட்டுப்படுத்தி வடக்கு - கிழக்கில் உருவாகி வரும் தீவிரவாதத்தை அழிக்க வேண்டும். மீண்டும் வடக்கில் இராணுவப் பாதுகாப்பை அதிகரித்து விடுதலைப் புலி தீவிரவாதிகளை கொன்று அழிக்க வேண்டும். இல்லையேல் ஒருபோதும் பயங்கரவாதத்தை அழிக்க முடியாது.

சர்வதேச ஒத்துழைப்புடன் வடக்கில் உள்ள தீவிரவாதிகளையும் அவர்களுக்கு துணை போகும் அனைத்து உறுப்பினர்களையும் கைது செய்து கடுமையான தண்டனை வழங்க வேண்டும்”- என்று தெரிவித்துள்ளார். (ற-5)

# மாநகர சபை பதில் தொழிலாளர் 150 பேருக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், ஏப்.23
யாழ்.மாநகர சபையில் பதில் தொழிலாளர்கள் 150 பேருக்கு எதிர்வரும் 28 ஆம் திகதி நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் என்று யாழ்.மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகர சபையில் சுகாதாரப் பிரிவு மற்றும் வேலைப் பகுதிகளில் பதில் தொழிலாளர்களாகக் கடமையாற்றி வந்த தொழிலாளர்களுக்கு இது வரை நிரந்தர நியமனம் வழங்கப்படாமல் இழுத்தடிப்புச் செய்யப்பட்டது. அதனையடுத்து பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தமக்கான நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி தொடர் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். எனினும் நிரந்தர நியமனம் வழங்குவதில் கல்வித் தகைமை கொண்டு வரப்பட்டதைக் காரணம் காட்டி தொழிலாளர்கள் நியமனத்தில் இருந்து புறக்கணிக்கப்பட்டிருந்தனர்.

எனினும் தொழிலாளர்கள் பல வருடங்களாகத் தாம் கடமையாற்றியதால் மாற்றுத் தொழில்களை மேற்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதுடன் தமது குடும்ப வாழ்வாதாரமும் பாதிப்படைவதாகத் தெரிவித்து உணவு தவிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஆளுநர் அலுவலகம் முன்பாக தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதை அடுத்து ஆணையாளரால் ஆளுநருடன் கலந்தாலோசிக்கப்பட்டு நியமனம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தின்போது இன்று நியமனம் வழங்குவதாக ஆளுநரால் உறுதி மொழிவழ்ங்கப்பட்டதை அடுத்து தொழிலாளர்கள் போராட்டத்தைக் கைவிட்டனர்.

எனினும் நியமனம் வழங்கப்படும் என்ற உறுதி மொழியுடன் அவரவர் பெயர் இடப்பட்ட கடிதங்கள் மட்டும் இன்று தொழிலாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

அவர்களுக்கான நியமனக் கடிதம் எதிர்வரும் 28 ஆம் திகதியே வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் வேலைக்கு அமர்த்தப்படுவர் என்று ஆணையாளர் தெரிவித்துள்ளார். (வ-14)

**நியமனம் வழங்கப்படும் என்ற உறுதி மொழியுடன் அவரவர் பெயர் இடப்பட்ட கடிதங்கள் மட்டும் இன்று தொழிலாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.**

## வாக்குறுதியை மீறிய குடும்பம் மீண்டும் கசிப்பு உற்பத்தியில்

தென்மராட்சி, ஏப்.23
கிராமமே ஒன்றுதிரண்டு கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையை நிறுத்துவதாக வாக்குறுதி அளித்த போதிலும் கையொப்பமிட்டவர்களில் ஒரு குடும்பம் இரகசியமாக கசிப்பு விற்றதைக் கண்ட அயல் வீட்டுப் பெண் கசிப்பு விற்ற பெண்ணைத் தாக்கியதுடன் பொலிஸாரிடமும் காட்டிக்கொடுத்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மீசாலை மேற்கு கொட்டாம்பிட்டியில் இடம்பெற்றது. தாக்குதலுக்கு இலக்கான இரு பெண்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பொலிஸாரால் கசிப்பு வைத்திருந்ததாக கணவனுக்கும், மனைவிக்கும் எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் அ.பாலமயூரனின் ஆலோசனைக்கு அமைய கடந்த செவ்வாய்க்கிழமை மீசாலை கொட்டாம்பிட்டியைச் சேர்ந்த 16 குடும்பங்கள் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை செய்வதைக் கைவிடுவதாக பிரிவு கிராம அலுவலர் கே.கார்த்திகேயன் முன்னிலையில் உறுதிமொழி அளித்ததுடன் எழுத்து மூலமாக கடிதங்களும் வழங்கியிருந்தனர்.

அந்தக் குடும்பங்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொண்டு வந்த வேளையில் ஒரு குடும்பத்தினர் மீண்டும் கசிப்பு விற்பனையைச் செய்ததால் கோபமடைந்த ஏனைய குடும்பங்கள் பொலிஸாரிடம் முறையிட்டு காட்டிக் கொடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## சட்ட விரோதமாக மாடு வெட்டியோர் பிடிபட்டனர்



மீட்கப்பட்ட மாட்டிறைச்சி

வவுனியா, ஏப்.23
வவுனியா, பட்டக்காடு பகுதியில் சட்டவிரோதமாக மாடு வெட்டியவர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா நகர சபை வருமான பரிசோதகர் இ.கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

பட்டக்காடு பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சட்டவிரோதமாக மாடு வெட்டப்படுவதாக தொலைபேசி மூலம் வவுனியா நகர சபை செயலாளருக்குக் கிடைத்த தகவலையடுத்து அதனை கைப்பற்றுவதற்காக என்னுடன் நகர சபை பணியாளர்களை அவர் அனுப்பியிருந்தார்.

நாம் அங்கு சென்றபோது பட்டக்காடு பகுதியில் உள்ள வீடொன்றில் 2 வயது மதிக்கத்தக்க மாடு ஒன்று வெட்டப்பட்டு அதன் இறைச்சி பாயால் மூடப்பட்டிருந்தது. அதனைக் கைப்பற்றியதையடுத்து மாடு வெட்டப்பட்ட இடம் குறித்து விசாரித்தோம்.

குறித்த வீட்டு உரிமையாளர்கள் கறையான்குளம் பகுதியில் வைத்து மாட்டை வெட்டியதாகக் கூறியதையடுத்து அங்கு சென்று மாடு வெட்டப்பட்டபோது வீசப்பட்ட மண்டையோடு, மாட்டின் கால்கள், தோல் உள்ளிட்டவற்றையும் மீட்டுள்ளோம்.

சுகாதாரச் சீர்கேடான இடத்தில் வைத்து மாடு வெட்டப்பட்டுள்ளதுடன் இப்பகுதியில் கால்நடைகளுக்குக் கால்வாய் நோய் தாக்கம் உள்ள நிலையில் கால்நடை வைத்திய அதிகாரியாலும் குறித்த மாடு பரிசோதிக்கப்படவில்லை. அதனையடுத்து மீட்கப்பட்ட இறைச்சியையும் மாட்டை வெட்டியவரையும் வவுனியா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியுள்ளதாக மேலும் தெரிவித்தார். (வ-421)



வரணி மாசேரிப் பகுதியில் கடந்த சித்திரை வருடப் பிறப்பன்று குடும்பத்தவர் ஒருவரின் குடிசை தீக்கிரையான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. ஓலையால் வேயப்பட்ட குறித்த வீடு முற்றாக எரிந்து நாசமாகியது. பெறுமதியான பொருள்கள் மற்றும் உடுபுடைவைகள் யாவும் எரிந்து சாம்பராகிவிட்டன. இது விடயம் தொடர்பில் பிரதேச கிராம அலுவலர் மற்றும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-122)

## வாசகர்களின் கவனத்துக்கு

அச்சு இயந்திரங்களை மேம்படுத்தும் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதன் காரணமாக இன்று 'புதன் பொய்கை' ப் பகுதி வெளிவரவில்லை என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம். *நிர்வாகம்*

## மணல் ஏற்றி இறக்க குறைந்த கட்டணம் அறவிட முடிவு

யாழ்.மாவட்ட பாரவூர்திச் சங்கத்தால் மணல் ஏற்றி இறக்குவதற்கான கட்டணத்தை மக்களின் தேவைக்கு ஏற்ப குறைந்த கட்டணமாக அறவிட பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.

இதற்கமைவாக கோப்பாய் மற்றும் சாவகச்சேரி பிரதேசங்களுக்கு 15 ஆயிரத்து 750 ரூபாவும், நல்லூர், தெல்லிப்பழை, உடுவில்,சண்டிலிப்பாய் பிரதேசங்களுக்கு 16 ஆயிரத்து 500 ரூபாவும், யாழ்ப்பாணம், சங்கானை பிரதேசங்களுக்கு 16 ஆயிரத்து 750 ரூபாவும், பருத்தித்துறைக்கு 13 ஆயிரத்து 500 ரூபாவும், காரை நகருக்கு 17 ஆயிரத்து 500 ரூபாவும், ஊர்காவற்றுறை, வேலணை பிர தேசங்களுக்கு 20 ஆயிரம் ரூபாவும் கட்டணமாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏனைய மணல் ஏற்றி இறக்கும் நிறுவனங்களை விட மக்களின் தேவை கருதி பாரவூர்திச் சங்கம் இந்தக் குறைந்த கட்டணத்தை அறவிடத் தீர்மானித்துள்ளது. (வ-14)

## ராணுவத்தின் பயன்பாட்டில் பிரதேச சபைக்குரிய காணி

### வடமாகாண சபை உறுப்பினர் சிவமோகன் குற்றச்சாட்டு

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஆளுகைக் குட்பட்ட புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் அமைந்துள்ள பொதுச் சந்தைக்குரிய காணியை இலங்கை இராணுவத்தினர் கையகப்படுத்தி உள்ளதாகவும், பொதுமக்களின் பாவனைக்குரிய அந்தக் காணியில் இராணுவத்தினருக்கான நலன்புரி வாணிபத்தை ஆரம்பித்து இராணுவப் பராமரிப்புக்கும் பாதுகாப்புப் பணிகளுக்கும் செலவிடுவதற்காக பெருந்தொகை பணம் சம்பாதித்து வருவதாகவும் வட மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்;


பொதுமக்களின் வியாபார நடவடிக்கைகளுக்குரிய பொதுச் சந்தையின் பயன்பாட்டுக்குரிய காணியை இராணுவத்தினர் கையகப்படுத்தி அதில் தமது கடைகளை அமைத்து இலாபம் ஈட்டி வருகின்றனர். இதனால் எமது மக்களின் வாழ்வாதாரம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. போரின் கோரத்தால் நொந்து போயுள்ள எமது மக்கள் தமது சொந்த நிலங்களில் குடியேறி இப்போது தான் ஓரளவு விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு பொருளாதார ரீதியாக தலைநிமிர முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் இராணுவத்தினர் எமது மக்களை நோகடிக்கும், வஞ்சிக்கும் விதத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். எமது மக்கள் தமது விவசாய உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கு சந்தை வாய்ப்புகள் இல்லாமல் அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருக்கும் சூழலில், பொதுமக்களின் நலனுக்கு ஊறு விளைவிக்கும் இராணுவத்தினரின் இத்தகைய ஈனச்செயலை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

குறித்த பொதுச் சந்தை காணியை மீட்டு பொதுமக்களின் சந்தைப்பயன்பாட்டுக்கு கையளிப்பது தொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலரும், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்ற போதிலும் இருவரும் கையை விரித்து விட்டதாக மக்கள் குறைபட்டுக்கொள்கின்றனர்.

இராணுவத்தினரால் தமது வருமானம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்களால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும் குறித்த காணியிலிருந்து இராணுவத்தை வெளியேற்றி பொது மக்களின் சந்தை வியாபார நடவடிக்கைகளுக்கு காணியை வழங்குவது தொடர்பில் மாவட்ட அரச அதிபரும், உதவி அரச அதிபரும் ஈடுபாடும் ஆர்வமும் காட்ட வேண்டும் என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளரும், பிரதேச வாழ் மக்களும் கோருகின்றனர் எனத் தெரிவித்தார். (வ)

## வீதியோரத்தில் உள்ள பாதுகாப்பற்ற கிணறு



ஆபத்தான நிலையில் வீதியோரமாகக் காணப்படும் கிணறு

யாழ்ப்பாணம், ஏப்.23
பருத்தித்துறை வீதியில் வலி. கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகத்துக்கு முன்பாக அமைந்துள்ள பாதுகாப்பற்ற கிணற்றால் ஆபத்து ஏற்படும் நிலை காணப்படுகின்றது.

அந்தக் கிணற்றுக்கு பாதுகாப்பு வேலி எதுவும் அமைக்கப்படாததால் வீதியால் பயணிக்கும் மக்கள் கிணற்றில் தவறி விழும் அபாய நிலை காணப்படுகிறது.

பாதுகாப்பற்ற இந்தக் கிணற்றுக்கு பாதுகாப்பு வேலி ஒன்றை அமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-17)

## செயலமர்வு

தென்மராட்சி, ஏப்.23
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளில் விஞ்ஞானப் பிரிவில் கற்கும் மாணவர்களுக்கான செயலமர்வு இன்றும் நாளையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

மாகாண கல்வி அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தச் செயலமர்வில் பிறப்புரிமை(ஜெனட்டிக்ஸ்), சூழலியல்(எக்கோலொஜி) ஆகிய பிரிவுகள் பற்றி நடத்தப்படும் பாடங்களின் வளவாளர்களாக சீலன் மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார். (வ-9)

# இலங்கைத் தமிழர் விவகாரத்தில் காங்கிரஸை நம்ப முடியவில்லை

## *கருணாநிதி காட்டம்*



*கருணாநிதி*

சென்னை. ஏப்.23

'இலங்கைத் தமிழர் விவ கா ரத்தில் காங்கிரஸ் கட் சியை நம்ப முடியவில்லை' என்று தி.மு.க. தலைவர் கருணா நிதி குற்றம்சாட்டினார்.

மத்திய சென்னை தி.மு.க. வேட்பாளர் தயாநிதி மாறனை ஆதரித்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் பேசுகையில்,

"விடுதலைப் புலிகளுக்கு தமி ழகத்தில் பல்வேறு அமைப் புகள் ஆதரவு தெரிவித்தன. எம்.ஜி.ஆர். ஆதரவு தெரி வித்தார். பின்னர் தி.மு. க. வும் ஆதரவு தெரிவித்தது.

இலங்கையைத் தொடர்ந்து, தமிழகத்திலும் விடுதலைப் புலிகள் பலம் பெற்றனர். இப்போது முதல்வர் ஜெயல லிதா விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் போலவும், இலங் கைத் தமிழர் விவகாரத்தில் அக்கறை உள்ளவர் போலவும் பேசி வருகிறார்.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை இலங்கை இராணு வம் கைது செய்து, இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சட்ட சபை யில் ஜெயலலிதாதான் தீர் மானம் நிறைவேற்றினார்.

இலங்கையில் இறுதிப்போர் நடைபெற்றபோது, போர் என் றால் அப்பாவி மக்கள் கொல்லப் படுவது சகஜம்தான் என்றும் ஜெயலலிதா கூறி னார்.

போரில், பொதுமக்களைக் கேடய மாக விடுதலைப் புலிகள் பயன் படுத்துகிறார்கள் என்றும் ஜெயல லிதா கூறினார். இப்படி விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும், இலங் கைத் தமிழர்களுக்கு எதிராகவும் செயல்பட்ட ஜெயலலிதா இப்போது அவர்களுக் காக நீலிக் கண்ணீர் வடிக்கிறார். இதை தமிழகத்தில் உள்ள சிலரும் நம்புகின்றனர்.

இலங்கையில் நடைபெற்ற போரில் பிரபாகரன் மற்றும் எண்ணற்ற தமிழர்கள் மாண்டு விட்டனர். அதற்குப் பிறகாவது இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு ஓர் விடிவு கிடைக்க வேண்டும் என்பதற்காக நாம் போராடி வரு கிறோம்.

டெசோ அமைப்பு மூலம் பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டு, உலக அரங் கில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக அழுத்தம் கொடுத்து வரு கிறோம். காங்கிரஸ் அரசாவது அவர்களைக் காப்பாற் றும் என்று நினைத் தோம்.

ஆனால், காங்கிரஸும் கைவிட்டு விட்டது. இலங் கைத் தமிழர் பிரச்சினையில் க்காங்கிரஸ் கட்சியையும் நம்ப முடியவில்லை. அதன் காரணமாகவே காங்கிரஸ் கூட்ட ணியிலிருந்து விலகி னோம்.

எனவே, சிறு பதவிகளைப் பெறுவதற்காக இந்தத் தேர் தலில் தி.மு.க. போட்டியிடவில்லை. இலங்கைத் தமி ழர்களின் நலன்களைக் காக்கவே இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறோம்"- என்றார். (வ)

### இணைத் தலைவர்கள் தலைமையில் கிளி.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

கிளிநொச்சி.ஏப்.23

கிளிநொச்சி மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண்ட பத்தில் இணைத் தலைவர்க ளான வட மாகாண சபை முதல மைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தலைமையில் நடை பெற்றது.

இதில் மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான 23 விடயங்கள் பற்றி ஆராயப்படவிருந்த போதும் கண்ணிவெடியகற்றல் மீள் குடி யேற்றம், கல்வி, சுகாதாரம் உள்ளூராட்சி விடயங் கள் பற்றியே ஆராயப் பட்டன. (ஐ-55-426)

### ஈழத் தமிழர்கள் நலன் குறித்து பேசும் தகுதியை இழந்தார் மோடி

*தா.பாண்டியன் தெரிவிப்பு*

குஜராத்தில் அப்பாவி மக்கள் உயிரிழப்புக்குக் காரண மாக இருந்த நரேந்திர மோடியை ஆதரிப்பதன் மூலம் இனி ராஜபக்ஷ மற்றும் ஈழத் தமிழர்கள் நலன் குறித்தும் பேசும் உரிமையை, தகு தியை வைகோ இழந்து விட் டார் என்றார் இந்திய கம்யூ னிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் தா.பாண்டியன்.

நாகை மக்களவைத் தொகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் கோ.பழனிச் சாமியை ஆதரித்து திட்டச் சேரியில் திங்கட்கிழமை நடைபெற்ற தேர்தல் பரப்பு ரைக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில்,

"தற்போது நடைபெறவுள் ளது ஓட்டப் போட்டியோ அல் லது மல்யுத்தமோ அல்ல. சுமார் 5.000 ஆண்டுகள் வர லாறு கொண்ட இந்தி யாவை ஆளும் தகுதியான நபரைத் தேர்வு செய்யும் தேர்தல்.

ஒரு தரப்பினர் ஏதோ அலை வீசுவதாகவும், பிரதமராகி விட்டார் எனவும் தகவல் களை பரப்பி வருகின்றனர். அலை வீசுவது உண்மை என்றால் ரஜினிகாந்தை யும், விஜயகாந்தையும் வீடு வீடாகச் சென்று சந்திக்க வேண்டிய அவசியம் என்ன. நூற்றுக்கும் அதிகமான மதத் தினர் வாழும் இந்தி யாவில் மதசார்பற்ற, ஊழ லற்ற மத் தியஅரசுஅமையமக்கள்இடது சாரிகளை ஆதரிக்க வேண் டும்- " என்றார். (வ)


## மரண அறிவித்தல்

### ஜெயபால் பெர்னாண்டோ அன்ரனி றெக்ஸ்

(முன்னாள் குமுதினி பாமசி உரிமையாளர் நெல்லியடி, குமுதினி பன்முக சேவை நிறைவேற்றுப் பணிப்பாளர்)



வெற்றிலைக்கேணி வடக்கு, வடமராட்சிக் கிழக்கைப் பிறப்பிடமாகவும், நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயபால் பெர்னாண்டோ அன்ரனி றெக்ஸ் நேற்றுமுன்தினம் (21.04.2014) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயபால் பெர்னாண்டோ மற்றும் மரியமலர் தம்பதியரின் அன்பு மகனும், சச்சிதானந்தசிவம் - றீற்றா தம்பதியரின் அன்பு மருமகனும் குமுதினியின் அன்புக் கணவரும் கோபினா (கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரி), சுஜீபன் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராதிகா (சுவிஸ்), சூசைபெனடிற் (ரவி- கொழும்பு) ஆகியோரின் சகோதரனும், மரியாம்பிள்ளை (சுவிஸ்), வனஜா (லண்டன்), குலசிங்கம் (ரயில்வே பொறியியலாளர்), லக்ஸ்சுமி தேவி, குலராசசிங்கம், குமாரகுலசிங்கம்,ரஞ்சினிதேவி, றோசினிதேவி, நிலானி, ஆரணன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.04.2014) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு கரவெட்டி தூய அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் கீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

R.C லேன்,சரஸ்வதி
வித்தியாலய வீதி, (கொடிகாம வீதி), கரவெட்டி. (47199)

தகவல்:
உறவினர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி செசிலியம்மா பொன்னையா அன்ரன்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் மத்தியூஸ் வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செசிலியம்மா பொன்னையா அன்ரன் நேற்று முன்தினம் (21.04.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.04.2014) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது யாழ்ப்பாண இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு மண்டைதீவு இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுபி.ப 3.30 மணியளவில் மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

63, மத்தியூஸ் வீதி.சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 0776184354. (47120)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா அருணாசலம்

*(ஓய்வு பெற்ற ஆசிரியை)*



கரம்பகம் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், பாலாவி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா அருணாசலம் ( 21-04-2014) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் அருணாசலத்தின் (ஓய்வு பெற்ற அதிபர்) அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான கனகசபை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், ஐயம்பிள்ளை கந்தையாவின் அன்பு மருமகளும், காலஞ் சென்றவர்களான மகேஸ்வரி, அருணாசலம் மற்றும் சரவணமுத்து காலஞ்சென்ற பரமேஸ்வரி ( ஆசிரிய ஆலோசகர்) மற்றும் திருவாதவூரர் (ஓய்வுபெற்ற காசாளர் ப.நோ.கூ.ச), காலஞ்சென்ற மாணிக்கவாசகர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சசிகலா, சியாமளா ( ஆசிரியை கச்சாய் அ.த.க பாடசாலை) சிவசுதன் (சாவகச்சேரி பிரதேச சபை பொது நூலகம் - கைதடி) செந்தூர்ச் செல்வன் (ஜேர்மனி) காலஞ்சென்ற சபேசன் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற சிவராசா மற்றும் சுதர்சினி, நிரஞ்சலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், கஜன் (ஆஸ்திரேலியா), நகுஜன் (கணிய அளவவியலாளர்), வைணவி (கொழும்பு பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற அரவிந் மற்றும் டினார்த்தனன் (யாழ். இந்துக் கல்லூரி), புராந்தகி (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) சபேசினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.04.2014) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பாலாவி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பாவிலு யோசேப் (ராசு)



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது உடையார்கட்டு, மூங்கிலாறை வசிப்பிடமாகவும் கொண்ட பாவிலு யோசேப் 22.04.2014 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாகிறெட் முத்தம்மாவின் அன்புக் கணவரும், துரைஐயா, இரத்தினமணி, ஜசிந்தா, இரத்தினையா, அழகையா, ஜெயக்கொடி, சமரக்கொடி, செல்வக்கொடி (பிரான்ஸ்), காலஞ்சென்ற வவா மற்றும் ராதா (பிரான்ஸ்), ஜெகனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மலர், காலஞ்சென்ற சூசை தாசன் மற்றும் தேவராசா, ரதி, சுலோசனா, ஜெயசீலி, விக்னேஸ் வரி, ராசேஸ் (பிரான்ஸ்), கௌரி, வின்சன் (பிரான்ஸ்) ஆகியோ ரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, இன்று (23.04.2014) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொழுந்துப்புலவு சேமக்காலையில் நல்லடக் கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஜெயக்கொடி - 077 808 1236,
சமரக்கொடி - 077 955 8056
அழகையா - 077553 0507

*தகவல்:*
பிள்ளைகள்.
(43448)(2.6)

## கண்ணீர் அஞ்சலி



எமது தேவஸ்தானத்தில்
பல காலமாக பிரதம
பௌராணிகராகவும்
சிவத்தமிழ்விருது 2013இல்
பெற்றவருமாகிய 'சைவத்திரு'
சிவசண்முகவடிவேல் ஐயா
சிவபதமடைந்ததைக் கேள்வியுற்ற
எமது தேவஸ்தானம் தமது இறுதி
அஞ்சலியைச் செலுத்துகின்றது.
அவரின் ஆத்மா சாந்தியடைய
அம்பாளின் திருவடியைப்
பிரார்த்திக்கின்றோம்.

(சி/13514)(5.6.3)

நிர்வாக சபை, ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### அல்பிரட் கிறிஸ்ரின் ஜோசப்



சென்.ஜேம்ஸ் வீதி, இளவாலையைப் பிறப் பிடமாகவும் ஜேர்மனி, டுயிஸ்போர்க்கை வசிப் பிடமாகவும் கொண்ட அல்பிரட் கிறிஸ்ரின் ஜோசப் 16.04.2014 புதன்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளப்பு அல்பிரட் மற்றும் மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சந்தியா லோறன்ஸ் - மார்கிரேட் தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை வியாழக்கிழமை (24.04.2014) பிற்பகல் ஜேர்மனியில் நடைபெறும் அதேவேளை, இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு அவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென். ஜேம்ஸ் வீதி, இளவாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

# பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மீள அங்கேயே இயக்குவதில் முடிவில்லை

யாழ்ப்பாணம், ஏப்.23
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை மீளவும் பலாலியில் இயங்குவது தொடர்பாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் காரசாரமாக விவாதிக்கப்பட்டபோதும் அது குறித்து எந்த வொருமுடிவும் எட்டப்படவில்லை.
யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கடந்த கூட்ட அறிக்கை தொடர்பில் ஆராயப்பட்ட போது பலாலி ஆசிரியர் கலாசாலை விடயம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது பலாலி ஆசிரியர் கலாசாலையை அப்படியே விட்டு விட முடியாது என்றும், அதனை அங்கேயே மீள இயங்க வைக்க வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.
இதன் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தற்போது ஆசிரியர் கலாசாலைகள் தேவையில்லை என்பது அரசின் கொள்கை என்று தெரிவித்தார். அத்துடன் பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு விண்ணப்பிப்பவர்கள் குறைவு என்றும் அதன் தேவை தற்போது அற்றுப் போயுள்ளது என்றும் தெரிவித்தார்.
அதனையடுத்து விவாதம் கடும் வாதப் பிரதிவாதமாக மாறியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையே கடுமையான தர்க்கம் நடந்தது. இதன் போது வடக்கு மாகாண கல்வி அமைச்சரும் குறித்த பலாலி ஆசிரியர் கலாசாலை கட்டடம் மீளவும் கல்வித் தேவைக்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டினார். அப்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மத்திய அரசுக்குட்பட்ட விடயம். மத்திய கல்வி அமைச்சர் இங்கு வருகின்றார். அதன் போது வடக்கு கல்வி அமைச்சர் இது தொடர்பில் கலந்துரையாடட்டும் என்றார். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களோ, இவ்விடயம் தொடர்பாக கலந் துரையாடுவதில் எங்களுக்குச் சிக்கலில்லை. இது தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்தனர்.
இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தேசிய கல்விக் கொள்கைக்கு அமைவாக என்ற வசனம் சேர்க்கப்பட்டே அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற முடியும் என்று குறிப்பிட்டார். இலங்கை அரசின் தேசியக் கொள்கை என்பது தமிழர்களை அழிப்பது தான் என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கடுமையாகச் சாடினார். இதனைத் தொடர்ந்து கடுமையான விவாதம் நடைபெற்றது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தத் தீர்மானத்துக்கு உடன்படவில்லை என்ற குறிப்புடன் இந்தத் தீர் மானம் நிறைவேற்றப்படட்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தெரிவித்தனர். அத்துடன் அந்த விடயம் முற்றுப் பெறாமலேயே அடுத்த விடயம் ஆராயப்பட்டது. (வ-5)



நீர்வேலி தெற்கு விவசாய வீதிக்கென பெயரிடப்பட்ட பெயர் கல்லு சேதமாக்கப்பட்ட நிலையில் உள்ளது. சேதப்பட்ட நிலையில் உள்ள இந்த பெயர்க் கல்லை சீர் செய்து தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-17)

# கடத்தப்படுகின்றன கால்நடைகள்; கண்டும் காணாமலும் பொலிஸார்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குற்றச்சாட்டு முன்வைப்பு

வலி. வடக்கு, ஏப். 23
யாழ். மாவட்டத்தில் இருந்து நல்ல இன கால் நடைகள் களவாக கடத்திச் செல்லப்படுவதால் யாழ். மாவட்டத்தில் கால் நடைகளின் பயன்பாடு பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதனை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை என்றும் யாழ். மாவட்ட கால்நடைகள் உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.
இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்;
நல்ல இன பசு மாடுகள் அனுமதிப்பத்திரம் இன்றியே வெளி மாவட்டங்களுக்கு களவாக கடத்திச் செல்லப்படுவதாகவும், இதனால் யாழ்.மாவட்டத்தின் பால் உற்பத்தி பாதிக்கப்படுவதுடன், இறைச்சி உற்பத்தியும் கூட பாதிப்படைவதாகவும் தெரிவித்தார்.
பொலிஸாரிடம் தாம் நேரில் சென்று முறையிட்டுள்ள போதிலும் அதற்கான உரிய நடவடிக்கை அவர்களால் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்ததுடன், பிரதேச செயலாளர்கள் மாடுகளைக் கொண்டு செல்ல அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டும்.
அவர்கள் அனு மதிப்பத்திரம் வழங்காத நிலையிலும், தம்முடைய அனுமதி பெறப்படாமலும் களவான அனுமதிப்பத்திரங்களைப் பயன்படுத்தி மாடுகள் கடத்திச் செல்லப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.
அதையடுத்து, இத்தகைய நடவடிக்கையை கட்டுப்படுத்த ஆனையிறவு, கொடிகாமம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் பொலிஸார் அதிக கவனம் எடுத்து இத்தகைய மாடுகளை கடத்திச் செல்பவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் எனவும், இதேவேளை உரிய பிரதேச செயலாளர்களின் கையொப்பங்களின் மாதிரிகளை பொலிஸார் பெற்றுக் கொண்டு அனுமதிப்பத்திரங்கள் உரிய முறையில் வழங்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அவர் முன் வைத்த கோரிக்கைக்கு அமைவாக உரிய நடவடிக்கையை பொலிஸார் எதிர்காலத்தில் மேற் கொள்ள வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. (வ-86)

# வேலணை கிழக்கில் உவர்நீர்த் தடுப்பணை

யாழ்ப்பாணம், ஏப். 23
வேலணை கிழக்கு செட்டிபுலத்திலும், நயினாதீவு வங்களாவடியிலும் உவர் நீர்த் தடுப்பணைகளை அமைக்க வேலணை பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது.
வேலணை பிரதேச சபையில் போதிய வருமானம் இல்லாத நிலையிலும் இந்தத் தடுப்பு அணைகள் அவசியம் என்பதால் வடக்கின் வசந்தம் விசேட செயற்றிட்டத்தில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வேலணை பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சிவராசா தெரிவித்தார்.
கிராம அபிவிருத்தித் திட்டங்களில் அந்தந்தக் கிராம மக்களும் பங்களிப்பை வழங்குவதன் மூலம் திருப்தியான வேலைகள் இடம்பெற வாய்ப்புக்கள் இருக்கும் என்பதால் கிராமிய அபிவிருத்தித் திட்டங்களில் மக்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்ள வேண்டும்.
ஒவ்வொரு கிராமத்தின் அபிவிருத்தியும் அந்தந்தப் பகுதி பிரதேச சபை உறுப்பினரின் தலைமையில் நடைபெறும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-7)



பண்ணை பிரதான வீதியிலும் மற்றும் பண்ணை பாலத்தடியிலும் கடற்றொழிலாளர் வலைகளைப் போட்டு உலர விடுவதால் வாகனங்கள் மற்றும் பாதசாரிகளின் போக்குவரத்துக்குச் சிரமம் ஏற்பட் டுள்ளது. குறித்த பகுதியில் கரைவலை மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளரே தமது வலைகளை பிரதான வீதியில் போட்டு உலரவிடுகின்றனர். (வ-17)

# அச்சுவேலி ப.நோ.கூ.சங்க நெறியாளர் குழு

அச்சுவேலி, ஏப்.23
வலி.கிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நெறியாளர் குழுவுக்கு புதியவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வாக்களிப்பின் மூலமான தெரிவின் போது ஏழு பேர் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தெரிவுகள் யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் தலைமையில் நடைபெற்றது.
கடந்த 30 வருடங்களாக வாக்களிப்பு இன்றி ஏக மனதாக தெரிவுகள் நடைபெற்று வந்தன. குறிப்பிட்ட சிலர் தொடர்ச்சியாக நெறியாளர் குழுவில் இடம்பெற்று வந்தனர்.
இதனை விரும்பாத நிலையில் புதிய அணி ஒன்று களமிறங்கியது. இரண்டு அணிகள் போட்டியிட்டதால் வாக்களிப்பின் மூலம் தெரிவுகள் இடம்பெற்றன. 94 பொதுச்சபை உறுப்பினர்கள் இதில் வாக்களித்தனர். அதிகூடிய வாக்கு வித்தியாசத்தில் புதிய அணி வெற்றி பெற்றது.
புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட நெறியாளர் குழு உறுப்பினர்கள் பெயர் விவரம் வருமாறு:
தலைவர் - இளையதம்பி சந்திரன், உப தலைவர் -தியாகராசா தாமரைச்செல்வம் மற்றும் உறுப்பினர்களாக தில்லையம்பலவாணர் விமலன், முருகேசு இராசேந்திரம், கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம், இராசதுரை இராகுலன், சிவஞானம் நவபாலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-11)

# வரணியில் அதிகரிக்கும் தேங்காய் திருட்டுகள்

குடத்தனை, ஏப்.23
வரணிப் பிரதேசத்தில் என்றுமில்லாதவாறு தேங்காய்க் களவுகள் அதிகரித்துள்ளன.
தற்போது நிலவும் கால நிலையை சாதகமாகப் பயன்படுத்தி நண்பகல் வேளைகளில் ஆள்கள் உலவாத நேரங்களில் தென்னம் தோட்டங்களில் புகும் திருடர்கள் தமது கை வரிசையைக் காட்டி வருகின்றனர்.
கடந்த வாரம் மாசேரிப் பகுதியில் உள்ள வயலோரப் பகுதிகளில் உள்ள தென்னம் காணிகளில் புகுந்து தேங்காய் பறித்துக் கொண்டிருந்த இளைஞர்கள் நால்வர் தென்னம் தோட்டக்காரரால் விரட்டி யடிக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.
திருடர்கள் தாம் பறித்த தேங்காய்களை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு தப்பி ஓடியுள்ளனர்.
சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் என்றும் இது குறித்து பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது..
இந்தப் பிரதேசத்தில் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் களவாக தேங்காய் பறித்த நபர் ஒருவர் ஆள் அரவம் கேட்டு பதகளித்து மரத்தில் இருந்து வீழ்ந்து இடுப்பு முறிந்த நிலையில் படுக்கையில் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ-122)


# கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த வேண்டும்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாநகர சபை முதல்வர் தெரிவிப்பு

வலி. வடக்கு, ஏப். 23
யாழ். மாவட்டத்தில் கட்டாக்காலி நாய்களின் அதிகரிப்பால் விசர் நாய்க்கடிக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் வாகன விபத்துக்கள் ஏற்படும் நிலையும் உருவாகியுள்ளது.
எனவே இதனைக் கட்டுப்படுத்த யாழ் .மாநகர சபை உட்பட பிரதேச சபைகளுக்கும் உதவி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா நேற்றுமுன்தினம் இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்வைத்துள்ளார்.
கால் நடைகள் உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திடம் கடந்த கூட்டத்தில் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆலோசனை கேட்கப்பட்டதாகவும் இது வரை அது குறித்து எந்த விதப் பதிலும் கிடைக்கப் பெறவில்லை என்றும் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்திய முதல்வர், தான் தனது சபையின் கால் நடை வைத்தியதிகாரியுடன் இணைந்து தனியார் நிறுவன வைத்தியதிகாரியின் சேவையைகொழும்பில் இருந்து பெற்று கட்டாக்காலிநாய்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (வ-86)

## தாஜ்மஹாலைச் சுற்றிப் பார்ப்பது போல ஏழைகள் வீட்டுக்குப் போகிறார் ராகுல்

*நரேந்திர மோடி சீற்றம்*



நரேந்திரமோடி

புதுடில்லி,ஏப். 23
தாஜ்மஹாலுக்குச் சுற்றுலா செல்வதைப்போல் ராகுல் ஏழை கள் வீட்டுக்குச் சென்று வருவ தாக நரேந்திர மோடி கூறியுள்ளார்.
உத்தர பிரதேச மாநிலம் ஹரோடி நகரில் தேர்தல் பரப்புரை மேற்கொண்டு பேசிய மோடி,தாஜ் மஹாலைப் பார்க் காத மக்கள் தான் அதைச் சுற்றி பார்த்து விட்டுப் புகைப் படம் எடுத்துப் பகிர்ந்து கொள் வார்கள்.
அதுபோல வறுமை எப்படி இருக்கிறது என்று சோதித்துப் பார்க்கிறார் ராகுல். ஏழைக் குழந்தைகளிடம் அவர் புகைப் படம் எடுத்துக்கொள்கிறார்.
ராகுல்காந்தி போன்றவர்கள் பிறக்கும்போதே, செல்வந் தர்களாக இருந்ததால், வறுமை எப்படிப்பட்டது என்பதை தெரிந்திருக்கமாட்டார்கள்.
நான் வறுமையை உணர்ந் தவன், எனது குழந்தைப் பருவத்தைப் பற்றிக் கேலி செய்கிறார்கள். நான் தேநீர் தான் விற்பனை செய்தேன், நாட்டை விற்பனை செய்ய வில்லை என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று தெரிவித்துள்ளார். (கு)



சென்னை, தியாகராஜர் நகரில் முதல்வர் ஜெயலலிதா உரையாற்றினார். வேட்பாளர்கள் அனைவரும் கூட்டம் முடியும்வரை, கைகூப்பியபடி நின்றிருந்தனர். (கு)

# சிறந்த நிர்வாகி மோடியா? இல்லை இந்த 'லேடி' தான்

*ஜெயலலிதா அதிரடி*

சென்னை,ஏப். 23
சிறந்த நிர்வாகி குஜராத் முதல்வர் நரேந்திர மோடி அல்ல, தமிழகத்தின் இந்த லேடிதான் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.
தென் சென்னை மக்களவைத் தொகுதி அ.தி.மு.க. வேட்பாளரை ஆதரித்துப் பேசிய அவர், குஜராத்தை தமிழகத்துடன் ஒப்பிட்டு பல்வேறு துறைகளின் மனிதவளக் குறியீடுகளைப் பட்டியலிட்டு அந்த மாநிலத்தின் முதல்வர் நரேந்திர மோடியைவிடத் தானே சிறந்த நிர்வாகி என்று குறிப்பிட்டுப் பேசியுள்ளார்.
அவர் பேசுகையில், "ஒரு மாநிலம் வளர்ச்சி பெற்றிருக்கிறதா? அந்த வளர்ச்சி ஏழை எளிய நடுத்தர மக்களைச் சென்றடைந்து இருக்கிறதா? என்பதை தெளிவுபடுத்துபவைதான் மனிதவளக் குறியீடுகள்.




ஜெயலலிதா

விளம்பர வளர்ச்சி எது, உண்மையான வளர்ச்சி எது என்பதை இந்த மனிதவளக் குறியீடுகள்தான் அனைவருக்கும் தெளிவுபடுத்தும்.
தமிழகத்தின் வளர்ச்சி என்பது ஏழை எளியோர் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி.
வாக்காளர்களே இப்போது சொல்லுங்கள். சிறந்த நிர்வாகி யார்? குஜராத்தைச் சேர்ந்த மோடியா அல்லது தமிழகத்தைச் சேர்ந்த இந்த லேடியா?
அனைத்துத் துறைகளிலும் மிகச் சிறந்த நிர்வாகத்தை அளித்துக் கொண்டிருப்பவர் தமிழகத்தின் இந்த லேடிதான் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்" என்று கூறியுள்ளார். (கு)

## ஜெயலலிதா பிரதமரானால் நாம் அதை வரவேற்போம்

*தேவகவுடா அறிவிப்பு*

புதுடில்லி,ஏப் 23
'ஜெயலலிதா பிரதமரானால் அதை நாம் வரவேற்போம்' என்று முன் னாள் பிரதமர் தேவகவுடா கருத்துத் தெரிவித்துள்ளார்.
மதச்சார்பற்ற ஜனதா தள கட்சியின் நிறுவுநரான தேவகவுடா, ஒசூர் ராம் நகர் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளரை ஆதரித்துப் பரப் புரை மேற்கொண்டார்.
அப்போது பேசுகையில், மக்கள் காங்கிரஸ் கட்சியை முற்றிலும் புறக்கணிக்க வேண்டும். நரேந்திர மோடி பிரதமராக வரவேண்டும் என்பதற்காகப் பல நிறுவனங்கள் கைகோர்த்துச் செயற்படுகின்றன. அவர்களுக்கு ஆதரவாக காஷ் மீர் முதல் கன்னியாகுமரிவரை உள்ள ஊடகங்களும் உள்ளன.
மேலும், தமிழக முதல்வர் ஜெயலலிதா பிரதமரானால் வரவேற்போம் என்று பேசியுள்ளார். (கு)



தேவகவுடா

> நரேந்திரமோடி பிரதமராக வரவேண்டும் என்பதற்காகப் பல நிறுவனங்கள் கைகோர்த்துச் செயல் படுகின்றன.

## பரப்புரையில் குழம்பிய நக்மா

புதுடில்லி,ஏப். 23
நடிகை நக்மா, ஜம்மு–காஷ்மீர் பிரிவினைவாதத் தலைவரானசையத் அலிஷா கிலானியை பாரத ரத்னா விருது பெற்றவர் எனக்குறிப்பிட்டுள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
மக்களவைத் தேர்தலையொட்டி, ராய்ப்பூரில் காங்கிரஸ் வேட்பாளர் காஸிம் அலி கானை ஆதரித்து நக்மா பேசுகையில், மோடியைப் பிடிக்காதவர்கள் பாகிஸ்தானுக்குச் சென்று விடுங்கள் எனப் பா.ஜ.கவின் கிரிராஜ் கூறியுள்ளார்.
மேலும், சையத் அலிஷா கிலானிக்கும் மோடியைப் பிடிக்கவில்லை. அவர் பாரத ரத்னா விருது பெற்றவர். அவரையும் பாகிஸ்தானுக்கு அனுப்பி விட வேண்டுமா? என்று பேசியுள்ளார்.
இந்நிலையில், சையத் அலிஷா பாரத ரத்னா விருது பெற்றவர் என நக்மா குறிப்பிட்டமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (கு)

**JAAHED Jaffna Alagappa Academy for Higher Education**

**அழகப்பா பல்கலைக்கழகம்** காரைக்குடி, தமிழ்நாடு இந்தியா

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை நெறிகள் (UGC/IUA/4)

- தமிழ்மொழியில் உயர் பட்டஙகள்
- அங்கீகரிக்கப்பட்ட உயர்பட்டங்கள்
- குறைந்த செலவு
- நிபுணத்துவ விரிவுரையாளர்களின் கற்பித்தல்
- படிப்புக்கான கைநூல்கள்
- பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள்
- விரைவான பெறுபேறு

| Degree Courses | Master Degrees |
|---|---|
| BA (Tamil Lit) | M.com |
| BA (English) | M.com (Finance) |
| BA (History) | M.S.C (IT) |
| BA (Public Administration) | M.A (English) |
| B.Sc (Psychology) | M.A (History) |
| B.Sc (Mathematics) | M.Sc (Maths) |
| B.B.A (Administration) | M.A (Education) |
| B.C.A (Computer) | M.B.A (Education Management) |
| B.B.A (Banking) | M.A (Journalism) |
| B.com | |

- **Post Graduate Diploma Programmes**
- **P.G. Dip in Sports Management**
- **M.A Education = M.Ed**
- **2014 December இல் பரீட்சை எழுதலாம்**
  **விண்ணப்ப முடிவு திகதி 05.05.2014**
- **MBA Education Management**

கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் மற்றும் சேவைக்கால ஆலோசகர்களுக்கு பதவி உயர்வுகளுக்கு உதவும் கற்கைநெறி என ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.

- 2014 May இல் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்கள் பரீட்சை நேர அட்டவணையை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

**Prof.M.Sinnathamby**
(ஓய்வுநிலை பேராசிரியர்,
அழகப்பா பல்கலைக்கழக அங்கீகரிக்கப்பட்ட
கல்வியியல் நிபுணத்துவ வழிகாட்டுநர்)

**Mr.A.Panchalingam**
(Emeritus Principal)

**05.05.2014 இற்கு முன்பாக பதிவு செய்யுங்கள்**

தொடர்புகளுக்கு:
**P.BALAMUHUNTHAN**
(Co-ordinator Jaffna Alagappa Academy for Higher Education)
Mobile No : 077 386 7458

இல. ௨௦, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு.
(Smart Kids Building)
(சி/13510)
(7.6.3)

## மியன்மார் பெண்களின் கழுத்தில் 10 கிலோ எடை இரும்பு வளையங்கள்



ரங்கூன்,ஏப் 23
மியன்மார் நாட்டில் வசிக்கும் பழங்குடியினப் பெண்கள் தங்களது கழுத்தில் 10 கிலோ எடையுள்ள இரும்பு வளையங்களை மாட்டிக்கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

மியன்மாரின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கையா மாகாணத்துக்கு அருகேயுள்ள காயன் என்னும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த மக்கள் வசித்து வருகின்றனர். இங்கு வசிக்கும் பெண்கள் தங்களது கழுத்தில் சுமார் 10 கிலோ எடையுள்ள இரும்பு வளையங்களை மாட்டிக்கொள்ளும் வித்தியாசமான பழக்கத்தை கொண்டுள்ளனர்.

இது குறித்து அவர்கள் கூறுகையில், நாங்கள் சிறு வயதிலேயே இது போன்ற ஆபரணங்களை அணிவோம் என்றும் எங்களுக்கு இது பழக்கமாகி விட்டது எனவும் கூறியுள்ளனர். (கு)



தென் கொரியக் கப்பல் விபத்தில் உயிரிழந்தவர்களில் இதுவரை 100 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மீட்கப்படும் சடலங்கள் அரச மரியாதையுடன் எடுத்துச் செல்லப்படுகின்றன. (கு)

## மூன்று வயதான அக்காவின் துப்பாக்கிச் சூட்டில் தம்பி சாவு

நியூயோர்க்,ஏப் 23
மூன்று வயதான அக்காவின் துப்பாக்கிச் சூட்டில் தம்பி பரிதாபமாக உயிரிழந்தான். இந்தச் சம்பவம் அமெரிக்காவில் இடம் பெற்றுள்ளது.

அமெரிக்காவின் உத்தவில் கேகி பகுதியில் ஒரு வீட்டில் 3 வயது சிறுமி ஒருத்தி தனது 2 வயது தம்பியுடன் விளையாடிக் கொண்டிருந்தாள்.

பக்கத்து அறையில் அவர்களது தாயார் இருந்தார். அப்போது அந்தச் சிறுமி வீட்டில் இருந்த கைத்துப்பாக்கியை எடுத்து வந்தாள்.

அதைப் பார்த்ததும் உடன் இருந்த அவளது தம்பி அதைப் பறித்தான். இதனால் அவர்களுக்கு இடையே நடந்த போராட்டத்தில் சிறுமியின் கையில் இருந்த துப்பாக்கியில் இருந்து திடீரெனக் குண்டு பாய்ந்தது.

அந்தக் குண்டு சிறுவனின் உடலில் பாய்ந்து இரத்தம் கொட்டியது. இதற்கிடையே துப்பாக்கிச் சத்தம் கேட்டு ஓடிவந்த தாயார் குண்டடி பட்டு மயங்கி கிடந்த சிறுவனை வைத்தியசாலையில் சேர்த்தார். அங்கு அவனுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இருந்தும் அவன் பரிதாபமாக இறந்தான்.

இது குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இந்தச் சம்பவம் தற்செயலாக நடந்த விபத்து என வழக்கு பதிவு செய்துள்ளனர்.

அமெரிக்காவில் இந்த மாதத்தில் மட்டும் இது போன்று 4 சம்பவங்கள் நடந்துள்ளன. அதற்கு கேகி பகுதி ஷெரீப் மிக் பீற்றர்சன் வருத்தம் தெரிவித்துள்ளார். (கு)

## சிரியாவில் ஜீன்- 3 ஜனாதிபதித் தேர்தல்

டமஸ்கஸ்,ஏப் 23
சிரியாவில் எதிர்வரும் ஜீன் மாதம் 3ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசியக் கண்டத்தின் மேற்கு பகுதியில் உள்ள சிரியா நாட்டில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் தலைமையிலான ஆட்சி நடக்கிறது.

இவரது ஆட்சிக்கு எதிராக கடந்த 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கிய போராட்டம் இன்னும் முடியாமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அப்பாவி மக்களையும், போராட்டக்காரர்களையும் சிரியா அரசு கொன்று குவித்து வருகிறது.

அமெரிக்கா வற்புறுத்தியும், ஜனாதிபதி ஆசாத் பதவி விலகாததால் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் போராட்டக்காரர்களுக்கு ஆயுத உதவி அளித்து வருகின்றன.

இதற்கிடையே ரசாயன ஆயுதம் பயன்படுத்தியதாக சிரியா அரசு மீது கடந்த ஆண்டு புகார் எழுந்ததால், அந்நாட்டின் மீது நேட்டோ எனப்படும், அமெரிக்க ஆதரவு நாடுகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டன.

ஆனால் ரஷ்யா ஜனாதிபதி விளாடிமிர் புடின் தலையிட்டு ரசாயன ஆயுதங்களை அழிக்க உடன்பாட்டை ஏற்படுத்தினார்.

இந்நிலையில் ' எதிர்வரும் ஜீன் மாதம் 3ஆம் திகதி சிரியாவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என்றும், இதற்கான வேட்பு மனு தாக்கல் இம்மாதம் 22 முதல் தொடங்குவதாகவும், சிரியா நாடாளுமன்றச் சபாநாயகர் முகமது லகாம் அறிவித்துள்ளார். (கு)

## பாகிஸ்தானில் தாக்குதல்கள் 9 பேர் சாவு ; பலர் படுகாயம்

பாகிஸ்தானின் வடக்கு வசிரிஸ்தானில் நடந்த இருவேறு தாக்குதல்களில் 9 பேர் கொல்லப்பட்டதுடன், மேலும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சர்சடா மாவட்டத்தில் நடந்த முதல் சம்பவத்தில் ஒரு பொலிஸ் வானுக்கு அருகே நடந்த குண்டுத் தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டனர்.

பெஷாவருக்கு அருகே ஆயுத பாணிகள் வழி மறித்துத் தாக்கியதில், குறைந்தபட்சம் 5 பொலிஸாரும், ஒரு அம்புலன்ஸ் சாரதியும் கொல்லப் பட்டனர். (கு)

## குற்றமே செய்யவில்லை ஆனால் 25 ஆண்டு சிறை

### அமெரிக்காவில் ஒருவருக்கு நேர்ந்த கதி

நியூயோர்க்,ஏப் 23
அமெரிக்காவில் செய்யாத குற்றத்திற்காக நபர் ஒருவர் 25 ஆண்டுகள் சிறையில் இருந்தது பரிதாபத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் புரூக்ளின் நகரில்கடந்த1989ஆம்ஆண்டு நடந்த கொலை தொடர்பாக டெரிக் டீக்கன் என்பவர் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்.

சுமார் 25 ஆண்டுகளைச் சிறைக் கம்பிகளுக்குப் பின் கழித்த அவர், நிரபராதி என்று சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் விடுவிக்கப்பட்டார்.

சிறைத்தண்டனையால் பெரும் மன உளைச்சலுக்கு ஆளான டீக்கன், செய்யாத குற்றத்துக்காகத் தனக்கு தண்டனை வழங்கியதற்காக இழப்பீடு கேட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

மேலும், சிறையில் இருந்த ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூபா 6 கோடி வீதம் மொத்தம் ரூபா 150 கோடி நஷ்டஈடாக வழங்க வேண்டும் என்று மனுத்தாக்கல் செய்துள்ளார். (கு)

## மனைவியின் நடமாட்டத்தைக் கவனிக்க வயிற்றுள் கருவி பொருத்திய கணவன்

லாகூர்,ஏப் 23
மனைவியின் நடமாட்டத்தைக் கண்காணிப்பதற்காக அவரது வயிற்றுக்குள் கருவி பொருத்திய கணவன் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள லாகூர் நகரில் உள்ள காசியாபாத் பகுதியைச் சேர்ந்த ஓர் இளம் பெண் தனது கணவருக்கு எதிராக நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில் , எனக்கும் முகம்மது பயாஸ் என்பவருக்கும் 6 ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் நடந்தது. ஒரு நாள் இரவு நீதிபதி அக்ரம் ஆசாத் என்பவருடன் குடி போதையில் வந்த என் கணவர் என்னை அந்த நீதிபதியுடன் உல்லாசமாக இருக்கும்படி வற்புறுத்தினார்.

இதற்கு நான் மறுத்ததால், என் கணவரின் ஒத்துழைப்புடன் நீதிபதி என்னை வல்லுறவு புரிந்தார். இந்தச் சம்பவத்துக்குப் பிறகு பல ஆண்களை வீட்டுக்கு அழைத்து வந்த அவர், தன் கண்முன்னால் அவர்களால் நான் வன்புணர்வுக்கு ஆளாவதை வேடிக்கை பார்ப்பதில் இன்பம் அடைந்தார்.

இப்படி, பலருக்கு என்னை அவர் விருந்தாக்கியதால், வெறுத்துப் போன நான் அவரை விட்டுப் பிரிந்து தாய் வீட்டுக்கு வந்து விட்டேன். ஒரு நாள் சமாதானம் பேசுவதாகச் சிலருடன் வந்த அவர் என் முகத்தில் ஒருவித நச்சுப் புகையை பாய்ச்சினார். நான் மூர்ச்சையாகி விட்டேன்.

கண் விழித்துப் பார்த்தபோது, ஒரு தனியார் மருத்துவமனைக் கட்டிலில் கிடந்தேன். அடி வயிற்றில் தையல்கள் போடப்பட்டிருந்தது. கடுமையான வலியும், வேதனையும் ஏற்பட்டது.

பின்னர் எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்ததில் வாகனாங்கள் எங்கிருக்கிறது? என்பதை கண்டுபிடிக்கும் ட்ராக்கர் எனப்படும் கண்காணிப்பு கருவியை என் வயிற்றுக்குள் பொருத்தியுள்ளது தெரியவந்தது.

நான் எங்கே இருக்கிறேன்? என்ன செய்கிறேன்? என்று கண்காணிப்பதற்காக இத்தகைய கீழ்த்தரமான காரியத்தில் ஈடுபட்ட முகம்மது பயாஸ் மீது நடவடிக்கை எடுக்கும்படி உள்ளூர் பொலிஸாரிடம் முறைப்பாடு அளித்தேன். ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறியுள்ளார்.

இந்த மனுவை விசாரித்த காசியாபாத் மாவட்ட மேலதிக நீதிபதி, பாதிக்கப்பட்ட பெண்ணின் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்தி நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யும்படி உத்தரவிட்டுள்ளார். (கு)

## பிரார்த்தனையை கைவிட்டு ஒபாமாவை காண ஓடிய மக்கள்

ஈஸ்ரர் பண்டிகை சிறப்பு வழிபாடு நடந்து கொண்டிருந்த போது, ஒபாமாவை பார்க்க மக்கள் போட்டி போட்டதால் பிரார்த்தனை பாதிக்கப்பட்டுள்ளது.

இயேசு உயிர்த்தெழுந்த தினமாக ஈஸ்ரர் பண்டிகையை கிறிஸ்தவர்கள் சிறப்பாக கொண்டாடினார்கள்.

அன்றைய தினம் அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனிலுள்ள 19ஆவது தெரு ஆலயத்தில் சிறப்பு பிரார்த்தனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் பங்கேற்க அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, அவரது மனைவி மிச்செல், மற்றும் இரு மகள்களும் தேவாலயம் சென்றனர்.

ஜனாதிபதியை பார்த்த மகிழ்ச்சியில் பிரார்த்தனையை அப்படியே பாதியில் விட்டுவிட்டு தேவாலயத்தின் உள்ளே இருந்த பொதுமக்கள் வெளியே ஓடிவந்தனர். அத்துடன் ஒபாமாவுடன் புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டனர்.

ஒருவழியாக ஒபாமா குடும்பம் ஆலயத்துக்குள் நுழைந்த பிறகே, மீண்டும் பிரார்த்



தனை தொடங்கியுள்ளது.

இந்தச் சூழல் தேவாலயத்தின் போதகர் டெர்ரிக் ஹர்கின்சுக்கு தர்மசங்கடமாகி விட்டதாம்.

அதேசமயம், இந்தத் தேவாலயத்தில் இவ்வளவு கூட்டம் இருந்ததே எனக்கு இப்போது தான் தெரிகிறது என்று கூறியபடி பிரார்த்தனையை தொடர்ந்துள்ளார் அவர். (கு)

## ஆங்கில ஆசிரியர் பதவி வெற்றிடம்

**Urumpirai Kids' Park/Thirunelvely Smart Kids (Preschools)**

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
உரிய ஆவணங்களுடன் 28.04.2014
முற்பகல் 11.00 மணிக்கு சமுகம் தரவும்.

**உரும்பிராய் கிட்ஸ் பார்க்**
ஞானவைரவர் வீதி, உரும்பிராய்.
077 656 5258

(47096)
(7.6.3)

# திறந்த பல்கலைக்கழகத்தால் விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.23

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் பல்வேறு கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக அதன் யாழ். பிராந்திய நிலையத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சமூக விஞ்ஞானத்தில் கலைமாணி சான்றிதழ் கற்கைநெறி, இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா, அபிவிருத்தி மற்றும் பொதுக் கொள்கையில் முதுமாணி ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை யாழ். பிராந்திய நிலையத்திலும் கிளிநொச்சியில் அமைந்துள்ள கற்கை நிலையத்திலும் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பட்டமேற்கல்விடிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்துக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன. பொருத்தமானவர்கள் விண்ணப்பப் படிவங்களை அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## பொது மக்களுக்கான அறிவித்தல்

**பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்**

(08.04.2014 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. அமானா பாங்க் லிமிடெட்
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. ஹபிப் பாங்க் லிமிடெட்
10. கார்கில்ஸ் பாங்க் லிமிடெட்
11. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
12. சம்பத் பாங்க் பிஎல்சி
13. சிற்றி பாங்க் என்ஏ
14. செலான் பாங்க் பிஎல்சி
15. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
16. டொயிச் பாங்க் ஏஜி
17. த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
18. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
19. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
20. பப்ளிக் பாங்க் பேர்காட்
21. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
22. மக்கள் வங்கி
23. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
24. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்
25. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இந்திரா பினான்ஸ் லிமிடெட்
6. ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிடெட்
7. எம்சிஎஸ்எல் பினான்ஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்
8. எல் பீ பினான்ஸ் பிஎல்சி
9. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
10. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
11. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
12. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
13. ஓரியன்ட் பினான்ஸ் பிஎல்சி
14. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
15. கப்பிட்டல் எலையன்ஸ் பினான்ஸ் பிஎல்சி
16. கொமர்ஷல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
17. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
18. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
19. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
20. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
21. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
22. சியபத பினான்ஸ் லிமிடெட்
23. சிற்றிசன்ஸ் டிவலொப்மென்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
24. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி*
25. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
27. சொவ்றலொயிக் பினான்ஸ் பிஎல்சி
28. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
29. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
30. த ஸ்ரான்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட்
31. தேசோதய டெவலப்மென்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
32. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
33. ப்ரெக் லங்கா பினான்ஸ் பிஎல்சி
34. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
35. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
36. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
37. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
38. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
39. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
40. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
41. மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிடெட்
42. யூ பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
43. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
44. ரிச்சர்ட் பீரிஸ் ஆர்பிகோ பினான்ஸ் லிமிடெட்
45. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
46. வெலிபல பினான்ஸ் பிஎல்சி
47. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி
48. ஜோர்ஜ் ஸ்டுவர்ட் பினான்ஸ் பிஎல்சி

* இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவரினால் முகாமைத்துவம் செய்யப்படுவதுடன் மீள்கட்டமைப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. அதே வேளை, வைப்புக்களைத் திரட்டுதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

### நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

➢ மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

➢ மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

**இலங்கை மத்திய வங்கி**

வங்கிகள் - தொ.பேசி.: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk
நிதிக் கம்பனிகள் - தொ.பேசி.: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

C/13703

## Ecosteem Solar Solution

உங்கள் மின்கட்டண சுமையை நீக்க
சிறந்த தொழில்நுட்பத்திலான
சூரிய மின்சக்தி சாதனம்
இலங்கை மின்சார சபையுடன் இணைந்த
Solar Net Metering System



மேலதிக விவரங்களுக்கு
071 454 6810/071 454 6814
இல.127, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.
ECOSTEEM PVT.LTD.
Renewable Energy Service Provider
அலுவலகம் : 021 222 7689
இணையம் : www.ecosteem.lk

## அறிவித்தல்

**N.Rajathevan JP-MMC-JMC**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள N.இராஜதேவன் எமது நிறுவனத்தில் பொதுமுகாமையாளராகப் பணி புரிகிறார். இவர் மீது வியாபார, வருமான குழறுபடிகள் மற்றும் பணக் கையாடல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தற்போது கணக்காய்வுகள் மற்றும் உள்ளக விசாரணைகள் நடைபெறு கின்றன. இதன் காரணமாக இவரை இவரது பதவியிலிருந்து 28.12.2013 ஆம் நாள் முதல் இடை நிறுத்தியுள்ளோம்.

இந்த உண்மை நிலையைப் பொதுமக்களிற்கும் வர்த்தக சமூகத்திற்கும் பிழையான செய்தி கூறி குழப்பவே இவர் 07.03.2014ஆம் நாள் பொது அறிவித்தல் என்ற தலையங்கத்தில் உதயன் பத்திரிகையில் விளம்பரம் ஒன்றைப் பிரசுரித்திருந்தார். அது முற்றிலும் தவறானது. குற்ற விசாரணை நிமித்தம் இடைநிறுத்தப்பட்ட ஒருவர் தன்னிச்சையான வேலையிலிருந்து இராஜினாமா செய்ய முடியாது.

எமது நிறுவனங்களுடன் எத்தேவைகள் இருப்பினும் கீழ்க் காணப்படும் விலாசத்துடனோ அல்லது தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளுமாறும் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளும் அதேவேளை சகல கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வியாபார தொடர்புகளை எம்முடன் மட்டும் வைத்துக் கொள்ளவும்.

T.P : +94(0)777360353 E.mail : tysunda@gmail.com

தி.யோ.சுந்தரேசன்
Yarl Pardy
No.51, Amman Road,
Nallur, Jaffna, Sri Lanka.

Yarlpanam Industries
5th Floor, Veerasingam Hall
K.K.S. Road,
Jaffna, Sri Lanka.

(47103)
(7.6.3)

- பனங்காட்டு பொதுபலசேனா
- எப்போது வந்தது சேலை?
- பெண்களின் அழகைக் கெடுக்கிறதா பேஸ்புக்
- விண்ணில் இருந்து புகைப்படச் சாதனை

**வேலிக்கு வைத்த முள்**

.....இப்போது வேலிக்கு வைத்த முள்ளு காலுக்குள் ஆழமாக ஏறிக்கொண்டிருக்கிறது. வெகுவிரைவில் புண்ணாகிப் புரையோடும் நிலை ஏற்படலாம். அதேவேளையில் சர்வதேச விசாரணையின் முடிவுகளும் இலங்கைக்குப் பாதகமான நிலைமைகளை உருவாக்கலாம். இலங்கை அரசு ஆயுதப் போராட்டத்தை முடித்த பின்பும் கூட தமிழ் மக்கள் மீது நடத்தும் போர் பேரினவாதத்தை நோக்கித் திரும்பும் நாள்....

வழமையான பல்சுவை அம்சங்களுடன்
**இந்த வார இதழ்**




C/13507

# யாழ்ப்பாணத்தில் மலினப்படுத்தப்பட்டுள்ள நிலையில் ஜனநாயகத் தூணான ஊடகத்துறை

## வலி.மேற்குப் பிரதேச சபை தவிசாளர் கண்டனம்

யாழ்ப்பாணம்.ஏப்.23ங

ஜனநாயகத்தின் தூண்களாகக் கருதப்படும் ஊடகத்துறை யாழ்ப்பாணத்தில்; மலினப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாகவே ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்ட வண்ணம் உள்ளனர். இத்தகைய செயலை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி.நாகரஞ்சினி ஐங்கரன் தெரிவித்துள்ளார். அண்மையில் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளரான சிவஞானம் செல்வதீபன் இனம் தெரியாதவர்களால் கடுமையாக தாக்கப்பட்டமை தொடர்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்:

ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றாகக் கருதப்படும் ஊடகத்துறை யாழ்ப்பாணத்தில் மலினப்படுத்தப்படுவது மிக கேவலமான ஒன்றாகவே உள்ளது. இத்தகைய செயற்பாடுகள் மக்கள் ஜனநாயகத்தன்மையில் கொண்டுள்ள மிகுதி நம்பிக்கையையும் இழக்கச் செய்யும். யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் மீதான தாக்குதல்களும் அச்சுறுத்தல்களும் வழமையான ஒன்றாகவே உள்ளது. இந்தச் செயற்பாடுகளின் பின் இனம் தெரியாத நபர்கள் என்பதும் வழமையான ஒன்றாகும். இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதன் ஊடாக ஊடகம் சார்ந்தவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். இதற்கு பொறுப்பு வாய்ந்தவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். என்றார். (வ-14)

# சாவகச்சேரி நகரசபையின் பொதுநூலகத்துக்கு நிழல் பிரதி வழங்கும் நிகழ்வு

லண்டனில் இயங்கும் தென்மராட்சி அபிவிருத்தி நிலையத்தினர் சாவகச்சேரி நகர சபையின் பொது நூலகத்துக்கு நிழல் பிரதி இயந்திரத்தை வழங்கும் நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு சாவகச்சேரி நகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

லண்டனிலிருந்து வருகை தந்துள்ள இரத்தினம் ரவீந்திரன் என்பவர் போட்டோப் பிரதி இயந்திரத்தை நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையிடம் கையளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை இந்த நிகழ்வில் சாவகச்சேரி எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)


BAJAJ RE
World's No.1

20 விசேடம்சங்களுடன்

## புரட்சிக்குரிய மாற்றத்தை கொண்டுவந்த
## பஜாஜ் RE
## குடும்ப வாகனம்

உள்ளூரில் பொருத்தப்பட்ட அம்சங்கள் பலவற்றுடன்

## பஜாஜ் RESP

எனும் நாமத்தில்...





*சன் வைசர் மற்றும் பெரிதான பக்க கண்ணாடி



*ஜிப் துணியினால் தைக்கப்பட்ட (வெப்பத்தை குறைக்க கட் சொரிஜுடன்) பிறபக்க கண்ணாடியுடனான கவர்.



*அழகிய வேலைப்பாடுடைய மற்றும் நீண்ட காலம் பாவிக்ககூடிய பக்கத்திரை



*மிக வசதியான ஆசனம் மற்றும் அழகிய வடிவமைப்பு




*மனம் கவரும் வீல் கப் மற்றும் மட் கவர்

விலை ரூ 454,875/-

*மேலுள்ள அனைத்து புதிய அங்கங்களும் உள்ளூரில் பொருத்தப்பட்டவை.

உடனடி அழைப்புகளுக்கு : 0772 981 050, 0772 981 051, 0773 599 977

DPMC
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம் PB270
75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com

tradlanka

# பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபாவின் ஆராதனை மஹோற்சவம்

வைத்திய கலாநிதி இ.கணேசமூர்த்தி,
சத்திய சாயி சேவா நிறுவனம், வடபிராந்தியம்.

பிரபஞ்சத்தைப் படைத்தவன் பரபிரம்ம ஆகிய மகா சக்தியேயாகும். பரபிரம்மம் தன்னை நேசிக்க யாருமில்லை. தான் நேசிக்க ஏதுமில்லை என்ற காரணத்தினால் தன்னைப் பல்வேறாகப் பிரித்து இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தது என்று சத்தியசாயி பாபாவே கூறியுள்ளார். படைப்புகள் அனைத்திலும் மானிடப் பிறவி மிகவும் அரிதானதும் தனித்துவமானதுமாகும். ஏனைய படைப்புகள் இறைவனாலே வகுக்கப்பட்டபடியே இயங்கி மறைகின்றன. மனிதனுக்கு மாத்திரம் ஓரளவு சதந்திரமும் கொடுத்து தன்னைப் பற்றி அறியும் ஆற்றலையும் கொடுத்துள்ளார். அதாவது மனம், புத்தி, விழிப்புணர்வு, மாயா என்பவற்றை மனிதனுக்குக் கொடுத்துள்ளார். மனிதனே மாயா சத்தியினால் கட்டுண்டு ஆண்டவனில் இருந்து பிரிந்து போகின்றான். இதனால் அவன் பிறப்பு, இறப்பு என்ற சுழற்சியில் அகப்பட்டு துவைத நிலையில் இன்பம், துன்பம் ஆகிய இரண்டையும் அனுபவிக்கின்றான். தனது தர்மத்திலிருந்து வழுகிப் போகின்றான். சிலர் ஆண்டவனில் நம்பிக்கை வைத்து அவரின் வழியே வாழ்ந்து அவரின் அருளின் மூலம் பழைய நிலையை அடைகின்றார்கள்.

படைத்தவன் மானிடத்தை உய்விக்கக் காலம், தேவை என்பவற்றைப் பொறுத்து பல வழிகளில் வழிகாட்டி அருள் புரிகின்றார். சிலவேளைகளில் ஓர் உருவத்தையே தற்காலிகமாக எடுத்து அருள் புரிகிறார். உதாரணமாக: பன்றிக்குப்பால் கொடுத்தது. திருஞான சம்பந்தருக்கு அம்மை அப்பனாக உருவெடுத்துப் பால் கொடுத்தது.

பக்தர்களின் உருவமெடுத்து அவர்களால் அவர்களின் வேலையைச் செய்ய முடியாத போது, அவர்களின் வேலையைச் செய்தது. (மீரா்பாய், சாயி அடியார்கள், பிட்டுக்கு மண் சுமந்தது)

பக்தர்களைப் பாதுகாப்பதற்காக நண்பர்களின் உருவமெடுத்துள்ளார். (சாயி பாபா)

சில வேளைகளில் நாயாகவும், பிச்சைக்காரனாகவும் உருவெடுத்துள்ளார். (ஷீரடி சாயிபாபா)

தீவிரமாக நீண்ட காலத்துக்கு தனது பணியைச் செய்வதற்காக தூதர்களை அனுப்பியுள்ளார். (இயேசு பிரான், புத்த பெருமான், முகமது நபிகள் நாயகம்)

நிலைமை மிகவும் மோசமாகிவிட்டால் தானே மனித உருவமெடுத்துப் பல வருடங்கள் வழிகாட்டி மனிதனை உய்விக்கின்றார். பரபிரம்ம மனித உருவில் உலகில் உதிப்பதையே அவதாரம் என்று சொல்கின்றோம். உதாரணம் (இராமர், கிருஷ்ணர்) சிலர் விஷ்ணுதான் அவதாரம் எடுப்பதென்றும் சிவன் அவதாரம் எடுப்பதில்லையென்றும் வேறுபட்டுக் கொள்கிறார்கள். பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூன்றும்,




ஒரே பரபிரம்மம்தான் என்ற கோட்பாட்டை மறந்துவிடக்கூடாது. தற்காலத்தில் தர்மம் மிகவும் தாழ்ந்த நிலையிலிருப்பதால் சாயி அவதாரம் நிகழ்ந்துள்ளது. சாயி அவதாரம் என்றால் ஒன்றன் பின் ஒன்றாக மூன்று அவதாரங்கள் நிகழ்வதையே குறிக்கின்றது. மனிதரின் போக்கைத் திருப்ப 30 வருடங்கள் மட்டில் தேவையென்று ஸ்ரீசத்தியசாயி பாபா கூறியுள்ளார். ஷீரடி சாயி அவதாரம் நிகழ்ந்து முடிந்து விட்டது (18-1918), சத்தியசாயி பாபா அவதாரமும் நிகழ்ந்து முடிந்து விட்டது (1926-2011) இனி பிரேம சாயி அவதாரம் நிகழப் போகின்றது. ஷீரடி சாயி பாபா சிவனின் அவதாரமென்றும், சத்திய சாயி பாபா சிவசக்தி அவதாரமென்றும், பிரேமசாயி சக்தி அவதார என்றும் பிரகடனம் செய்துள்ளார். சத்திய சாயி பாபா 14 ஆவது வயதில் சொந்த பந்தங்களைத் துறந்து பக்தர்களுக்கு வழிகாட்டத் தொடங்கினார். சுமார் 70 வருடங்களாக போதனைகள், அற்புதங்கள், நூல்கள், பெரிய சேவைத் திட்டங்கள், கல்வி முறை ஆகியவற்றுடன் எப்படி ஆத்மாபிமானத்துடன் வாழ வேண்டுமென்று வழிகாட்டியுள்ளார். மேலும் தனது பெயரைக் கொண்ட "சத்திய சாயி சேவா நிறுவனம்" ஒன்றையும் நிறுவி அதற்குரிய கோட்பாடுகள் அனைத்தையும் வரைந்துள்ளார். இந்த நிறுவனம் உலகளாவிய ரீதியில் பரந்து வளர்ந்துள்ளது. அவரின் அடிப்படைத் தத்துவம், 'எல்லோரும் தெய்வீக மானவர்கள் உள்ளுறையும் தெய்வீகத்தை, வெளிக் கொணரவே வந்துள்ளேன்" என்று கூறியுள்ளார். தெய்வீகம் என்றால் 5 அடிப்படை மனித மேம்பாடுகளையே (சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை) குறிக்கும். வெளிக் கொணர்வது என்றால் உணர்வும், எண்ணம், சொல், செயல் ஆகியவற்றினூடாக வெளிப்படுவதையே குறிக்கும். தனி மனிதன் உன்னதமாக மாறினால் உலகம் தன்பாட்டிலே மாறும் என்று கூறியுள்ளார். எல்லா மதங்களும் உன்னதமானவை ஆகும். எல்லாம் ஒன்று என்ற அத்வைத தத்துவத்தையே போதித்தார். உள்ளிருக்கும் காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாத்சரியம் என்கிற உள் எதிரிகளை வலியிழக்கச் செய்ய வேண்டும். உருவம் எடுத்தால் ஒரு நாளைக்கு அது மறையத் தான் நேரிடும். சத்தியசாயி பாபாவும் தான் உண்டாக்கிய அதி நவீன வைத்தியசாலையிலேயே 24.04.2011 அன்று தனது பூதவுடலை நீத்தார். உருவ நிலையிலிருந்து அருவ நிலைக்குத்திரும்புவதையே மகா சமாதி நிகழ்வு என்கின்றோம். பலர் இந்த நிகழ்வை ஏற்க முடியாது மிகவும் துன்பப்பட்டார்கள். சுவாமி அவர்களுக்கு கனவு மூலமும், விபூதியினால் எழுதியும், உள்ளொலி மூலமும்" தான் எங்கும் போகவில்லை. எங்கும் இருக்கின்றேன். நான் கடவுள் என்பதில் நம்பிக்கை கொண்டால், துன்பப்படுவதில் நியாயமில்லை" என்று வலியுறுத்தியுள்ளார். இப்போது இந்த நிகழ்வை, ஆராதனை மஹோற்சவம் என்று பக்தர்கள் நன்றி கூறும் தீவிர சாதனை நாளாகக் கொண்டாடுகிறார்கள். இப்பொழுது விபூதி, குங்குமம் சொரிந்தும் பல படங்களில் தேனாகச் சொரிந்தும் தன் தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்துகின்றார்.

சில ஆன்மிக மகான்கள் உடலுடனேயே ஆண்டவனுடன் இரண்டறக் கலந்துள்ளார்கள். இராமபிரான் சரயு நதியில் சங்கமமானார். கிருஷ்ண பகவான் அம்பு ஒன்றினால் காயப்பட்டுப் பின்னர் அந்த நகரமே நீரில் மூழ்கியது. இயேசு பிரான் சிலுவையில் உயிரைவிட்டு பின்பு உயிர்த்தெழுந்துள்ளார். பக்தை மீராபாய், திருஞான சம்பந்தர், சுந்தரமூர்த்தி, மாணிக்க வாசகர் ஆகிய நாயன்மார் உடலுடனேயே இறைவனுடன் இரண்டறக் கலந்துள்ளார்கள். அருவம் உருவமாய் வந்து எங்களுக்கெல்லாம் வழிகாட்டி அருளைப் பாவித்ததற்காக அதற்கு எம் இதய பூர்வமான அன்பினைச் செலுத்துவோமாக.

*24.04.2011 அன்று மகா சமாதியடைந்த நிகழ்வையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.*



## தண்ணீர் தேடி அலைகின்றன கால்நடைகள்



கோப்புப் படம்

முல்லைத்தீவு, ஏப்.23
முல்லைத்தீவு, மல்லாவி பகுதியில் தற்போது நிலவி வரும் கடும் வறட்சியால் மல்லாவிக் குளத்தில் நீர் வற்றிக் காணப்படுவதுடன் கால்நடைகள் தண்ணீர்தேடிஅலையும்அவல நிலையும் ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள மல்லாவிக் குளம் புதிதாக புனரமைக்கப்பட்டு விவசாயிகளிடம் கடந்த ஆண்டு கையளிக்கப்பட்டது. எனினும் தற்போது நிலவி வரும் கடும் வறட்சியால் 10 அடி தண்ணீர் கொள்ளளவுள்ள குளம் ஓர் அங்குல தண்ணீர் கூட இன்றி காணப்படுகின்றது.

அதனால் அங்குள்ள கால்நடைகள் குடிதண்ணீர் இன்றி பல்வேறு இடங்களுக்கும் அலைந்து திரிகின்றன என்று மக்கள் கூறுகின்றனர். மல்லாவி பிரதேசத்திலுள்ள கிணறுகளில் நீர்மட்டம் குறைவடைந்து நிலக்கீழ் நீர் அற்றுப் போகும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் தெரிவித்தனர். (ச-55)

# அபிவிருத்திகள் இன்றி முரசுமோட்டை கிராமம்

*மீள்குடியேறி 4 வருடங்கள் கடந்தும் அதே நிலைதான்*

கிளிநொச்சி, ஏப்.23
கிளிநொச்சி, முரசுமோட்டை கிராமத்தில் மக்கள் மீள்குடியேறி நான்கு வருடங்கள் நிறைவடைந்த போதும், எந்த விதமான அபிவிருத்திப் பணிகளும் இன்றி இப்பகுதி புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று கிராம மக்கள் விசனம் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள முரசுமோட்டை கிராம அலுவலர் பிரிவில் தற்போது சுமார் 300 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்தநிலையில் முரசுமோட்டை, ஏ-35 வீதியின் செல்லையா கடைச்சந்தியில் இருந்து ஐயன் கோவிலடி கிராமம்வரை செல்லும் வீதி மாத்திரமே புனரமைக்கப்பட்டுள்ளது.

ஐயன்கோவிலடிக் கிராமத்துக்கான மரப்பாலம் புனரமைக்கப்படாததால் ஆபத்தான நிலையில் மக்கள் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். அத்தோடு பருவ மழை காலங்களில் பாலத்தில் பயணிக்க முடியாத நிலையும் காணப்படுகின்றது.

ஏனைய கிராமங்களுக்கான எந்த வீதிகளும் புனரமைக்கப்படாததால் பயணம் செய்ய முடியாத அளவுக்கு வீதிகள் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன என்று மக்கள் கூறுகின்றனர்.

இந்தக் கிராமத்துக் கான மின்சார விநியோகமும் இது வரை வழங்கப்பட வில்லை. அதனால் இந்தப் பிரதேசத்தில் கல்விகற்கும் மாணவர்கள் பல சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர் என்று பெற்றோர்கள் தெரிவித்தனர்.

கடந்த நான்கு வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் புறக்கணிக்கப்பட்ட பிரதேசங்களாக எமது கிராமங்கள் காணப்படுகின்றன என்று இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர். (ச-55)

# நிலக்கடலைச் செய்கை முல்லைத்தீவில் பாதிப்பு

*கடும் வறட்சியே காரணம்*

முல்லைத்தீவு, ஏப்.23
முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த முறை மேற்கொள்ளப்பட்ட நிலக்கடலைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் நிலக்கடலைச் செய்கைக்கு சிறப்பு வாய்ந்த பகுதியாகும்.

நிலக்கடலைச் செய்கை அதிக இலாபம் தரும் என்பதால் உதவி அமைப்புகளும் நிலக்கடலைச் செய்கையை ஊக்குவித்து வந்துள்ளன. அதனால் இம்முறை முல்லைத்தீவில் அதிகளவு நிலப்பரப்பில் நிலக் கடலைச் செய்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் தற்போது நிலவும் கடும் வறட்சியால் குளங்களின் நீர் மட்டம் முற்றாக வற்றியுள்ளது.



நிலக்கடலை

ஆனால் முல்லைத்தீவு மாவட்ட நிலக் கடலைச் செய்கையாளர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர் கொண்டுவருகின்றனர். (ச-18)

# சிவில் பாதுகாப்புக் குழு கூட்டத்தை நடத்துங்கள்

*பாதுகாப்பு குழுவின் உறுப்பினர் வேண்டுகோள்*

மன்னார்,ஏப்.23
மன்னார் நகரப் பகுதியில் அமைந்திருக்கும் பனங்கட்டுக் கொட்டு கிழக்குப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டத்தை நடத்த வேண்டும். இந்தக் கூட்டம் நீண்ட நாள்களாக நடைபெறவில்லை என்று பனங்கட்டு கொட்டு கிழக்குப் பகுதி பாதுகாப்பு குழுவின் உறுப்பினர் எஸ்.ஜே. நிக்சன் தெரிவித்தார்.



நிக்சன்

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் மாவட்டத்தில் பல சட்டவிரோத செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு குறித்த சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் கூட்டப்பட்டு கலந்துரையாடப்பட்டு குற்றச் செயல்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு, சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர்களின் கல்வி வளர்ச்சி உள்ளிட்ட பல சமூக பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுக்கப்பட வேண்டும். அதன் மூலம் எதிர்கால இளம் சந்ததியினரை சரியான முறையில் வழிநடத்தி சிறந்த சந்ததியினராக உருவாக்கமுடியும்.

எனவே சிவில்பாதுகாப்புகுழுக் கூட்டத்தை விரைவாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்-என்றார். (ச)



22 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படும் மல்லாவி பொதுச் சந்தை

# ரூ.22 மில்லியன் செலவில் நவீன சந்தைக் கட்டடம்

முல்லைத்தீவு, ஏப்.23
முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச சபையின் கீழ் உள்ள மல்லாவி பொதுச்சந்தையில் 22 மில்லியன் ரூபா செலவில் நவீன கடைத்தொகுதி அமைக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பிரதான சந்தையாகக் கருதப்படும் மல்லாவி பொதுச் சந்தைக் கட்டடம் கடந்த கால போரால் அழிவடைந்திருந்தது. தற்போது துணுக்காய் பிரதேசத்தில் இடம்பெற்ற மீள் குடியேற்றத்தின் பின்னர் இந்தச் சந்தைத் தொகுதிகட்டம்கட்டமாகஅமைக்கப்பட்டுவருகின்றது. 2013ஆம் ஆண்டு 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் 22 மில்லியன் ரூபா செலவில் குறித்த சந்தையில் நவீன கடைத் தொகுதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. (ச-55)

# இறங்குதுறை அமைப்பதாக உறுதியளித்தும் பயனில்லை

*கடற்றொழிலாளர்கள் கவலை*

கிளிநொச்சி, ஏப்.23
கிளிநொச்சி, நாச்சிக்குடா அன்னை வேளாங்கண்ணி கிராமத்தின் கரையோரத்தில் இறங்குதுறையொன்றை அமைத்துத் தருவதாக உறுதிமொழி வழங்கப்பட்டபோதிலும், இன்று வரை அதனை எவரும் அமைத்துத் தரவில்லை. இவ்வாறு இந்தப் பகுதி கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவித்தனர்.

கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள நாச்சிக்குடா அன்னை வேளாங்கண்ணி கிராமத்தில் தற்போது 147 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்த நிலையில் அன்னை வேளாங்கண்ணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் சுமார் 200 வரையான கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தத் தொழிலாளர்கள் தமது கடற்றொழில்படகுகளை கரைக்குக் கொண்டுவரக் கூடிய வகையில் இறங்குதுறையொன்று இல்லாத்தால் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அதனையடுத்து கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து இந்தப் பகுதியில் இறங்குதுறை ஒன்றை அமைத்துத் தருமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். எனினும், அதனை அமைத்துத் தருவதாகப் பல அரசசார்பற்ற அமைப்புகள் உறுதி வழங்கிய போதிலும், இதுவரை எவரும் அதனை அமைத்துத்தரவில்லை என்று கடற்றொழிலாளர் கூறினர். (ச-55)

# வவுனியா தொடர் மாடியில் வெளவால்களால் தொல்லை

வவுனியா,ஏப்.23
வவுனியா நகரப் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக தொடர்மாடியில் வெளவால்களின் தொல்லை அதிகரித்துவருகிறதுஎன்று வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

வவுனியா நகரில் நகர சபையால் அமைக்கப்பட்டுள்ள வர்த்தக தொடர்மாடியில் வெளவால்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

வெளவால்களின் தொல்லை அதிகரித்துள்ளதால் தொடர் மாடியில் உள்ள உணவகங்கள், புடைவை நிலையங்கள், தையல் நிலையங்கள், கணினி நிலையங்கள், புகைப்பட கலையகங்கள் போன்றவற்றில் புகுந்து வெளவால்கள் அங்குள்ள பொருள்களைச் சேதப்படுத்தி வருகின்றன என்று வர்த்தகர்கள்கூறுகின்றனர்.

> “ நகர சபையில் அமைக்கப்பட்டுள்ள தொடர்மாடியில் வெளவால்களால் தொல்லை.

எனவே வெளவால்களை அகற்றுவதற்கு நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுவர்த்தகர்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-421)



தொல்லை கொடுக்கும் வெளவால்கள்

# தமிழரின் கலை, கலாசாரத்தில் என்றுமே தனித்துவம் உண்டு

## வேற்று இனத்தவரின் ஆதிக்கம் இடம்பெறக்கூடாது என்கிறது கூட்டமைப்பு

எருவில்,ஏப்.23
தமிழர்களுக்குரிய கலை, கலாசார விழுமியங்களில் வேற்று இனங்களின் கலை, கலாசாரங்கள் ஆதிக்கம் செலுத்தக்கூடாது என்பதில் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா .அரியநேத்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்ட மண்முனை பாலத் திறப்பு விழாவின்போது ஜனாதிபதி, மற்றும் பிரதி அமைச்சர்கள் கூறிய கருத்துகள் தொடர்பாக விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

> இந்தப் பாலம் திறக்கப்பட்ட தன் மூலம் படுவான் கரை பிரதேச மக்களின் கலாசாரங் களில் வேற்று இனத்தவரின் ஆதிக்கம் செலுத் தப்படக் கூடாது

இந்தப் பாலமானது படுவான் கரையையும் எழுவான்கரையையும் இணைக்கும் பாலமே தவிர மட்டக்களப்பையும், அம்பாறையையும் இணைக்கும் பாலம் அல்ல. ஆனால் அங்கு அம்பாறையையும், மட்டக்களப்பு நகரையும் இணைக்கும் பாலம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

இது முற்றிலும் தவறானதொரு விடயமாகும். படுவான்கரையையும் எழுவான் கரையையும் இணைக்கும் பாலங்கள் பல இருக்கின்றன. அதில் ஒன்றாகவே இந்தப் பாலமும் அமைந்திருக்கின்றது.

அம்பாறையையும் மட்டக்களப்பையும் இணைக்கும் பாலம் என்று இந்தப் பாலத்தைக் கூறுவதற்கான காரணம் பெரும்பான்மை இனத்தவர்களின் அத்துமீறிய குடியேற்றங்கள் ஏற்படுமிடத்து படுவான்கரையில் உள்ள தமிழ்மக்களின் தனித்துவம் இழக்கப்படும். அந்தக் கோணத்திலேயே இதனைப் பார்க்க வேண்டி இருக்கின்றது.

தமிழர்களது வரலாற்று தடயங்களில் சிவபூமி என்று அழைக்கப்படும் படுவான் கரைப் பிரதேசத்தில் வேற்று இனத்தவர்களின் கலை, கலாசாரம் ஆதிக்கம் செலுத்தும் போது சிவபூமி என்கின்ற புனிதத்தன்மைக்கே கேடு ஏற்படக்கூடிய நிலை ஏற்பட வாய்ப்பிருக்கின்றது.

இந்தப் பாலம் திறக்கப்படுவதன் மூலம் இனங்களுக்கிடையே இன நல்லிணக்கம் ஏற்படும். எந்த இனத்தையும் ஒதுக்கிவிடமாட்டோம் என்று ஜனாதிபதி பேசியுள்ளார். அதனை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் அத்துமீறிய குடியேற்றங்கள் இடம் பெறாமல் தடுப்பதற்குரிய வழிவகைகளையும் அவர் மேற்கொள்ளவேண்டும் .

மட்டக்களப்பில் பல தமிழ்க் கிராமங்கள் இருந்தாலும் படுவான்கரை தமிழ் மக்கள் கலை, கலாசாரங்களை அன்றிருந்து இன்று வரைக்கும் பேணிப் பாதுகாத்து வருகின்றார்கள். அவர்களுக்கென்று ஒரு தனித்துவம் உண்டு.

இந்தப் பாலம் திறக்கப்பட்டதன் மூலம் படுவான்கரை பிரதேச மக்களின் கலாசாரங்களில் வேற்று இனத்தவரின் ஆதிக்கம் இடம்பெறக் கூடாது- என்றார். (ச-31)



கடும் உஷ்ணத்தையடுத்து மக்கள் குளிரான உணவுகளை உண்பதில் பெரும் ஆர்வமாயுள்ளனர். கல்முனை பிரதேசத்தில் வெள்ளரிப் பழத்தை வாங்குவதில் மக்கள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

# பிரதேசவாதம் பேசுவதால் எந்தப் பயனும் கிடைக்காது

## அமைச்சர் அதாவுல்லா தெரிவிப்பு

சம்மாந்தறை,ஏப்.23
சம்மாந்துறைப் பிரதேசத்தின் அபிவிருத்தி விடயத்தில் கட்சி பேதங்கள் மறந்து அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற முன் வர வேண்டும். வெறும் பிரதேசவாதங்கள் பேசிக் கொண்டிருப்பதனால் எந்தவொரு அபிவிருத்தியையும் பெற்றுக் கொள்ளமுடியாது.

இவ்வாறு உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல். எம்.அதாவுல்லா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்த தாவது:-

எந்தவொரு விடயத்திலும் தெளிவும் நேர்மையும் இருக்க வேண்டும். அரசியலுக்காக நான் ஒரு போதும் பொய்களை கூறுபவன் அல்லன். யதார்த்தங்களைக் கடந்த காலங்களில் பேசிவந்துள்ளேன். இப்போதும் பேசிக் கொண்டிருக்கின்றேன். அதனை பல தடவைகள் நாம் நிரூபித்துள்ளோம்.

அரசியலுக்காகக் காலத்துக்கு காலம்முரண்பட்ட கருத்துக்களை தெரிவிப்பவன் நான் அல்ல. அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை என்று பிரித்து பிரதேச வாதம் பேசுவதனால் எந்த வெற்றியையும் அடைந்து விடமுடியாது- என்றார். (ச)

# காட்டு யானை தாக்குதலால் பாதித்த இடங்களை பார்வையிட்டனர் மாகாணசபை உறுப்பினர்கள்

மட்டக்களப்பு.ஏப்.23
பட்டிப்பளை, கெவிலியாமடுவில் காட்டுயானைகளின் அட்டகாசத்தால் பாதிக்கப்பட்ட இடத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர். மட்டக்களப்பின் எல்லைக் கிராமங்களில் காட்டு யானை களின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றது. காட்டு யானைகளின் தாக்குதலால் மக்கள் தினமும் அச்சத்துடனேயே வாழ்க்கையைக் கழித்து வருகின்றனர்.

பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட எல்லைக் கிராமங்களில் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் குடியிருப்புகள் பல சேதமடைந்துள்ளன. காட்டுயானைகளின் தாக்கு தலுக்கு இலக்கான இந்தப் பிரதேசங்களைதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்களான கி.துரைராஜசிங்கம், மா.நடராஜா. பிரசன்னா இந்திரகுமார் ஆகியோர் நேரில் சென்று பார்வை யிட்டனர். (ச)



யானை தாக்குதலுக்கு உள்ளான வீட்டைப் பார்வையிடும் கூட்டமைப்பு உறுப்பினா

# வைத்தியசாலைகளுக்கு அம்புலன்ஸ் வாகனங்கள்

கல்முனை,ஏப்.23
கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு நவீன வசதிகளுடன் கூடிய புதிய அம்புலன்ஸ் வாகனங்கள் வழங்கப்பட்டன. கல்முனை பிரதேசத்திலுள்ள வைத்திய சாலை களுக்கு மருந்துகள், உபகரணங்கள் ஆகியனவும் வழங்கப்பட்டுள்ளன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.எல். அலாவூதீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதேசத்திலுள்ள பல வைத்தியசாலைகளுக்கு 85 லட்சம் ரூபா பெறுமதியான மருந்துகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஜப்பான் அரசின் ஜெய்கா திட்ட நிதி உதவியில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட்ட புதிய அம்புலன்ஸ் வாகனங்களில் ஒரு தொகுதியை மாகாண அமைச்சர் மன்சூர், பொத்துவில் மாவட்ட வைத்திய சாலை, சம்மாந் துறை ஆதார வைத்திய சாலை ஆகியவற்றுக்கு வழங்கி வைத்தார்.(ச)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25.07.1933

மறைவு
04.05.2013



திருமதி நாகரெத்தினாம்பாள் தியாகராசா
திதி: அபரபக்க நவமி

அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் எம் வாழ்வில்
ஒளிமயமாக விளங்கிய எமது குல விளக்கே!
எம்மை விட்டு நீங்கி ஒருவருட காலமாகின்றது
நீங்கள் எமது இதயங்களில்
குருதியாகப் பாய்ந்து கொண்டிருக்கின்றீர்கள்
எமது குடும்ப நலனைப் பாதுகாக்க குலதெய்வமாக விளங்கும்
ஞானசெல்வ விநாயகரை ஆசியுங்கள்



25, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள். (47043)(2.6.3)

முதலாம் ஆண்டு நினைவு தினம்



அமரர்
பரம்சோதி
பாலகணேஷ்

அன்னை மடியில்
04.07.1971

ஆண்டவன் அடியில்
03.05.2013

கமலத்தின் மைந்தனே கணேஷா- அறிவுக்கடலே
உலகத்தை நீவிட்டுப் பிரிந்து
காலமது ஓராண்டு ஓடிட்டாலும்- உங்கள் ஆத்மா
சீலமாக சாந்தியடையப் பணிகின்றோம்
பூதநாதன் திருவடியை.

'சந்திரவாசா'
துன்னாலை தெற்கு, கரவெட்டி. (47072) (3.6.4) குடும்பத்தினர்.

## கசினோ சட்டம் குறித்து வலுக்கிறது முரண்பாடு

### கூட்டணிக் கட்சிகள் எதிர்ப்பு

கொழும்பு,ஏப்.23
கசினோ சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசுக்குள் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசகூட்டணியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் கசினோ சட்டத்துக்கு ஆதரவளிக்க முன்வரவில்லை என்று கூறப்படுகிறது.

குறிப்பாக ஜாதிக ஹெல உறுமய, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கசினோ சட்டத்துக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன.

நாடாளுமன்றில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படும் தருணத்தில் குறித்த 2 கட்சிகளும் எதிராக வாக்களிக்கும் அல்லது வாக்களிப்பில் பங்கேற்காது புறக்கணிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கசினோ சட்டத்துக்கு ஆதரவாக வாக்களிப்பதா? இல்லையா என்பது குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலர் ஹசன் அலி தெரிவித்தார்.

கொள்கை அடிப்படையில் கசினோ சூதாட்டத்தை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பதாக அவர் கூறினார்.

இதேவேளை, கசினோ சட்டத்துக்கு ஆதரவளிக்கப் பட மாட் டாது என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பரப்புரைச் செயலர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்தார். (ச)

> ஜாதிக ஹெல உறுமய, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கசினோ சட்டத்துக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ளன.



இலங்கைத் தேயிலையை போலந்தில் பிரபல்யப்படுத்தும் நோக்கில் பெருந்தோட்டத்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான குழு அங்கு சென்றுள்ளது. இலங்கைத் தேயிலைச் சபை அதிகாரிகளுடன் சென்ற அமைச்சர் போலியான இலங்கைத் தேயிலை போலந்துக்கு ஏற்றுமதியாவது குறித்து ஆராயுமாறு போலந்து அதிகாரியிடம் கேட்டுக்கொண்டார். (ச)

## மீனவர் பேச்சு இலங்கையில் நடைபெற வாய்ப்புக் குறைவு

### கடற்றொழில் அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.23
இலங்கை, இந்திய மீனவர்களுக்கு இடையேயான பேச்சு அடுத்த மாதம் 12ஆம், 13 ஆம் திகதிகளில் இலங்கையில் நடத்துவதற்கு வாய்ப்பில்லை என்று கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 14ஆம், 15 ஆம் திகதிகளில் வெசாக் பண்டிகை இலங்கையில் மிக விமரிசையாக கொண்டாடப்படுவதால், இந்தப் பேச்சை இலங்கையில் நடத்த முடியாது.

எனினும் இந்திய மத்திய அரசு எமக்கு உத்தியோகபூர்வமாக 12ஆம், 13 ஆம் திகதிகளில் பேச்சு நடத்தலாம் என்றும் இதுவரை அறிவிக்கவில்லை என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

இரண்டு தடவைகள் பேச்சுக்கான திகதி இலங்கையால் அறிவிக்கப்பட்ட பின்னரும் தமிழகம் அதனை நிராகரித்துள்ளதுடன் எட்டு தடவைகள் ஒப்பந்தத்தையும் மீறியுள்ளது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எனவே இனிமேலும் இலங்கை தமிழக மீனவர்களிடையே பேச்சு நடத்தாமல் அதற்கு முன்னதாக புதுடில்லியில் இலங்கை - இந்தியா சார்பாக நியமிக்கப்பட்ட தலா மூன்று பேர் கொண்ட அரச உயர்மட்ட குழுவின் பேச்சை நடத்துவதே சரியானது என்று கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை அரசு சார்பாக கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நிமால் ஹெட்டியாராச்சி, சுஹத கம்லத், அமைச்சின் ஆலோசகர் சுபசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

உயர்மட்ட அதிகாரிகளின் பேச்சு இலங்கையில் நடத்தப்படவேண்டும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் இது குறித்து இந்திய மத்திய அரசிடமிருந்து இதுவரை எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்று கடற்றொழில் அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார். (ச)

> இரண்டு தடவைகள் பேச்சுக்கான திகதி இலங்கையால் அறிவிக்கப்பட்ட பின்னரும் தமிழகம் அதனை நிராகரித்துள்ளதுடன் எட்டு தடவைகள் ஒப்பந்தத்தையும் மீறியுள்ளது.

## அழுக்கு நாணயத்தாள்கள் மத்திய வங்கியால் அழிப்பு

கொழும்பு,ஏப்.23
தூய நாணயத்தாள் கொள்கைக்கு அமைய 157.7 மில்லியன் ரூபா பெறுமதியுள்ள அழுக்குற்ற நாணயத் தாள்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நாட்டின் நிர்வாக மாவட்டங்களினது பாரம்பரிய அடையாளங்களை சித்திரிக்கும் 10 ரூபா பெறுமதியான நாணயத் தாள்களைத் தொடராக வெளியிட மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

ஒவ்வொரு நாணயத்தாளிலும் ஒரு பக்கத்தில் ஒரு மாவட்டத்தின் பாரம்பரிய அடையாளத்துடன் அது தொடர்பான குறியீடுகள் காணப்படும் என்று மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

நாணயக் குற்றிகளை வெளியிடுவது செலவு கூடியது. அதிகளவான நாணயக் குற்றிகள் வழிபாட்டுத் தலங்களின் உண்டியல்களில் முடங்கியுள்ளன என்று மத்திய வங்கி கூறியுள்ளது. (ச)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
10.09.1928



மறைவு
24.03.2014

அமரர்

## சரஸ்வதி மயில்வாகனம்

கடந்த 24.03.2014 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி
சரஸ்வதி மயில்வாகனம் அவர்களின் மரணச்செய்தி கேட்டு
நேரிலும், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும்
எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு,
அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (23.04.2014) புதன்கிழமை
எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகைதந்து
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

- குடும்பத்தினர்.

(47101) (7.6.3)


## முகப்புத்தக முறைப்பாடுகள் அதிகரிப்பு

கொழும்பு,ஏப்.23
இந்த வருடத்தில் முதல் நான்கு மாதங்களில் முகப் புத்தகம் தொடர்பாக 500 முறைப்பாடுகள் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று கணினி அவசர நடவடிக்கைப் பிரிவு தெரிவித்துள்ளது. பொய் விவரங்களை வழங்கித் தொடங்கப்பட்ட முகப் புத்தகக் கணக்குகள் பற்றியனவாகவே கூடுதலான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

முகப்புத்தகக் கணக்குகளினுள் புகுந்து தாக்குதல் மற்றும் முகப் புத்தகம் தொடர்பான பயமுறுத்தல்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் அநேகமாக பெண்கள் அல்லது இளஞ் சிறார்களாக உள்ளனர்.

முகப்புத்தகம் தொடர்பான கடுமையான குற்றச்சாட்டுக்களை பொலிஸார் விசாரித்து வருகின்றனர். முகப்பத்தகங்களைப் பயன்படுத்துவோர், படங்களைத் தரவேற்றம் செய்யும்போது கவனமாக இருக்க வேண்டும். இந்தப் படங்களைத் துஷ்பிரயோகம் செய்யும் வாய்ப்புக்கள் உள்ளன என்று கணினி அவசர பிரிவு தெரிவித்துள்ளது.

பெண் பிள்ளைகளின் கணக்குகளில் நுழைந்து விவரங்களை மாற்றிவிடுதல், படங்களை எடுத்தல், போலிக் கணக்குகளை உருவாக்குதல், கப்பம் கேட்டு மிரட்டுதல் எனப் பல வகையான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று அந்தப் பிரிவுமேலும்குறிப்பிட்டுள்ளது.(ச)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20.06.1927



மறைவு
14.04.2012

## அமரர் நமசிவாயம் நல்லையா

திதி : அபரபட்ச நவமி

ஈராண்டல்ல நூறாண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும்
எங்களைவிட்டு அகலாதப்பா உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

கோயில் வாசல்
இணுவில் மேற்கு, இணுவில்.

உங்கள் நினைவுடன் அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அபிவிருத்தியிலும் கவனம் செலுத்துவது அவசியம்

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின் நோக்கத்தை மீள்பரிசீலனை செய்வது அவசியமாகி இருக்கிறது. இந்தக் கூட்டங்கள் ஒன்றில் பல மாதங்களுக்கு நடக்காமல் இருக்கின்றன, அல்லது நடக்கும் கூட்டங்களில் முக்கியமான முடிவுகள் எவையும் எடுக்கப்படுவதில்லை.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் நோக்கம் என்ன? மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை மீளாய்வு செய்வதும், தடைகள், தடங்கல்கள் இருந்தால் அவற்றை நீக்குவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதும், புதிய மக்கள் நலத் திட்டங்களையும் மக்களின் தேவைகளையும் இனங்கண்டு அவற்றை அபிவிருத்தித் திட்டங்களாக மாற்றி முன்னெடுப்பதும்தான்.

ஆனால், வடக்கில் மட்டும் இந்தக் கூட்டங்கள் ஒரு பெரும் அரசியல் சித்து விளையாட்டாக மாறிவிட்டன. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் கூட்டுவது என்பதே ஒரு பெரும் அரசியல் நாடகமாக அரங்கேறுகிறது இங்கு. மாதா மாதம் கூட்டப்படவேண்டிய இந்தக் கூட்டம் பல மாதங்களுக்குக் கூட்டப்படுவதில்லை. அப்படியே கூட்டப்படும் கூட்டங்களுக்குக்கூட சரியான வகையில் அழைப்பிதழ்கள் கொடுக்கப்படுவதில்லை என்றும் நிகழ்ச்சி நிரல்கள் முன்கூட்டியே தரப்படுவதில்லை என்றும் ஏற்கனவே குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன.

இவ்வாறான அரசியல் கழுத்தறுப்புக்கள், ஒதுக்குதல்கள் எல்லாவற்றையும் தாண்டி கூட்டம் கூட்டப்பட்டுவிட்டால் மட்டும் அதனால் விளையும் பயன் என்ன என்பதே இப்போது கேள்வி.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் அரசியல் மேடைகள் அல்ல, ஆளும் தரப்பினரும் எதிர்த் தரப்பினரும் மீண்டும் மீண்டும் கருத்து மோதல்களில் ஈடுபட்டுக்கொள்வதற்கு. ஆனாலும் அதிகமான கூட்டங்களில் மாவட்டத்தின் அபிவிருத்தி நோக்கி முன்னேறுவதற்குப் பதிலாக அரசியல் கருத்து மோதல்கள்தான் துருத்திக் கொண்டு நிற்கின்றன.

**இந்த முறைதான் வடக்கு முதலமைச்சரும் இணைத் தலைமைகளில் ஒருவராக மத்திய அரசின் பிரதிநிதியுடன் அமர்ந்திருந்து கூட்டத்தை நடத்தியிருக்கிறார். மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை மத்திய அரசு பறித்தெடுக்கும் ஒரு செயற்பாடாகவே மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை அவர் காண்கிறார் என்பதைத் தனது முதலுரையில் குறிப்பிட்டுள்ளார்.**

சட்டத்தால் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் தனியான அதிகாரங்களை, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் ஊடாக மத்திய அரசு தன்வசப்படுத்த இடமளிக்க முடியாது என்றும் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கூறியிருக்கிறார்.

மத்திய அரசின் கை மாகாண சபையின் நடவடிக்கைகளில் மேலோங்கும் வண்ணமாகவே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

முதலமைச்சரின் கூற்றுக்களில் இருந்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் தொடர்ந்தும் அரசியல் விவாத மேடைகளாகவே இருக்கும் என்று தெரிகிறது.

அது தவறல்ல என்றாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்கும் கொஞ்ச நஞ்ச அபிவிருத்திக்கும் இந்த மோதல் போக்கு தடையேற்படுத்தி, இடைஞ்சல் செய்யாது இருப்பதை உறுதிப்படுத்த வேண்டியதும் தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர்களின் கடமை.

கடந்த 30 வருடங்களாக நடந்த போர் தமிழர்களின் உரிமைகளை மீண்டும் அடைவதை நோக்கமாகக் கொண்டது என்பது இங்குள்ள அரச தமிழ்ப் பிரதிநிதிகளுக்குத் தெரியாததல்ல. உரிமைகளை மீட்டெடுப்பதற்காகத்தான் தாங்களும் கடந்த காலங்களில் ஆயுதப் போராட்டத்திலும் பின்னர் இணக்க அரசியலிலும் ஈடுபட்டனர் என்று அவர்கள் கூறிக்கொள்கின்றனர். அப்படி இருக்கும்போது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் போன்றவற்றில் மத்திய அரசின் முகவர்களாக மட்டுமே நின்றுகொண்டு செயற்பட்டு மாகாண சபையின் அதிகாரங்களை முடக்குவதற்குத் துணைபோவதை அவர்கள் இனியாவது நிறுத்த வேண்டும்.

இத்தகைய கூட்டங்களை வடக்கு முதலமைச்சர் முன்னெடுத்துச் சென்று வடக்கில் அபிவிருத்தியை ஏற்படுத்த அவருக்கு குறைந்தபட்சம் ஒரு பதவிக் காலத்திலாவது இடமளித்து ஒதுங்கியிருந்து ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். அதைவிடுத்து ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை அரசியல் மேடைகளாக்கிக் கொண்டு இருப்பதில் பயனில்லை. மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி வருவதற்கு பொருத்தமான அபிவிருத்தியும் அவர்களைச் சென்றடைய வேண்டும் என்பதைக் கவனத்தில் கொண்டு எல்லா அரசியல்வாதிகளும் அதில் கவனம் செலுத்துவதே சாலப் பொருத்தம்.

# இலங்கை அரசைப் பயமுறுத்தும் எலும்புக் கூடுகள்

இரா.மோகன்ராஜன்

மார்ச் மாத இறுதியில் நடைபெற்ற ஐ.நா. சபையின் 25- ஆவது மனித உரிமை சபைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட மூன்றாவது தீர்மானம், முன் எப்போதையும் விடத் தீவிரமானதாக இருக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பை உலகத் தமிழ்ச் சமூகத்திடையேயும், மனித உரிமை அமைப்புகளிடையேயும் உருவாக்கி விட்டு வழமை போல இலங்கையை செல்லமாகக் கடிந்து கொள்வதாக கடைசியில் ஆகி விட்டுள்ளது. மேலும் இந்தியா செய்த திருத்தங்களையும் ஏற்றுக் கொண்டு வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து படையினர் திரும்பப் பெறப்பட வேண்டும் என்ற தீர்மான வரிகளும் நீக்கப்பட்டுவிட்டன. கடந்த காலங்களில் இந்தியா இலங்கை விடயத்தில் தனக்குத் தேவையான தொனியில் மட்டுமே மிரட்டுவது போல மிரட்டி வந்தது. அதே உத்தியை பின் பற்றி இலங்கையை அமெரிக்கா அடிப் பது போல அடிக்கிறதோ என்ற ஐயத்தை எழுப்புகிறது தீர்மான விவரங்கள்.

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டுதமிழர்களுக்குஎதிராகஇலங்கை அரசே ஒட்டு மொத்தமாக நடத்திய உச்சக்கட்டப் போரின் போது நடந்ததாக அறியப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமை மீறல்கள் மீது இலங்கை அரசே விசாரித்து நடவடிக்கை எடுக்கும் குழுவின் அறிக்கை தொடர்பில் அரசு எதுவித அக்கறையோ அல்லது நடவடிக்கையோ எடுக்காமையும், இன்னமும் வடக்கு- கிழக்குப் பகுதிகளில் தொடரும் தமிழர் படுகொலைகள், காணாமற் போதல் மற்றும் துன்புறுத்தல்கள் போன்றவை மட்டுமே அமெரிக்காவின் மட்டுப்படுத்தப்பட்ட தீர்மானச் சீற்றத்திற்குக் காரணமென்று சொல்லப்படுகிறது. மேலும் இலங்கை அரசின் விசாரணைக் குழுவான எல்.எல்.ஆர்.சி. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மீதான நடவடிக்கைகள் தோல்வி அடையும் பட்சத்தில் இலங்கை அரசு சர்வதேச விசாரணையைச் சந்திக்க நேரிடும் என்று அமெரிக்கா, பிரிட்டன், ஐ.நா. உள்ளிட்டவை எச்சரித்தாலும் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை ஒருபுறம் அமெரிக்கா தட்டிக் கொடுக்கவும் தவறவில்லை. இந்த இரட்டை நிலைப்பாடு, ராஜபக்ஷவுக்கு எரிச்சலைக் கொடுத்தாலும், சீனாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டிருக்கும் துணிச்சலில் அமெரிக்காவின் குற்றச்சாட்டுகளை ஒரே அடியாக நிராகரித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஓகஸ்ட்டில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டதன் பிறகு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் நவநீதம்பிள்ளை இலங்கையை அறிவுறுத்தும் விதமாக காட்டமான அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கை இலங்கையை முன் எப்போதும் இல்லாத வகையில் கண்டனம் செய்வதோடு, விரைந்த நடவடிக்கையைக் கோருவதாகவும் உள்ளது. பயங்கரவாதத்தடுப்புச் சட்டம் என்கிற பெயரில் அப்பாவித் தமிழர்களைத் துன்புறுத்துவதைத் தடுக்கும் முகமாக அச்சட்டத்தை இலங்கை அரசு திரும்பப் பெற வேண்டும்; காணாமற்போனவர்களைப் பற்றியும், தேடப்பட்டு வரும் குற்றவாளி கள் மீதான தாக்குதல்கள் பற்றியும் விசாரணை வேண்டும். முக்கியமாக இவற்றின் மீது நடவடிக்கை எடுக்க இலங்கை அரசு தவறுமானால் ஐ.நா. சபை சர்வதேச விசாரணையை மேற்கொள்ள வேண் டும் எனவும் அவர் கேட்டிருந்தார். கடைசியில் மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா தீர்மானம் கொண்டுவரும் நிலையில் நவிப்பிள்ளையின் அறிக்கையைக் கண்டனம் செய்தார் ராஜபக்ஷ. நவிப்பிள்ளையின் அறிக்கையை ஏற்க முடியாது என்றும் அவர் சிலிர்த்துள்ளார்.

ஏற்கெனவே நவிப்பிள்ளை இலங்கை செல்வதற்கு முன்பும், பின்புமான பல அறிக்கைகளை முன்வைத்தே அமெரிக்கா, பிரிட்டன் போன்றவை ராஜபக்ஷ அரசுக்கு நெருக்குதல் தந்து வந்தன. இந்நிலையில் நவிப்பிள்ளையின் இந்த தீவிரமான அறிக்கையின் பேரில் அமெரிக்கா, தனது இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் மேலும் கூடுதலான அழுத்தத்தை செலுத்தக்கூடும் என்பதை உணர்ந்தே இலங்கை அரசு, இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் ஏற்படுத்த மேலதிகமான கால அவகாசம் தேவையென அமெரிக்காவிடம் அலட்சியமாகப் பதிலளித்துள்ளது

இதனையடுத்து மார்ச் திங்கள் 4 ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணையகக் கூட்டத்தில் 2009 ஆம் ஆண்டு நடந்த போரில் இலங்கை அரசால் மனித உரிமைகள் மீறப்பட்டமை குறித்து ஒரு சர்வதேச விசாரணை தேவை என்று அமெரிக்கா, பிரிட்டன், மாசிடோனியா, மொரீசியஸ் உள்ளிட்ட நாடுகள் வரைவுத் தீர்மானம் கொண்டு வந்தன. மேலும் அரசமைப்புக்கான 13 ஆவது சட்டத்திருத்தத்தை வலுப்படுத்த வேண்டும் என்றும் அத் தீர்மானம் வலியுறுத்தியது. எனினும் இத் தீர்மானம் இலங்கையில் நடந்தது ஓர் இனப் படுகொலை தான் என்பதை எங்கும் ஒத்துக்கொள்வதாகத் தெரிய வில்லை. அதேவேளை மனித உரிமைத் தீர்மானத்தின் வழி சிங்களவர்களின் சீன ஆர்வங்களை முடக்கவும், இனப் படுகொலையில் ஆவேசப்பட்டுள்ள தமிழர்களை அமைதிப்படுத்தவும் இரண்டு காய்களை வீழ்த்த நினைக்கிறது அமெரிக்கா.

தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின் இறுதி நாள்வரை வழக்கம் போல மௌனம் சாதித்த இந்தியா கடைசியில் வாக் கெடுப்பில் கலந்துகொள்ளாது தவிர்த்துக் கொண்டது.

உலகெங்கும் இன்று இலங்கைப் போர் குறித்த பார்வை தனக்கு எதிராகத் திரும்பியுள்ளதை உணர்ந்துள்ள ராஜபக்ஷ, அமெரிக்கா தற்போது கொண்டு வந்துள்ள மூன்றாவது தீர்மானம் தன்னிச்சையாக சர்வதேச விசாரணைக்கு எடுத்துச் செல்லப்படக்கூடும் என்பதை அறிந்துள்ளார். அண்மையில் இத்தாலியின் பிரேமன் நகரில் கூடிய மக்கள் தீர்ப்பாயத்தின் இரண்டாவது அமர்வானது, இலங்கை அரசு மனித உரிமை மீறலில் ஈடுபட்டதோடு அது போர்க் குற்றமும் செய்துள்ளது என்று கூறியுள்ளது. இந்தத் தீர்மானம் மிகக் கடுமையான தாகும். ஏனெனில் இத்தீர்மானமானது. இன்றைக்கு இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவரும் அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட மேற்குலகு நாடுகளை இலங்கைப் போருக்கு உதவியதாக, வெளிப்படையாக குற்றம் சாட்டுகிறது. தமிழரின் கூட்டிணைவு, சிந்தனை ஆகியவற்றை திட்டமிட்ட வகையில் இலங்கை அரசு சிதைத்துள்ளமை, பாலியல் வல்லுறவு, கட்டாயக் கருத்தடை ஆகியவற்றைப்போர் உத்தியில் ஒன்றாக இலங்கையரசு கடைபிடித்தமை, ஐ.நா. அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன் போன்றவற்றின் கள்ள உதவி. இவையே இலங்கை அரசு இனக் கொலையைத் தீவிரப்படுத்தக் காரணம் என்று இந்தத் தீர்ப்புரை பேசுகிறது. மெய்யாகவே படைப்பாளிகளையும், நீதிமான்களையும் கொண்ட இவைபோன்ற தீர்ப்பாயங்களே உலகெங்கிலும் உள்ள இனப்படுகொலைகளுக்கு உள்ளாகும் மக்களுக்கு வாழ்தலின் மீதான நீதியின் மேலான நம்பிக்கையை வளர்ப்பதாக இருக்கும் அதே சமயம் ராஜபக்ஷக்களின் நிம்மதியைக் கெடுப்ப தாகவும் உள்ளது.

இலங்கை பற்றிய சலசலப்பு கிளம்பும் போதெல்லாம் பிரிட்டன தொலைக்காட்சி போர்க் குற்ற சாட்சி யங்கள் அடங்கிய புதிய புதிய ஒலி-ஒளி காட்சிகளை வெளியிடத் தவறுவதில்லை இம்முறையும் பல பதைபதைக்க வைக் கும் படுகொலைகள் நிரம்பிய போர்க்குற்ற காட்சிகளை சாட்சியங்களாக உலகின் முன் வைத்துள்ளது. ராஜபக்ஷ அரசு இக்காட்சிகளை வழமையாக இவை ஒட்டு வேலை என்று சொல்லக்கூடும். பொதுநலவாய மாநாட்டின் போது அடித்து நொறுக்கப்பட்ட கெலம் மெக்ரோவின் ஒளிப்படக் கருவிகள் ஆயுதங்களாக மாறும் தருணங்களை ராஜபக்ஷ சரியாகப் புரிந்து கொள்ள வில்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

இதனிடையே புலம் பெயர் தமிழர்களும், புலிகளும் ஐ.நாவுடன் சேர்ந்து கொண்டு தீர்மானம் கொண்டுவருவதாக இலங்கை அரசு குற்றம் சாட்டியிருக்கிறது. போரின் போது காணாமற்போனோர் பற்றி தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட மனித உரிமை அமைப்புகள் தொடங்கி ஐ.நா. தீர்மானம் வரையிலும் வலியுறுத்தி வரும் நிலையில் தற்போது மன்னார் திருக்கேதீஸ்வரம் பள்ளிக்குடாப் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த 47 க்கும் மேலதிகமான மனிதர்களின் கூடுகள் உயிர்த்தெழுந்துள்ளமை ராஜபக்ஷவை பீதியடைய வைத்துள்ளது.

இதற்கிடையே முல்லைத் தீவு மாவட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒன்பது பேரின் எலும்புக்கூடுகள் மண்ணில் முளைவிட்டுள்ளன. இவை பெரும் போரின் போது இலங்கை அரசு கைப்பற்றிய பகுதியைச் சேர்ந்தவை என்று கூறப்படுகிறது. போர்க் குற்றத்தின் சாட்சியாக இவை வரக்கூடும் என்ற அச்சம் ராஜபக்ஷவைக் கிலி கொள்ள வைத்துள்ளது. மனிதப் புதைகுழிகளின் சாட்சியாகி மேலெழும்பியிருக்கும் தமிழ் எலும்புக்கூடுகள் பற்றி ஒரு சர்வதேச விசாரணை தேவை என்பதை வடக்கு- கிழக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் கூட்டத் தொடர் தொடங்கியபோது, இலங்கை அரசும் தனது நல்லிணக்கக் குழுவின் ஆலோசனையின் பேரில் அவசர அவசரமாக காணாமற்போ னோரை உறுதி செய்யும் விதமாக காணா மற்போனோர் சான்றிதழ் வழங்க முடிவு செய்துள்ளது. இது 1990 முதல் 2009 வரையிலான காலப் பகுதியை சேர்ந்தவர்களுக்கானதாகும். காணாமற்போனோரை இறந்தவர்களாக கருத உறவினர்கள் ஒப்பாததால் அரசு இந்த முடிவுக்கு வந்துள்ளதாக தெரிவித்திருந்தாலும் 2009 ஆம் ஆண்டின் பெரும் போரில் காணாமற்போனதாக அறியப்படும் 40,000 பேரின் நிலை பற்றி மட்டும் அமைதி காக்கப்படுகிறது. எனவேதான் சர்வதேச விசாரணையை ஐ.நா. மனித உரிமை ஆணையமும், தமிழ்ச் சமூகமும், உலகெங்கிலுமுள்ள மனித உரிமை ஆர்வலர்களும் தொடர்ந்து கோருகின்றனர். அவர்கள் மட்டுமல்ல அவ்வப்போது இனக் கொலை பூமியின் மேலெழுந்து வரும் எலும்புக் கூடுகளின் சாட்சியங்களும் ராஜபக்ஷவின் தூக்கத்தை நிரந்தரமாகக் கெடுப்பதாக மாறி உள்ளன.

23 APR 2014
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்



பேராசிரியர் திருமதி சிவசாந்தினி குகநாதன்,
தலைவர், மீன்பிடியியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



தொண்டமானாறு கடல் நீரேரியில் ஏற்பட்ட

# மீன்களின் பெரிய இறப்பு; ஒரு நோக்கு

தொண்டமானாறு கடல் நீரேரியில் பெரும் எண்ணிக்கையில் மீன்கள் இறந்து மிதக்கின்றன என்ற செய்தி அனைவரையும் அதிரவைத்தது. சூரியன் இலங்கைக்கு மேல் உச்சம் கொள்வதால் வளி மண்டல வெப்ப நிலை அதிகரிக்கும் என ஊடகங்களில் செய்தி வெளியாகிக் கொண்டிருக்க, கடும் வெப்பத்தைத் தாங்க முடியாத மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். அந்தத் தருணத்தில் மீன்களின் இறப்பு பற்றிய செய்தி மக்கள் மனதை உலுப்பி விட்டது. ஆம்.! லட்சக் கணக்கான மீன்கள் தொண்டமானாறு பிரதான பாலத்துக்கும் வெளிக்கள நிலையத்துக்கும் அருகில் உள்ள கடல் நீரேரிக்கும் இடைப்பட்ட பகுதியில் இறந்து மிதக்கக் காணப்பட்டன.

மீன்கள் இறந்து மிதப்பதை அறிந்து யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியியல் துறைத் தலைவரான திருமதி சி.குகநாதன் ஆகிய நானும், இளைப்பாறிய பேராசிரியர் க.சித்திரவடிவேலுவும், சக விரிவுரையாளரான திருமதி சி.பிரதீபாவும், முதுதத்துவமாணி மாணவியான திருமதி தர்மினியும், கடந்த 19 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் அவ்விடத்துக்கு விரைந்து சென்று நீரின் தன்மை, மீன்களின் வகை மற்றும் அவற்றின் உடல் மாற்றங்கள் ஆகியவற்றை ஆய்வுக் கருவிகளால் பதிவு செய்யத் தொடங்கினோம். சுமார் 4 மணித்தியாலங்கள் இந்த ஆய்வு நிகழ்த்தப்பட்டது.

தொண்டமானாறு கடல் நீரேரியில் உவர் நீரை நன்னீராக்கும் திட்டம் 1943 ஆம் ஆண்டு வெப் என்பவரால் முன்வைக்கப்பட்டது. அந்தத் திட்டத்துக்கமைய கோயிலின் பின்புறமாக கடல் நீரை நீரேரிக்குள் செல்லவிடாது தடுப்பதற்காக குறுக்கு அணை ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குறுக்கு அணை கடந்த காலச் சூழ்நிலைகளால் பழுதடைந்து அதன் வான் கதவுகள் திறந்த நிலையிலேயே காணப்பட்டன. இதனால் கடல் நீர் கடல் நீரேரிக்குள் சென்று கலக்கும் சாத்தியம் காணப்பட்டது. தற்போது அந்த அணை திருத்தியமைக்கப்பட்டு அதன் வான் கதவுகள் மூடப்பட்டுவிட்டன.

கடல் நீர் கடல் நீரேரியினுள் உட்புக முடியாதவாறு பிரிக்கப்பட்டு விட்டது. எனவே வெளிக்கள நிலையத்தை அண்டிய உவர் நீர்ப் பகுதி தனிமைப்படுத்தப்பட்டு விட்டது. இருப்பினும் குறிப்பிட்ட காலப் பகுதியில் இந்தக் கடல் நீரேரியினுள் இறால் குஞ்சுகள் பெருகும். கடல் நீரில் வாழும் முதிர்ந்த இறால் இனங்கள் கடல் நீரேரியினுள் வந்து முட்டையிட்டுச் செல்லும். முட்டைகள் பொரித்து குஞ்சாகி அதிகளவான இறால் குஞ்சுகள் வளரத் தொடங்கும். இந்த இறால் இனங்களைப் பிடிப்பதற்காக சிறியளவிலான மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் வான் கதவினை உடைத்துத் திறந்து விடுவது சகஜம். ஏழை மீனவர்களின் வாழ்வாதாரமாக இந்தச் சிறிய இறால் பிடித்தொழில் அன்று முதல் இன்றுவரை திகழ்ந்து வருகின்றது.

தற்போது அந்தக் குறுக்கு அணையைத் திறந்து விடாதபடி அவ்விடத்தில் ஒரு காவலாளி கடமையில் அமர்த்தப்பட்டுள்ளார். இருப்பினும் இரண்டு வான் கதவுகள் தற்போது உடைக்கப்பட்டுள்ளன. ஆனால் உரியவர்கள் மண்மூடைகளை அடுக்கி உப்பு நீர் உள் வருவதை இடைநிறுத்தியுள்ளனர். இந்த நிலைமையிலேயே சூழல் வெப்பநிலை அதிகரிக்க இந்த மீன்களின் இறப்பு நிகழ்ந்துள்ளது. இம்முறை கடந்த ஆண்டு இறுதியில் மழை வீழ்ச்சி மிக மிகக் குறைவாகவே காணப்பட்டது. இதனால் கடல் நீரேரியிலும் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்தே காணப்பட்டது. மேலும் வான் கதவுகள் மூடப்பட்டதால் இரண்டும் கெட்ட நிலை காணப்படுகின்றது. நன்னீர்த் தேக்கமும் இல்லை. கடல் நீரோட்டமும் இல்லை.

இந்த நிலையில் கடந்த 17 ஆம் திகதி சூரியன் உச்சத்துக்கு வந்தமையால் ஏற்பட்ட வெப்பநிலை அதிகரிப்பு அந்தச் சூழல் தொகுதியை வெகுவாகப் பாதித்துள்ளது. பெருமளவில் நீர் ஆவியாகிச் செல்ல உவர்நீரில் கரைந்துள்ள உப்புக்களின் செறிவு அதிகரித்துள்ளது. இதனால் உவர்நீரில் ஒட்சிசன் கரையும் திறன் குறைந்துள்ளது. நீரோட்டமும் இல்லை. வளிமண்டல ஒட்சிசன் கரையும் தன்மையும் இல்லை. எனவே உவர் நீரேரியில் உவர் தன்மை என்றுமில்லாதவாறு கடந்த 18 ஆம், 19 ஆம் திகதிகளில் ஆழம் கூடிய பகுதிகளில் 45 PPT யாகவும் கரையில் 90 PPT யாகவும் அதிகரிக்க, ஒட்சிசன் செறிவு சடுதியாகக் குறைய மீன்கள் உயிர் வாழ முடியாததொரு சூழ்நிலை ஏற்பட்டது. சாதாரண நிலைமைகளில் தொண்டமானாறு கடல்நீரேரியின் உவர்ப்புத் தன்மை 14.4 தொடக்கம் 20 PPT வரையும் மாறுபட்டுக் காணப்படும்.

இந்தத் தருணத்தில் தொண்டமானாறு கடல் நீரேரி வற்றிவிட்டதென்றே கூறலாம். இந்நிலையில் முதலில் இறந்து மிதக்கத் தொடங்கியவை திரளி மீனினங்கள் ஆகும். இவை பரந்த உவர்ப்புத் தன்மை வீச்சைத் தாங்க முடியாதவை. அடுத்தபடியாக விலாங்கு, கீளி, கௌிறு மற்றும் அனைத்து மீனினங்களும் இறக்கத் தொடங்கின. கௌிறு மீன்கள் ஓரளவு பரந்த உவர்ப்புத் தன்மை வீச்சைத் தாங்கக் கூடியவை. விலாங்கு மீனினங்களும் அவ்வாறே. எனினும் அம்மீன்கள் கூட சுவாசிப்பதற்கு ஒட்சிசன் இல்லாததால் நீரின் மேற்பரப்புக்கு வந்து சுவாசிப்பதை நேரில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. விலாங்கு மீனினங்கள் சேற்று நிலப்பரப்பில் செங்குத்தான நிலையில் நிமிர்ந்து காணப்பட்டன. இவை அனைத்தும் ஒட்சிசன் பற்றாக்குறையினாலேயே இந்த மீன்கள் இறக்க நேரிட்டது என்பதற்குச் சான்று பகர்கின்றன.

இறந்த மீனினங்கள் யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியியல் துறை ஆய்வு கூடத்தில் மீன்பிடியியல் விஞ்ஞான விசேட பிரிவில் கற்கும் நான்காம் வருட மாணவர்களினால் பரிசோதித்துப் பார்க்கப்பட்ட போது ஒட்சிசன் பற்றாக்குறையால் மீன்கள் இறந்தமைக்கான சில முக்கியமான அக, வெளித் தோற்றங்களை அவதானிக்க முடிந்தது. அவையாவன: வாய் திறந்த நிலை, இளகிய தோல், வெடித்துச் சிதறிய காற்றுப்பை, வெளிறிய தசை, கண்கள் வெளியில் வந்த நிலை, வெளிறிய பூக்கள் என்பனவாகும்.

இறந்தழுகிய மீன்களை அகற்றி அந்த இடத்தைத் துப்புரவு செய்வதில் வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவரின் கண்காணிப்பில் நகர சபை ஊழியர்கள் பெரும் பங்காற்றிக் கொண்டிருந்தனர். மீன்கள் கூடைகளிலும் கட்டுமரங்களிலும் அள்ளி எடுக்கப்பட்டு சிறிய லொறிகளில் ஏற்றப்பட்டு வீதியின் மறுகரையிலுள்ள பெரிய குழி ஒன்றினுள் புதைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. கடல் நீரேரியின் அடித்தளம் முருகைக் கற்பாறைகளால் ஆக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

மீன்களின் இறப்பு எதிர்பாராத விதமாக சடுதியாக நடந்த போதிலும் குடாநாட்டு மக்களின் நன்னீர்த் தேவையை கருத்தில் கொண்டு தூர நோக்குடன் சிந்திக்கும்போது இவ்வாறான துர்ப்பாக்கிய சம்பவங்கள் இயற்கையின் நியதியால் நிகழ்வது தடுக்க முடியாததொன்றாகும் எனக் கொள்ளமுடிகிறது.

சிறு இழப்புகளையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்கினாலும் நீண்ட காலத்தில் இதனை நன்னீர் திட்டமாக மாற்றினால் யாழ்.குடாநாட்டு மக்களின் குடி தண்ணீர்ப் பிரச்சினையைத் தவிர்க்கலாம் என்ற தூர நோக்குச் சிந்தனையில் பெறுமதி மிக்க ஒரு திட்டமாக அமைகிறது.

இவ்வாறான ஒரு திட்டத்தை அமுல்படுத்தும்போது மாற்று வாழ்வாதார முறைகளை மீனவ குடும்பங்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பது அவர்களது வாழ்வில் ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு உதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

மேலும் பாக்கு நீரிணையிலிருந்து தொண்டமானாறு கடல் நீரேரியினுள் வரும் உவர்நீர் அந்த இடத்தில் காணப்படும் பிரதான பாலத்தின் கீழாகவே ஊடுபுகவிடப்படுகின்றது. இந்தப் பாலம் தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் முற்றாக திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இந்த நன்னீராக்கும் திட்டத்துக்கு அமைய தொண்டமானாறு கடல் நீரேரியின் இருமுனையிலும் (ஒன்று தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயிலின் பின்புறமும் மற்றையது நாவற்குழியிலும்) அணைகள் அமைக்கப்பட்டு கடல் நீரேரியின் நீரை கடலுடன் தொடர்புபடவிடாமல் தடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு திருத்த வேலைகள் இடம்பெறும்போது பாலத்தின் கீழ் குவிக்கப்பட்ட மண் கும்பியில் ஒரு பகுதி அகற்றப்பட்டும் மற்றொரு பகுதி அகற்றப்படாமலும் காணப்படுகின்றது.


எனவே கடல் நீரானது ஏரியினுள் வரும் அளவு சடுதியாகக் குறைக்கப்பட்டுள்ளது எனலாம். இந்த மண் கும்பியை அகற்றுவதில் பொறுப்பான அதிகாரிகளின் கவனம் விரும்பத்தக்க விடயமாகும். இவ்வாறு பிரிக்கப்பட்ட நிலையும் மழையில்லா நிலையும் தொடருமானால் மீன்களினதும் மற்றும் உயிரங்கிகளினதும் சமநிலையும் குழப்பப்படும். எனவே அந்தப் பகுதியில் தொடர்ச்சியான அவதானமும் ஆராய்ச்சியும் அவசியமாகின்றது.



# புத்தகத்தின் மகிமை

சோபனா

இன்று உலக புத்தக மற்றும் பதிப் புரிமைத் தினம்



உலகில் வாசித்தல், பதிப்பித்தல் மற்றும் அறிவாற்றல் சார்ந்த சொத்துகளை, பதிப்புரிமை மூலம் பாதுகாக்கும் நோக்கத்துடன் ஆண்டு தோறும் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி உலக புத்தக மற்றும் பதிப்புரிமைத் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

புத்தகம் மற்றும் நூலாசிரியர்களுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் இந்தத் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. புத்தகம் என்பது கல்வி மற்றும் அறிவை வளர்க்க, உலகிலுள்ள பல்வேறு கலாசாரம் மற்றும் தகவல்களை தெரிந்து கொள்வதற்கு உறுதுணையாக உள்ளது.

புத்தகம் படிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொண்டால் நமது அறிவை வளர்க்கலாம். மனிதர்களை நல்வழிப்படுத்தவும் புத்தகம் சிறந்த வழிகாட்டியாக உள்ளது. சிறந்த புத்தகங்கள் பல்வேறு உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட வேண்டும்; அப்போது தான் அனைத்து தரப்பினரையும் அது சென்றடையும்.

சேக்ஸ்பியர் தாம் வாழ்ந்த 52 வருடத்தில் 38 நாடகங்களையும், 154 வசன கவிதைகளையும் உலக இலக்கியத்துக்கு வழங்கியுள்ளார். மனித மன உள்ளுணர்வுகளைப் பற்றி இவரைப் போல் எழுதியவர்கள் இல்லையென்றே சொல்ல வேண்டும். முறையான கல்வி கற்காமலேயே ஆங்கில மொழியை இவர் கையாண்டுள்ள விதம் மொழிக்கே தனிப் பெருமையையும் அந்தஸ்தையும் ஏற்படுத்தியுள்ளது எனலாம். ஆங்கில இலக்கியம் உள்ள வரை இவரது படைப்புகளின் புகழ் நிலைத்து நிற்கும்.

1616 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் நாள் இயற்கை எய்தினார். இவர் மறைந்த நாளான ஏப்ரல் 23 ஆம் திகதி உலக புத்தக தினமாகக் கொண்டாடப்படுகிறது.

புத்தகங்கள் இல்லாத உலகை நம்மால் கற்பனைகூட செய்ய முடியாது. புத்தகங்களுக்கும் எமக்குமான உறவு பாடசாலைகளில் தொடங்கினாலும், பாடசாலைகளிலேயே முடிவதில்லை, நம் ஆயுள் வரை தொடர்கிறது. எந்தக் கால கட்டத்திலும் நம்மைக் கைவிடாத ஒரே நண்பன், புத்தகம் மட்டுமே. புத்தகங்கள் நமக்கு அளிக்கும் அற்புதங்கள் ஏராளம் . ஒவ்வொரு புத்தகமும் நாம் அறியாத பல கதவுகளைத் திறக்கிறது.

மனிதனது கண்டுபிடிப்புகளில் புத்தகம் மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது. எத்தனையோ சாதனையாளர்கள் உருவானதற்கும் , இன்று உருவாகிக் கொண்டிருப்பதற்கும் புத்தகங்களே காரணம் . புத்தகங்கள் இல்லாத வாழ்க்கை கிணற்றுத் தவளை போலத்தான் இருக்கும். புத்தகம் வாசிக்கும் பழக்கம் இல்லாதவர்கள் வாழ்க்கையின் பாதி சுகத்தை இழந்து விடுகிறார்கள் . ஒரு நல்ல புத்தகம் நமக்கு அளிக்கும் களிப்பும் , ஆறுதலும் மிக அதிகம். வாழ்க்கையே முடிந்துபோனதாக நினைத்து , மனதுடைந்து இருக்கும் சூழலில் உலகம் மிகவும் பெரியது. உன் வாழ்க்கையும் தான் என்று ஒரு புத்தகம் நம்மைத் தேற்றி ஆறுதல் சொல்கிறது.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: வீண் அலைச்சல் உண்டாகும். சக ஊழியர்களிடம் கவன மாகப் பேசுவது நல்லது. எடுத்த முயற்சிகள் கை கூடும். எதையும் சாதிக்கும் திறமையும், சாமர்த்தியமும் உண்டாகும். மனோதைரியம் கூடும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு இருக்கும். திடீர்க் கோபம் ஏற்படும்.



**இடபம்**: உங்களுக்குக் கீழ் வேலை செய்பவர்களின் செயல்களால் உங்க ளுக்குக் கோபம் உண்டாகலாம். நிதானமாக அவர்களிடம் பேசுவது நன்மை தரும். உத்தியோகம் தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். அலுவலகத்தில் உள்ள சக ஊழியர்கள், மேல் அதிகாரிகளிடம் வீண் பேச்சுக்களைத் தவிர்ப்பது நல்லது.



**மிதுனம்**: விருந்தினர் வருகை, குடும்பத்தினரின் ஆரோக்கியக் குறைவு ஆகியவற்றால் செலவு அதிகரிக்கும். அக்கம் பக்கத்தினருடன் சிறிய மோதல்கள் உண்டாகலாம். கவனமாக இருப்பது நல்லது.



**கடகம்**: வலியச் சென்று உதவுவதன் மூலம் வீண் பழி ஏற்படலாம். கவனம் தேவை. கோபத்தைத் தவிர்ப்பது நல்லது. வீண் பயணங்களும் அலைச்சலும் உண்டாகும். இடமாற்றம் ஏற்படலாம். உஷ்ணம் சம்பந்தமான நோய்கள் வந்து நீங்கும்.



**சிங்கம்**: தொழில், வியாபாரம் தொடர்பான அலைச்சல்களும் ஏற்படும். கவனமாக இருப்பது அவசியம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குக் கடுமையான வேலை இருக்கும். உத்தியோகம் காரணமாக வெளியில் தங்க நேரிடும். அலுவலகத்தில் அனுசரித்துச் செல்வது நல்லது.



**கன்னி**: குடும்பச் செலவுகள் கூடும். குடும்பம் பற்றிய கவலைகள் உண்டாகும். உறவினர்கள், நண்பர்களிடம் பேசும்போது நிதானமாகப் பேசுவது நன்மை தரும். நெருப்பு, ஆயுதங்களைப் பயன்படுத்தும்போது மிகவும் எச்சரிக்கை தேவை.



**துலாம்**: வீண் அலைச்சலும் பயணங்களும் ஏற்படலாம். நேரம் தவறி உண்பதைத் தவிர்ப்பது நல்லது. சாமர்த்தியமான பேச்சு லாபம் தரும். விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வாய்ப்புகள் கிடைக்கும்.



**விருச்சிகம்**: மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். முன்னேற்றம் காணப்படும். வியாபாரம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரிடும்.



**தனுசு**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைச் சுமை குறையும். முயற்சிகளில் சாதகமான பயன் கிடைக்கும். கடினமான காரியங் களையும், திறமையாகச் செய்து முடிப்பீர்கள்.



**மகரம்**: வாழ்க்கையில் புதிய முன்னேற்றம் ஏற்படும். புதிய தொடர்புகள் மூலம் இலாபம் உண்டாகும். மனம் மகிழும்படியான நிகழ்ச்சிகள் நடக்கும். புதிய நட்பால் மகிழ்ச்சி அடைவீர்கள்.



**கும்பம்**: மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். காரியத் தடைகள் நீங்கும். மற்றவர்களின் மீது இரக்கம் ஏற்பட்டு உதவிகள் செய்வீர்கள். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். பெரியோர்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும்.



**மீனம்**: தொழில், வியாபாரம் மூலம் லாபம் அதிகம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி கிடைக்கும். அந்தஸ்து உயரும். நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும்.

## நாளை

**சித்திரை-11 வியாழக்கிழமை | 24.04.2014**

திதி: தசமி மு.இ.07.55 வரை
நட்சத்திரம்: அவிட்டம்
பி.ப.01.46 வரை

சுபநேரம்: 07.30-09.00 வரை
இராகுகாலம்:.01.30-03.00 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...




### ஸ்ரீராம கிருஷ்ணரின் வாழ்வும் நோக்கமும்

ஒரு குறுகிய சமுதாயத்தில் ஆன்மிகம் ஆழமானதாகவும், சிறந்ததாகவும் விளங்குவது இயல்பே. குறுகிய ஓடையில் தண்ணீர் மிக வேகமாக ஓடும். ஆனால் பரந்த மனப்பான்மை கொண்ட ஒரு சமுதாயத்தில் நோக்கம் பரந்ததாக இருந்த போதிலும் அதனுள் ஆன்மிகத்தின் ஆழமும் சிறப்பும் குறைந்து இருப்பதைக் காண்கிறோம்.

ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கையோ வரலாற்றின் அனுபவங்களையே மாற்றி அமைக்கும் அளவுக்கு அமைந்துள்ளது. ஸ்ரீராமகிருஷ்ணரிடம் பலவித ஆன்மிக எண்ணங்கள் கடலையும்விட ஆழமாகவும், ஆகாயத்தைவிடப் பரந்ததாகவும் ஒன்றுகூடி விளங்குவது, ஒரு குறிப்பிடத்தக்க அரிய நிகழ்ச்சியே யாகும்.

ஸ்ரீராமகிருஷ்ணர் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் வேதத்துக்கு நாம் விளக்கம் காண வேண்டும். சங்கரரும் மற்ற விளக்கக்காரர்களும், வேதம் ஒரே உண்மையைத்தான் கூறுகிறது என்று சொல்லி ஒரு பெரிய தவறை இழைத்துவிட்டனர். ஆகவே தங்கள் கோட்பாட்டுக்கு எதிராக அமைந்துள்ள வேதப் பகுதியைச் சிதைத்து தங்களுக்குச் சாதகமாக விளக்கம் தந்த குற்றம் அவர்களையே சாரும்.

## பெண்கள் ஏன் அதிகம் பேசுகின்றனர்?



பாக்ஸ்பி2 மரபணுவின் வெளிப்பாட்டால் சுரக்கப் படும் பாக்ஸ்பி2 புரதம் பெண்களின் மூளையில் அதிகம் காணப் படுவதால் பெண்கள் ஆண்களைக் காட்டிலும் அதிகமாகப் பேசுகின்றனர்.

பெண்கள் அதிகம் பேசுவது ஏன் என்பதற்கான பதில் அண்மைக் கால ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. ஓர் உயிரியின் தோற்றம், செயல், பண்பு என்ற அனைத்தையும் கட்டுப்படுத்தும் காரணிகளாக அந்த உயிரியின் மரபணுக்கள் அமைகின்றன. இம்மரபணுவின் வெளிப்பாடானது உடலில் உற்பத்தி செய்யப்படும் புரதத்தின் மூலம் அமைகின்றது. ஓர் உயிரியில் காணப்படும் மரபணுவானது அவ்வுயிரியின் பெற்றோர்களிடமிருந்து இன செல்கள் வழியே பெறப் படுகின்றன. எனவே குழந்தைகளின் செயலும் தோற்றமும் அவற்றின் பெற்றோரைப்போல அமைகின்றன.

இந்தப்பண்புகளின் மாறுபாட்டில் சூழ்நிலையும் ஒரு குறிப்பிட்ட அளவில் தமது பங்கினைச் செலுத்தும் என்பதும் உண்மையே. ஒருசில பண்புகள் ஆண், பெண் என இனப்பாகுபாட்டுடன் காணப் படுகின்றன. ஆண் பெண்களுக்கிடையே உடல்ரீதியான அமைப்பு, நடை, குரல் முதலிய பண்புகளில் தெளிவான வேறுபாடுகள் காணப் படுகின்றன.

பொதுவாக பெண்கள் ஆண்களைக் காட்டிலும் அதிகமாக பேசுபவர்களாக உள்ளனர். அறிவியலாரும் இதனை பால் (sex) சார்ந்த பண்பாக ஏற்றுக் கொண்டுள்ளனர். பெண்கள் ஆண்களை விட அதிகம் பேசுவதற்கான காரணத்தை அறிய மேற் கொள்ளப்பட்ட அண்மைக்கால ஆய்வின் முடிவுகள் தற்பொழுது கடந்த வாரம் நியுரோ சயன்ஸ் (Journal of Neuroscience) என்னும் ஆய்வுப் பத்திரிகை யில் வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள மேரி லாண்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நரம்பியல் ஆராய்ச்சியாளர் மார்க்ரட் மெக்கார்த்தி மற்றும் உளவியலார் ஜெ மைக்கேல் பவ்வர் மனிதன் மற்றும் எலிகளில் மேற்கொண்ட விரிவான சோதனைகளின் முடிவின்படி பாக்ஸ்பி2 (Foxp2) என்னும் புரதமே இவ்வேறுபாட்டுக்குக் காரணம் எனக் கண்டறிந்தனர். பாக்ஸ்பி2 புரதத்தை மொழிப் புரதம் என அறிவியலாளர் அழைக்கின்றனர். இந்தப்புரதம் உற்பத்தி செய்யக் காரணமான பாக்ஸ்பி2 மரபணுவானது 2001 ஆண்டு கண்டறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்ட பல சோதனைகளும் மொழி குறித்த வேறுபாட்டுக்கான காரணத்தை உறுதி செய்தன. பாக்ஸ்பி2 மரபணுவின் வெளிப்பாட்டால் சுரக்கப்படும் பாக்ஸ்பி2 புரதம் பெண்களின் மூளையில் அதிகம் காணப் படுவதால் பெண்கள் ஆண்களைக் காட்டிலும் அதிகமாகப் பேசுகின்றனர்.

பெண்குழந்தைகளும் தமது வயதை ஒத்த ஆண் குழந்தைகளைக் காட்டிலும் விரைவாக அதிக வார்த்தைகளைக் கற்றுக் கொள்வதும் இதனால்தான்! சராசரியாக நாளொன்றுக்கு சுமார் 13000 வார்த்தைகளை ஆண் களைக் காட்டிலும் பெண்கள் பேசுகின்றனர் என்பது புள்ளி விவரம்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2 | | 6 | | 1 | 3 |
| | 8 | 3 | | 7 | | | 2 | |
| | | 9 | 8 | 4 | | | | 6 |
| | 6 | | | | 9 | | | 1 |
| 7 | | | | 1 | | | | 2 |
| 8 | | | 4 | | | | 5 | |
| 9 | | | | 3 | 7 | 2 | | |
| | 2 | | | 5 | | 7 | 3 | |
| 3 | 4 | | 6 | | 8 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 5 | 7 | 6 | 9 | 4 | 1 | 2 |
| 2 | 6 | 4 | 1 | 5 | 8 | 9 | 3 | 7 |
| 9 | 1 | 7 | 2 | 4 | 3 | 8 | 6 | 5 |
| 4 | 2 | 1 | 9 | 8 | 6 | 7 | 5 | 3 |
| 7 | 8 | 3 | 4 | 1 | 5 | 2 | 9 | 6 |
| 5 | 9 | 6 | 3 | 2 | 7 | 1 | 8 | 4 |
| 1 | 7 | 9 | 6 | 3 | 2 | 5 | 4 | 8 |
| 6 | 5 | 2 | 8 | 9 | 4 | 3 | 7 | 1 |
| 3 | 4 | 8 | 5 | 7 | 1 | 6 | 2 | 9 |

# உலகிலே மிகப்பெரிய முயல் வடிவம்



பெரிய முயல் வடிவம்

ஈஸ்டர் பண்டிகையையொட்டி சொக்லேட்டினால் உலகிலே மிகப் பெரிய முயல் வடிவமொன்று பிரேசிலில் தயாரிக்கப்பட்டிருந்தது.

சுமார் 3,856 கிலோகிராம் நிறை கொண்டதாக தயாரிக்கப்பட்ட இந்த முயலானது 4.1 மீற்றர் உயரமும் 1.9மீற்றர் அகலமும் கொண்டதாக அமைந்திருந்தது. இதனைத் தயாரிப்பதற்காக 6000 சொக்லேட் கட்டிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 9 கட்டுமான பணியாளர்கள் இணைந்து 5 நாள்களில் இந்த முயலை உருவாக்கினராம்.

பிரேசிலின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள கிரமடா சுற்று வட்டாரத்தில் வருடந்தோறும் ஒவ்வொரு ஈஸ்டர் பண்டிகைக்கும் சொகோ பெஸ்ட் என்ற வைபவம் நடைபெறுகின்றது.

இந்த வைபவம் பெருந்திரளான சுற்றுலா பயணிகளைக் கவரும் வகையில் நடத்தப்படுகிறது. இந்த வைபவத்தில் கலந்துகொள்வதற்காகவே சிசென் ஆர் எஸ் என்ற நிறுவனம் இந்த முயலை உருவாக்கியிருந்தது.


கடந்த 2010 ஆம் ஆண்டு தென் ஆபிரிக்காவில் தயாரிக்கப்பட்ட 3.010 கிலோகிராம் நிறை கொண்ட முயல் குட்டியின் சாதனையை பிரேஸில் தயாரிக்கப்பட்ட இந்த முயல் வடிவம் முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


# மரத்தின் மீது ஏறி நின்று இலைகளை மேயும் ஆடுகள்



எமது நாட்டில் உள்ள ஆடுகளுக்கு மரத்தில் ஏறத் தெரியாது. அதனால் ஆடு மேய்ப்பவர்கள் மரத்திலிருந்து இலைகளையும் கிளைகளையும் பறித்துப் போடுவார்கள். ஆனால் மொரோகோ நாட்டில் உள்ள ஆடுகள் பூமியில் மேய்வதற்கு புல், பூண்டுகள் இல்லாமையால் மரத்தில் ஏறி இலைகளைப் பறித்து உண்ணும் திறனைப் பெற்றிருக்கின்றன .

# மலைப்பாம்புகளை உடல் எங்கும் ஊரவிட்ட நபர்


மெக்லன் மலைப்பாம்புகளுடன்



நபரொருவர் தனது கைகளில் ஏற்பட்ட மிகப் பழைமையான காயங்களைப் போக்குவதற்காக நான்கு மலைப்பாம்புகளை உடலில் ஊரவிட்ட சம்பவம் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

ஸ்கொட்லாந்து, ஹெலன்ஸ்பிரக் பகுதியைச் சேர்ந்த மெக்லன் என்ற நபரே நான்கு மலைப்பாம்புகளை இவ்வாறு தனது உடலில் ஊரவைத்தவராவார்.


சுமார் 250 கிலோகிராம் நிறைகொண்ட பாம்புகளை இவர் தனது உடலில் சுமந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைகளில் ஏற்பட்ட பழைய காயங்களை ஆற்றுவதற்கு சிறந்த மருத்துவ முறை இதுவென நண்பர் ஒருவர் எனக்குக் கூறினார். இந்த மருத்துவ முறையானது மன அழுத்தங்களையும் குறைக்கின்றது என்று மெக்லன் கூறினார்.

இதேவேளை, நான்கு பாம்புகளும் சராசரி எனது உடலின் நீளம் கொண்டவையாக இருந்தன. அந்தப் பாம்புகளின் வழுக்கிச் செல்லும் தன்மை உடலுக்கு மிருதுவாக இருந்தது. ஆனால், பாம்புகள் எனது முகத்தைத் தீண்டும்போது மட்டும் சங்கடமாக இருந்தது என்று அவர் கூறினார். இந்தப் பாம்புகள் உடலின் மீது இருக்கும்போது மற்றொருவரின் உதவியின்றி எழுந்திருக்க முடியாது என்று அவர் தெரிவித்தார்.

# தசைவலி, மூட்டு வலியை குறைக்கும் விற்றமின் டி

தசைவலி மற்றும் மூட்டு வலியை விற்றமின் டி குறைக்கும் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உள்ளனர். ஐரோப்பிய நாடான ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னாவில் உள்ள, எலும்பு முறிவு மருத்துவமனையின் தலைவர் ப்ளோரியான் வெப்னர் இதுகுறித்துக் கூறியதாவது: விற்றமின் டி குறைவால், பைப்ரோமாயல்ஜியா என்னும் நோய் தாக்குகிறது. இந்த நோய் பாதித்தவர்களின் உடல் தசைகள் மற்றும் மூட்டுகளில், ஏற்படும் வலி குறைவதில்லை. இந்த வலிக்கு உட்படுவோர், தூக்கமின்மை, களைப்பு, மன அழுத்தம் மற்றும் நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். இத்தகைய நோயாளிகளுக்கு விற்றமின் டி யை போதிய அளவில் அளித்தால் குணமடைய வாய்ப்பு உள்ளது. நோய் முற்றிலும் குணமாகாவிட்டாலும் தசை வலி மற்றும் மூட்டு வலி பெருமளவு குறையும். இந்த ஆய்வுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட, 30 பேருக்கு, விற்றமின் டி மருந்துகள் அளிக்கப்பட்டன. இருபது வாரங்கள், விற்றமின் டி மருந்துகளை உட்கொண்டவர்களின் நீண்டநாள் வலிகள் பெருமளவு குறைந்தது கண்டறியப்பட்டது. அவர்களிடம் மன அழுத்தம் சிறிதும் காணப்படவில்லை என்று கூறினார்.



## கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் கற்பக விநாயகர்
ம.சி.க.வ.கூ.சங்க வளர்ச்சிக்கு
அரும்பாடுபட்ட பொருளாளர்
திருமதி வடிவாம்பிகை இந்திரராஜா அவர்களின்
அன்புக் கணவர்

**வைத்திய கலாநிதி**

### செல்வதுரை இந்திரராஜா

அவர்கள் 21.04.2014 இறைபதம் அடைந்தமையை இட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**உரு.கற்பக விநாயகர் ம.சி.க.வ.கூ.சங்க நிர்வாக சபையினர்.**

(47094) (7.6.3)

## நூலக வலுவூட்டல் நிகழ்வு இன்று

தென்மராட்சி, ஏப்.23

நாவற்குழி பொது நூலகத்தில் உலக புத்தக தினத்தையொட்டி இன்று நூலக வலுவூட்டல் நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இன்று காலை 8 மணி தொடக்கம் இந்த வருடம் நூலகத்துக்கு இடையேயான புத்தகங்களின் கண்காட்சியும் நாளை முன்பள்ளி மாணவர்களுக்கான நூலக வலுவூட்டல் நிகழ்வுகளும் போட்டி நிகழ்வுகளும் 28 ஆம் திகதி தரம் -4,5 மாணவர்களுக்கு மரம், செடி, கொடி மற்றும் மூலிகைகள் பற்றி காட்சிப்படுத்தலும் விளக்கமளித்தலும் இடம்பெறும் என்று நூலகர் திருமதி இ.சிவசுப்பிரமணியம் தெரிவித்தார். (வ-9)

## கண்ணீர் அஞ்சலி




21.04.2014 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த வைத்திய கலாநிதியும், முன்னாள் காளி அம்பாள் ஆலய பரிபாலனசபை போசகருமான

**Dr.செல்வதுரை இந்திரராஜா**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக் கின்றோம். (47095) (12.3.6)

***உரும்பிராய் காளி அம்பாள் ஆலய பரிபாலன சபையினர்.***

## மரண அறிவித்தல்



சிவநெறிச்செல்வர்

### சிவசண்முகவடிவேல்

(ஏழாலை மேற்கு, சுன்னாகம்)

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவநெறிச் செல்வர் சிவத்திரு சண்முகவடிவேல் நேற்று (22.04.2014) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவரத்தினம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், திருஞானச்செல்வம், தில்லைநடேசன், சறோஜினிதேவி, இலட்சுமிகாந்தன், சாரதாதேவி, சண்முகதாஸ் மற்றும் இலங்கை அரசாங்க புகையிரதநிலைய ஓய்வுநிலை அதிபரும், அகில இலங்கைச் சமாதான நீதிவானும் சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளருமான சிவஞானசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஏழாலை மேற்கில் அவரின் இல்லத்தில் இன்று (23.04.2014) புதன்கிழமை ந.ப.12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உசத்தியோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(47105)(12)(3.6)

## மரண அறிவித்தல்

### சிவகுரு அருள்பிரகாசம்

(முன்னாள் உத்தியோகத்தர், தலைமைக் காரியாலயம் ச.தொ.ச C.W.E)



யாழ்ப்பாணம், ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு, கல்லடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு அருள்பிரகாசம் நேற்று (22.04.2014) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும்,காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அகிலாண்டேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், செல்வப்பிரகாசம், விநாயகப் பிரகாசம் மற்றும் சித்திவிநாயகப்பிரகாசம், செல்வ விநாயகப் பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரவிச்சந்திரன் (ஆஸ்திரேலியா), சுமதி(சட்டத்தரணி),கலாவதி(கலா), வசந்தி (பபா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மினி(ஆஸ்திரேலியா), நல்லநாதன்(VN International), பரம்சோதி(கனடா), ஆனந்தராஜா(ஹம்சாம் விலா -உரிமையாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரேவதி (உதவி முகாமையாளர்-சம்பத்வங்கி, நிந்தவூர்),கோபிநாத் (முகாமையாளர், யூனியன்வங்கி, மட்டக் களப்பு), பிரிசாந்தி(சட்டத்தரணி,கனடா), போல்தர்ஷன்(கனடா), ஜனார்த்தனி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம், செங்கலடி),நரசிம்மன் (வங்கி அதிகாரி பான் ஏசியா வங்கி, காத்தான்குடி), சங்கீரணி (மாணவி,HNDAமட்டக்களப்பு),மாதுரி (லண்டன்), சுமேதன்(லண்டன்), ரம்யா (மருந்தகவியலாளர்-Cargills), சோபிகா(வங்கி உத்தியோகத்தர், சம்பத் வங்கி மட்டக்களப்பு), கிஷோக்குமார் (ஆஸ்திரேலியா),டங்கன் (ஆஸ்திரேலியா),அஷோக்குமார்(ஆஸ்திரேலியா), சரண்யா (ஆஸ்திரேலியா), குகனேசன் (ஆஸ்திரேலியா),டிலக்ஷி(ஆஸ்திரேலியா),சஞ்சீவன்,சஜீவன் (மாணவர்கள்-றோயல் இன்ஸ்ரிரியூட்,சர்வதேச பாடசாலை)ஆகியோரின் அன்புப் பேரனும், ஆதேஷ் (கனடா), அச்யூத், ஹிமானி, ஜேட்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (24.04.2014) வியாழக்கிழமை, அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப.4.00 மணிக்கு நாவலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

29,நியூ டச் பார் வீதி,கல்லடி. தொ.பே: 065 222 3992 (47092)(5.6.3) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் ஏரம்பமூர்த்தி (கண்ணன்)

(உரிமையாளர்,கணேஷா ஹாட்வெயர்-சாவகச்சேரி)

மீசாலை மேற்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஏரம்பமூர்த்தி (கண்ணன்) நேற்றுமுன்தினம் (21.04.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சறோஜினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் தில்லையம்மா தம்பதியரின் அன்புக் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சின்னையா மற்றும் நாகம்மா தம்பதியரின் அருமை மருமகனும், துவாரகி(தரம் 09 மாணவி,யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கீர்த்திகன்(தரம் 06 மாணவன்,யா/சாவ.இந்துக்கல்லூரி) ஆகியோரின் அருமைத்தந்தையும், பராசக்தி, பரராசசிங்கம், சகுந்தலாதேவி, இராஜேஸ்வரி, பாலேந்திரன் (சுவிஸ்), இராசரத்தினம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கராசா,கலாநிதி, குணநேசராசா, யோகராசா, அருள்றாதாறமணி (சுவிஸ்), ஜெயவாணி (பிரான்ஸ்), யோகம்மா, இராசகுலசிங்கம் (UK), காலஞ்சென்ற சிறீபாலகிருஷ்ணன் மற்றும் சிறீபுஸ்பநாதன், ஈழமகாதேவி, சிறீநகுலேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும்,துரைராசா,தனலோஜினி(UK), ரஞ்சிதா, சீவரத்தினம், பிரமிளா(UK) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், தர்சனா-கஜேந்திரன் (UK),பர்சனா-கிருஷ்ணகுமார், பர்மினா- ஈஸ்வர பவான், இளங்கோ(சுவிஸ்), இளங்கீதன்,துளசிகா,சயன்(UK), இராகவி (UK),வனோஜா ஆகியோரின் அன்பு மாமனும், சங்கீர்த்தனா, சங்கவி, பிரதாப்(சுவிஸ்),பிரதீப்(சுவிஸ்), பிரகாஸ்(சுவிஸ்), அஸ்வின் (பிரான்ஸ்), முகுந்தன்(UK), மிகிரன்(UK),அபிரா(UK),தாமிரா(UK) ஆகியோரின் அருமைச்சித்தப்பாவும், கோபிதன்(UK),ஜெய்ஷன்(UK), ஆரபி(UK), திஷானா(UK), நிகிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2014) புதன்கிழமை மு.ப.10.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**மனைவி, குடும்பத்தினர்.**
077 7041612

மீசாலை மேற்கு, மீசாலை.

(சி/7677)(5.6.3)

வலி. தெற்கு பிரதேச சபை
23 APR 2014
பொது சன நூலகம்
ஏழாலை

## சமய சந்நிதிகளில்

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தல் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணி முதல் நடேசர் அபிஷேகம் நடைபெறவுள்ளது.
நாளை வியாழக்கிழமை பகல் திருநாவுக்கரசர் குருபூசை விசேட பூசை வழிபாடுகளுடன் நடைபெறும். (ஒ-28)

♦♦♦

வடமராட்சி, ஏப். 23
மேலைப் புலோலி, வாணர் குடியிருப்பு, சொக்கன் கலட்டி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகின்றது.
30 ஆம் திகதி புதன்கிழமை நவசக்தி அர்ச்சனையும், எதிர்வரும் முதலாம் ஆம் திகதி வியாழக்கிழமை திரு விளக்குப் பூசையும், 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 1008 வில்வ அர்ச்சனையும், இறுதி நாளான 10 ஆம் நாள் உற் சவமான 3 ஆம் திகதி சனிக்கிழமை மணவாளக் கோலத் திருவிழாவும், 1008 சங்காபிஷேகமும் இடம்பெற்று அலங்கார உற்சவத் துடன் நிறைவுறும். (ஒ-173)

♦♦♦

யாழ்ப்பாணம், ஏப்.23
தெல்லி மாநகர் - வீணாக்கடவை அருள்மிகு காசி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.
இன்று மாலை 5 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், இரவு 8 மணிக்கு சப்பறத் திருவிழாவும், நாளை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், மாலை 5 மணிக்கு கொடி யிறக்கமும் நடைபெறும். (ஒ)

♦♦♦

சாவகச்சேரி, ஏப்.23
சாவகச்சேரி மட்டுவில் மத்தி அருள்மிகு ஞான வைரவர் ஆலயத்தின் அலங்கார உற்சவம் கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.
எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அஷ்டோத்திர (108) சங் காபிஷேகமும், தொடர்ந்து விஷேட பூசையும் இடம்பெற்று மகேஸ்வர பூசை இடம்பெறும்.
மாலை 4 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று சுவாமி உள்வீதி உலா வந்து முத்துச்சப்பறத்தில் வெளிவீதி உலா வருவார்.
உற்சவ காலத்தில் ஸ்ரீ ஞான வைரவர் பஜனை குழுவினால் மாலை 6.30 மணிக்கு விசேட பஜனை நிகழ்வுகள் நடத்தப்படும். (ஒ)

## கட்டடங்கள் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.23
புத்தூர்ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் புதிய கட்டடங்களைத் திறந்து வைக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.
கல்லூரி அதிபர் இ.இராஜ மகேந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன கலந்து கொள்வார். (க)

## ஆலய பரிபாலன சபைத் தெரிவு

கைதடி கிழக்கு கலை நகர் அருள்மிகு கர விடை அண்ணமார் ஆலயத்தின் இந்த ஆண்டுக்கான ஆலய பரிபாலன சபைத் தெரிவுக்கூட்டம்கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.
இந்த ஆண்டுக்கான ஆலயபரிபாலனசபைத் தலைவராக இ.முருகனும், செயலாளராக வை. விஜிதரனும், பொருளாளராகக.தயாளனும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 11 பேர் கொண்ட புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (ஒ-288)

## நாவலர் மகா வித்தியாலயத்தில் திருநாவுக்கரசருக்கு குருபூசை

யாழ்ப்பாணம், ஏப்.23
வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசையும், இறுவட்டு வெளியீடும் நாளைய தினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன.
பாடசாலை அதிபர் சு.திருநாவுக்கரசு தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும், சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தியும் கலந்து கொள்வார்கள். (க)

### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி சர்வலோகேஸ்வரி சிவானந்தம் அவர்களின் அன்பு மாமி
**திருமதி மாணிக்கம் ஆறுமுகம்**
20.04.2014 அன்று இறைபதமடைந்து விட்டார். அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெவிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரிக் கழகம்.
(C/13509) (2.6.3) யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

### 45ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் சிவசுப்பிரமணியம் கஜானன்
(பழைய கமம் முரசுமோட்டை)
பிறப்பு 01.02.1995 — இறப்பு 09.03.2014
எமது அன்புச் செல்வமே!
நீ எம்முடன் வாழ்ந்த நாட்கள் மறக்கவே முடியாதவை!
பெற்றோரும், உற்றார், உறவினரும், நண்பர்களும்
உனது திடீர் பிரிவால் கலங்கி நிற்கின்றோம்
அந்த நாள்களை எண்ணிவாடுகின்றோம்
உமது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.
இன்று 23.04.2014 எமது இல்லத்தில் நடைபெறும் 45ஆம் நாள் நினைவு நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்குமாறும் வேண்டுகின்றோம்.
பழைய கமம், முரசுமோட்டை. — சிவசுப்பிரமணியம் குடும்பத்தினர்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



முருகேசு உதயசூரியன்
(சூரி, வவி)
திதி: நவமி
மலர்வு 16.04.1966
உதிர்வு 04.05.2013
நூறு ஆண்டு காலம் என்னோடு
வாழ்வாய் என்று இருந்தேன்–ஆனால்
நீ பாதிக்காலம் என்னோடு
வாழ்ந்து விட்டு வெகுதூரம் மறைந்து சென்றாய்
கைதடி, ஏ.பி.சி.லேன். — உன் பிரிவால் வாழும் மனைவி. (47034)(4.6.3)

### மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



விமலநாதன் கஜகுகன்
முத்தாக 20.05.1987
வித்தாக 23.04.2011
மூன்றாண்டுகள் என்ன
முப்பதாயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
உங்கள்
அன்பு முகம் எங்கள் மனதை விட்டு நீங்காது
இல. 91, சக்திபுரம், உருத்திரபுரம். — குடும்பத்தினர், நண்பர்கள். (43444)(3.6.4)

### நன்றி நவிலல்

எனது பெற்றோர்
**அமரர்கள் இராசையா - சரஸ்வதி**
நினைவாக யாழ்/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான நான்கு பரப்புக் காணியும் நான்கு வகுப்பறைக் கட்டடத் தொகுதியும் அமைத்து அதற்கு **இராசையா - சரஸ்வதி மண்டபம்** எனப் பெயர் சூட்டச் சந்தர்ப்பம் வழங்கிய அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை சமூகத்தினருக்கு முதற்கண் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் 06.04.2014 அன்று நடைபெற்ற கட்டடத் திறப்பு விழாவிற்கு என்னையும் எனது குடும்பத்தினரையும் அழைத்துக் கௌரவப்படுத்திய கல்விசார் அறிஞர்கள், சமயத் தலைவர்கள், பெரியோர்கள், சமூக ஆர்வலர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் எனது சேவையைப் பாராட்டி "இராஜ கிரீடம்" சூட்டிய பாடசாலை அதிபர் திரு.சண்.வாமதேவன் அவர்களுக்கும் மற்றும் அவருடன் இணைந்த ஆசிரியர், மாணவர் சமூகத்தினருக்கும் "செங்கைப் புரவோன்" எனும் பட்டம் வழங்கிக் கௌரவித்த யாழ் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா அவர்களுக்கும், மேலும் என்னைப் பாராட்டிப் பேசி, பொன்னாடை போர்த்தி, வாழ்த்துப்பா வழங்கி, மலர்மாலை அணிவித்து வாழ்த்தி வணங்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் **என் சார்பாகவும் என் குடும்பத்தினர் சார்பாகவும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.**

மேலும் 09.04.2014 அன்று எனது மணிவிழாவினைக் கருணாலய இல்லச் சிறுவர்களுடன் சிறப்பாகக் கொண்டாடுவதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித்தந்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், வாழ்த்துரை, வாழ்த்துப்பா மலர்மாலை அணிவித்து வாழ்த்தியவர்களுக்கும், பத்திரிகை, கடிதம் மூலம் வாழ்த்திய அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(47102) (2.6.3)
**இராசையா சரஸ்வதி குடும்பத்தினரும்**
**இராசையா குவேந்திரநாதன் குடும்பத்தினரும்**
**ராஜா பிளாசா**, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **சகுந்தினி**
(வடமராட்சி வலய முகாமைத்துவ உதவியாளர்)
மலர்வு 26★11★1974
உதிர்வு 23★04★2013
ஓராண்டு தானென்ன ஓராயிரம் ஆண்டுகள்
ஓடி மறைந்தாலும் – எம்மனதைவிட்டு
ஓயாது உங்கள் நினைவு
கல்யாண வாழ்வுகண்டு களிப்புற்ற எம்மை
கண்ணீரில் மிதக்கவிட்டு ஓராண்டு ஆகு முன்னர்
ஓடி விட்டீர் விண்ணுலகம்.
கந்தப்பளவு வீதி, அல்வாய் வடக்கு, அல்வாய். (47059)(3.6.4) — உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **ஞானேந்திரன் பிரசாத்**
(மூன்றாம் வருட முகாமைத்துவபீட மாணவன்)
மாய உலகில் 04.07.1989
தூய உலகில் சேர 23.04.2013
மாய உலகில் வாழ விரும்பாமல்
தூய உலகில் வாழ நினைத்து
விரைந்தனையோ!
ஆண்டொன்று கடந்தாலும்
உம் அன்பின்
திருமுகத்தை மறக்கலாகுமோ!
தங்கள் ஆத்மா இறைவனடி சேர
இன்றும் பிரார்த்திக்கின்றோம்.
**குடும்பத்தினர்.**
இருபாலை-கிழக்கு, கோப்பாய்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இ.ஜெகதீஸ்வரன் அவர்களின் பாசமிகு சகோதரி திருமதி




### ரூபரத்தினேஸ்வரி சிவயோகநாதன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும்.
(47106) (2.6.3) பிரதேச செயலகம், தீவகம் தெற்கு, வேலணை.

## கண்ணீர் அஞ்சலி

### வைத்தியகலாநிதி செல்வதுரை இந்திரராஜா



வைத்தியகலாநிதி செ.இந்திரராஜா அவர்கள் எமது கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவன். பழைய மாணவர் சங்கத்தின் உபதலைவர்களில் ஒருவர். மாணவர்களின் தாக சாந்திக்காக விளையாட்டு மைதானத்தில் கிணறு ஒன்றை அமைத்துக் கொடுத்தவர். கலை கலாசார மேம்பாட்டுக்காக கல்லூரி வளாகத்தில் திறந்த வெளி கலை அரங்கு ஒன்றை அமைத்துத் திறந்து வைத்தவர். இலைமறைகாய்போல் பல ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவியவர். எமது சங்கத்திற்கு ஆலோசனைகள், அறிவுரைகள் பல கூறி வழி நடத்தியவர். இன்று எம்மை விட்டுப் பிரிந்து கற்பக விநாயகரின் பாதங்களை அரவணைத்துக்கொண்டார். அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தவர்களுக்கும் உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம் (47100)(3.6.4)
உரும்பிராய் இந்துக்கல்லூரி, உரும்பிராய்.

## ஆராதனை மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.23

ஸ்ரீ சத்தியசாயி ஆராதனை மஹோற்சவம் நாளை மறுதினம் 24 ஆம் திகதி வியாழக் கிழமை இடம்பெறவுள்ளது.

இந்த ஆராதனை மஹோற்சவம் யாழ்ப்பாணம் சேர்.பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்ச்சிகள் காலை, பிற்பகல் என இரண்டு பிரிவுகளாக இடம்பெறவுள்ளன. (க)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு மணியகாரன் (ஒழுங்கை) லேனில் கிணற்றுடன் சுற்றுமதில் கட்டப்பட்ட 3¾ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.

(46294) (12.3.6) தொடர்பு: 077 554 6523

## மணப்பெண் தேவை

யாழ்.இந்து, இத்தாலியில் PR உள்ள மணமகனுக்குப் படித்த அழகான மணப் பெண் தேவை. 1974, 7 இல் சூரியன் செவ்வாய் சேர்ந்துள்ளது. கிரகபாவம் 65.

தொடர்பு: 077 7164353 (C/7679)(2.6.3)

## வீடு வாடகைக்கு

கண்டி வீதி, சாவகச்சேரியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடும், சண்முகம் ஒழுங்கையில் சாதாரண வீடும் வாடகைக்கு உள்ளன.

தொடர்பு: 077 995 2699 (43621) (7.6.3)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி விஜயமாலா சண்முகரட்ணம் அவர்களின் அன்பு மாமி



### திருமதி பூரணலட்சுமி செல்வரத்தினம்

அவர்கள் அமரத்துவம் எய்தியமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக்கழகம்
(47107)2.6.3) யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொதுநூலகத்தில் கடமைபுரியும் அருணாசலம் சிவசுதன் அவர்களின் அன்புத் தாய்



### திருமதி கனகம்மா அருணாசலம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

அவர்கள் 21.04.2014 ஆம் திகதி காலமானதையொட்டி அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தவிசாளர், செயலாளர், உத்தியோகத்தர்கள்.
(C/7678) (2.6.3) சாவகச்சேரி பிரதேச சபை ஊழியர் நலன்புரி சங்கம்.

## மரண அறிவித்தல்

### ஜோசப் அப்பொலி அன்ரனி

(இளைப்பாறிய தபாலதிபர் - தரம் I)



யாழ்ப்பாணம் பழையபூங்கா வீதியைப் பிறப்பிடமாகவும், கூழாவடி ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட ஜோசப் அப்பொலி அன்ரனி (இளைப்பாறிய தபாலதிபர் - தரம் I) நேற்றுமுன்தினம் (21.04.2014) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான சரவணமுத்து - அன்னப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ் சென்ற யசிந்தாபியாற்றிஸ் (கதிரமலை)யின் அன்புக் கணவரும், டக்டஸ்பசில், பெனடின் கௌரி யோகேந்திரன் (அஞ்சல் அலுவலகம், மானிப்பாய்), பாலேந்திரன் (அஞ்சல் அலுவலகம், மானிப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிறேமா, ஸ்ரீலிங்கநாதன், கேமநளினி (முன்பள்ளி இணைப்பாளர், சண்டிலிப்பாய்க் கோட்டம்), லுசிந்தா தர்மினி (ஆசிரியை - மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும், குளோட்மரினோ, எமில் - றொமாரியோ, பொலி அன்று, ஜெரி அஞ்சலோ ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை அவரது இல்லத்தில் நேற்று (22.04.2014) செவ்வாய்க்கிழமை நடைபெற்று, பூதவுடல் அவரது விருப்பத்திற்கு ஏற்ப யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு ஒப்படைக்கப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 125 0259/
077 722 2080

கூழாவடி,
ஆனைக்கோட்டை. (47089) (12-3-6)

## ஊர்கூடி நின்று பேர் பாடி அஞ்சலிக்கின்றோம்

### சுப்பிரமணியம் ஏரம்பமூர்த்தி (கண்ணன்)

உரிமையாளர், கணேசா ஹாட்வெயர்ஸ் –சாவகச்சேரி



அன்னாரின் மறைவைக் கேட்டுத் தாங்கொணாத் துயருறும் நாம் அவரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

சுந்தர வதனங் கொண்ட தூயவா எங்கே போனாய்?
அந்தரித்தலறுகின்றோம் அண்ணலே எங்கே போனாய்?
வெந்துயர் எமக்குத் தந்து வெற்றுடல் ஆனாய் ஐயா !
அந்தமில் அமர வாழ்வு அடைந்து நீ அமைதி காண்க!

உறவு கொண்ட உள்ளமெல்லாம் ஊமையாய் அழுகிறதே!
பொறை மிகுந்த பூ முகத்தை பூமியில் நாம் இழந்தோமே
கண்ணா! கணேசா முதல்வா எம் சோதரன் போல்
மண்ணில் வாழ்ந்தவனே! மனமுடைந்தோம்! போனாயோ?

ஊர்கூடி நின்று பேர்பாடி அஞ்சலிக்க
ஒன்றுமே பேசாமல் இது என்ன தூக்கமையா?
காலமெல்லாம் உந்தன் கலைமுகம் எம் மனம் வாழும்
கோல நினைவுகள் இக் குவலயத்தில் தினம் வாழும்

கண்ணென எமக்குள் வாழ்ந்த கண்ணனே.....
கனியே, பாகே, கருத்தெலாம் நிறைந்து நின்ற
உன்னையா நாங்கள் தோற்போம் உளந்தடுமாறுதையா.......
எண்ணியே வேண்டுகின்றோம் இறைகடல் எய்தி வாழ்க.......
அன்பின்உடன்பிறப்பே அரனார் திருவடிக்கீழ்
அமர்ந்தே இன்புறுக! அகம் நெகிழ்ந்து அஞ்சலித்தோம்!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உரிமையாளரும் ஊழியர்களும்,

அருள்விநாயகர் மோட்டோர்ஸ்
108, ஸ்ரான்லி றோட்,யாழ்.

அருள்விநாயகர் றேடர்ஸ்
106, ஸ்ரான்லி றோட்,யாழ்.

அருள் நிலா நகைமாடம்
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அருள் விநாயகர் மோட்டோர்ஸ்
A9 வீதி, சாவகச்சேரி.

(சி/13508) (5.6.3)

23 APR 2014

# அக்கரையில் யாரும் குடியமரவேயில்லை; ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கூட்டமைப்பு

தொகுப்பு: தி.அமுதன்

*யாழ்.ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைமையின் கீழ் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் இடம்பெற்ற விடயங்கள் குறித்த தொகுப்பு நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது அதன்தொடர்ச்சி இன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

இதன் பின்னர் மீள்குடியமர்வு தொடர்பில் கடந்த கூட்ட அறிக்கையில் இருந்து தொடங்கியது விவாதம். கடந்த கூட்ட அறிக்கையில்மக்களின் மீள்குடியமர்வுக்காக காணி துப்பரவு செய்யப்படுகின்றது என்று சொல்லப்பட்டுள்ளது. இது மக்கள் மீளக்குடியமரவா அல்லது இராணுவம் இருக்கவா?.

வலி.வடக்கு மீள்குடியமர்வுக்காக, இடம்பெயர்ந்துள்ள மக்களிடம் சொந்தக் காணி உள்ளதா? இல்லையா? என்று தகவல் திரட்டப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. அந்த தகவல் திரட்டப்பட்டுள்ளதா? என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கேள்வியைத் தொடுத்தார்.

இதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காணி துப்பரவு செய்யப்பட்டது மக்கள் குடியமரத்தான் என்றும், திரட்டப்பட்ட தகவல்கள் தரலாம் என்றும் பதிலளித்து விடயத்துக்கு முற்றுப் புள்ளி போட முற்பட்ட போதும், சரி எங்கே மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்? என்று அவைத் தலைவர் அடுத்த கேள்வியைத் தொடுத்தார். அக்கரையில் 54 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளன என்று அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

அவர்களை குடியேற்றினீர்களா ? குடியமர்த்தியுள்ளீர்களா என்று கேள்வியைத் தொடுத்த சுரேஷ் பிரேமசந்திரன், அக்கரையில் மக்கள் யாருமே குடியமரவில்லை என்று சொன்னார். அது தொடர்பில் அமைச்சர் கோப்பாய் பிரதேச செயலாளரிடம் கேட்க, அவர் அங்கு 50 குடும்பங்கள் குடியமர்ந்துள்ளன என்று தெரிவித்தார். அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமசந்திரன், அங்கு மக்கள் யாருமே குடியமரவில்லை என்று விடாப்பிடியாக நின்றார். இறுதியில் அமைச்சர் தான் அன்று மாலையே அங்கு சென்று பார்ப்பதாகச் சொல்லி விடயத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

இதன் பின்னர் வலி.வடக்கு மீள்குடிய மர்வுக்கு தீர்மானம் நிறைவேற்றியதுடன் விடயம் முடிவுக்கு வந்தது. இதன் பின்னர் முதன் முறையாக அரச அதிகாரி ஒருவர், கூட்ட அறிக்கையில் தனது திணைக்களம் தொடர்பில் பிழையாக தகவல் வெளிவந்துள்ளமையைச் சுட்டிக்காட்டினார். கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாநகரசபை முதல்வருடன் தர்க்கம் புரிந்த கால்நடை அபிவிருத்தித் திணைக்கள பிரதிப் பணிப்பாளரே அந்தத் தவறைச் சுட்டிக்காட்டினார்.

இதன் பின்னர் அடுத்த கட்ட விவாதம் கல்வி விடயத்தில் தொடங்கியது. அதிபர் தரத்திலுள்ளவர்கள் பலர் பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பணிபுரிவது தொடர்பில் திடீரென்று ஒருவர் கேள்வி கேட்டார். உடனே நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், "நீங்கள் யார் என்பதை முதல்ல சொல்லுங்கோ?" என்று கேட்டார். அமைச்சரின் கல்வி இணைப்பாளர் என்று அவர் பதில் சொன்னதுதான் தாமதம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து உறுப்பினர்களும், "இங்க இணைப்பாளர்கள் என்று சொல்லிக் கொண்டு கண்டவையெல்லாம் கேள்வி கேட்கேலாது. மக்கள் பிரதிநிதிகள் கேள்வி கேட்கலாம். நீங்கள் இணைப்பாளர் என்று சொல்லிக் கொண்டுவருவியள் என்றால் அடுத்த கூட்டத்தில நாங்களும் ஆக்களைக் கொண்டு வருவம்" என்று சிறீதரன் போட்ட போட்டுடன் எழும்பிய செல்வ வடிவேல் பேசாமல் அமர்ந்தார்.

கல்வி தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டுக் கொண்டிருக்கையில் பூதாகரமான சர்ச்சை பலாலி ஆசிரியர் கலாசாலை விடயத்தில் வெடித்தது. நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, பலாலி ஆசிரியர் கலாசாலை எங்கே? என்று கேட்டதுடன் தொடங்கிய கேள்வி பெரும் சர்ச்சையைத் தொடக்கியது. விநாயகமூர்த்தி எம்.பி. இடையிடையே கதைத்தாலும், கதைக்கும் போதெல்லாம், நான் இது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில பேசினனான் என்று சொல்லிச் சொல்லியே சூடான சபையில் கொஞ்சம் சிரிப்பும் வரச்செய்தார்.

கல்வியியற் கல்லூரிகள் வந்தமையால், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் தேவைகள் இல்லை என்று அமைச்சர் டக்ளஸ் மறுத்துரைக்க நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமசந்திரன் போர்க் கொடி தூக்கினார். வடக்கு மாகாணத்தின் முக்கிய கல்விச் சொத்தான பலாலி ஆசிரியர்கலாசாலையை இராணுவத்தினரிடமிருந்து மீட்டெடுப்பதும் அங்கு மீளவும் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதும் தொடர்பில் தீர்மானம் எடுப்பது நல்ல விடயம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய கல்வி அமைச்சர் இங்கு வருகின்றார். அவருடன் பேசி இதைத் தீர்ப்பம் என்று டக்ளஸ் பதிலுரைக்க, இல்லை தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று விடாப்பிடியாக இருந்தனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்.

ஆனாலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்றுக் கொள்ளவதாக இல்லை. தேசிய கல்விக் கொள்கையை முன்வைத்து, அதன்படி தற்போது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின்ர தேவை குறைந்து செல்வதாக சுட்டிக்காட்டி, தீர்மானம் நிறைவேற்றுவதைத் தள்ளிப் போட்டார். கல்வி அமைச்சின் செயலாளரிடம், "ஆசிரியர் கலாசாலையிலை எத்தின பேர் படிக்கினம்?" என்று கேட்க, அவரும் "40 பேர் தான் இப்ப இருக்கினம்" என்று பலாலி ஆசிரியர் கலாசாலை தேவையில்லை என்ற தொனியிலேயே பதில் தெரிவித்தார்.

இது நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷுக்கு கடுமையான ஆத்திரத்தை கிளப்ப, சாடிக்கேற்ற மூடி மாதிரி, அமைச்சருக்கேற்ற செயலாளர் என்று கடிந்து கொண்டார். அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்களும் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் ஒற்றைக் காலில் நின்றனர். அமைச்சர் டக்ளஸ், இது தொடர்பில் மத்தியும் - மாகாணமும் கலந்து பேசட்டும் என்றார். இதன்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் "மாகாண அமைச்சருக்கு இது பற்றிய அதிகாரம் இல்லை" என்று தெரிவிக்க, அமைச்சர் டக்ளஸ் "அதிகாரமில்லையா? அறிவில்லையா?" என்று வில்லங்கமாகக் கேட்டார். அதற்கு சிறீதரன் இதைக் கேட்கிறவருக்குத்தான் அறிவில்லை என்று டக்ளஸுக்கு சரியான போடு போட்டார்.

இறுதியில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கூட அதை வலியுறுத்தினார். மிகப் பிரபலமான மஹரகம ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையை இன்று அவர்கள் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கல்விக் கூடமாக மாற்றி வைத்திருக்கின்றனர். அதேபோல் நாமும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை, போரினால் பாதிக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கான கல்விக் கூடமாக மாற்றலாம் என்று அமைச்சர் டக்ளஸின் தேசிய கல்விக் கொள்கைக்கு அடி போட்டார்.

விவாதம் நீண்டு செல்வதையடுத்து இணைத் தலைவர்கள் இருவரும் தங்களுக்குள் குசுகுசுத்துப் பேசிக் கொண்டனர். அதன் பின்னர் வடக்கு முதலமைச்சர் பேசினார். அவரும் டக்ளஸ் சொல்வதை ஒத்து ஊதிப் பேசினாலும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுவதாக இல்லை. இதனால் விவாதம் மீண்டும் நீண்டது. இதன் போது விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், இலங்கையின் தேசியக் கொள்கை என்பது தமிழர்களை அழிக்கின்றது தான் என்று காட்டமாகச் சொல்ல, இடையே மூக்கை நுழைத்த சந்திரகுமார் "அவர் பெரிய விஞ்ஞானி மாதிரி கதைக்கின்றார்" என்றார்.

ஐங்கரநேசன் கோபத்தின் உச்சத்துக்கு சென்றுவிட்டார். "நான் விஞ்ஞானி மாதிரி கதைக்கேல்ல. ஐங்கரநேசனாகத் தான் சொல்லுறன்" என்று கடும் பிடியாகக் கத்தினார். "நீங்கள் சொல்லுறதை கேக்கிறதுக்கு நாங்கள் வரேல்ல" என்று ஐங்கரநேசன் சொல்ல, "நீங்கள் சொல்லிறதை நாங்கள் கேக்க இங்க இருக்கேல்ல" என்று டக்ளஸ் திருப்பிச் சொன்னார். இதன் போது சிவாஜிலிங்கம், "உங்களுக் கொண்டும் இங்க வீட்டோ அதிகாரம் தரவில்லை. நீங்கள் நினைச்ச மாதிரி முடிவெடுக்க" என்று டக்ளஸுக்கு சரியான பதிலடி கொடுத்தார்.

இதன் பின்னர் சந்திரகுமார் புதுக்கதையொன்றை விட்டார். "இது தீர்மானம் நிறைவேற்றும் சபையல்ல. இனிவருங் காலத்தில அதைத் தவிர்ப்பம்" என்று நழுவ முற்பட, சுமந்திரன், "உங்களுக்கு தேவையானது என்றால் தீர்மானம் நிறைவேற்றுவீங்கள், இல்லையென்றா விடுவீங்கள். அந்தக் கதையெல்லாம் வேண்டாம், இந்தத் தீர்மானம் நிறைவேற்றியாக வேண்டும்" என்றார்.

இதன் போது சுரேஷ் பிரேமசந்திரன், "வேண்டுமென்றால் இதை வாக்கெடுப்புக்கு விட்டுப் பார்ப்பம். எத்தினை பேர் எதிர்க்கினம்" என்று ஒரு போடு போட்டார். அதற்கு அமைதியான அமைச்சர் டக்ளஸ், "இங்க வாக்கெடுப்பெல்லாம் தேவையில்லை" என்று சொல்லிவிட்டு தேசிய கல்விக் கொள்கைக்கு அமைய தீர்மானம் எடுப்பம் என்று மீளவும் தொடக்கப் புள்ளிக்கே வந்தார்.

இதன் போது அரச அதிபர், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் நோக்கத்தை சபைக்கு வாசித்துக் காட்டினார். இதுவரை காலமும் தீர்மானம் நிறைவேற்றப்படும்போது அவரும் அதை மறந்து ஆமோதித்துக் கொண்டிருந்து விட்டு, திடீரென ஞானோதயம் வந்ததைப் போல் குறித்த கூட்டத்தின் நோக்கத்தை வாசித்துக் காட்டினார். அதை வாசித்துக் காட்டி சுரேஷிடம் வாங்கியும் கட்டிக் கொண்டார்.

ஒரு மணி நேரத்துக்கு மேலாக பலாலி ஆசிரியர் கலாசாலை விடயம் விவாதிக்கப்பட்டும் இறுதிவரையில் எந்தவொரு முடிவும் எட்டப்படாமலேயே அடுத்த விடயத்துக்கு தாவினார்கள்.

இதன் பின்னர் துறைசார் அபிவிருத்தி ஆராயப்பட்டது. முதலில் விவசாயத்துறை தொடர்பில் பேசப்பட்டது. இதன் போதும் பாதீனிய ஒழிப்புத் தொடர்பில் நிதி ஒதுக்கீட்டு விடயத்தில் மாகாண அமைச்சருக்கும், மத்திய அரசின் விவசாயப் பணிப்பாளருக்கும் இடையில் பிடுங்குப்பாடு ஏற்பட்டது. பாதீனிய ஒழிப்பில் இராணுவத்தைப் பயன்படுத்துவதற்கு வடக்கு மாகாண அமைச்சர் விடாப்பிடியாக எதிர்ப்பாக நின்ற போதும், அமைச்சர் டக்ளஸோ, அவர்களைப் பயன்படுத்தினால் செலவு குறைவு என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன், மத்திய அரசின் விவசாயப் பணிப்பாளரிடம் இரண்டு கேள்விகளைத் தொடுக்க, அதற்குஅமைச்சர் டக்ளஸ்தேவானந்தா நக்கலாக, 'அ' கேள்வி, 'ஆ' கேள்வி என்று தனித் தனியாகக் கேட்கச் சொன்னார். அதற்குப் பணிப்பாளர் பதிலளித்து முடிய 'இ' கேள்வி இல்லையா? என்று நக்கலாக அமைச்சர் கேட்க நடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் 'இ' கேள்வி தான் கேட்பதாகத் தெரிவிக்க அரங்கில் சிரிப்பொலி எழுந்தது.

இதன் பின்னர் இந்திய அரசு விவசாயிகளுக்கு வழங்கிய உழவு இயந்திரப் பிரச்சினை கிளம்பியது. இதன்போது வடக்குக்கு வழங்கப்பட்ட உழவு இயந்திரங்கள் எங்கே? என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் டக்ளஸால் உடனடியாகப் பதில் வழங்க முடியாமல் போய்விட்டது. அடுத்த கூட்டத்தில் பதில் வழங்குவதாகச் சொல்லி ஒருவாறு அந்த விடயத்திலிருந்து தப்பித்துக் கொண்டார்.

அதன் பின்னர் தொண்டமனாறு நீரேரியின் தடுப்பணையிலிருந்து நீர் கசிவு விடயத்தை பொறியிலாளர் சுட்டிக்காட்டி நிதி கேட்டதில் தொடங்கியது பிரச்சினை. மேற்படி திருத்தத்துக்கு பெருமளவான நிதி தேவை என்றும் அதற்குரிய நிதி மூலத்தை இனங்காட்டுமாறும் கோரினார். உடனடியாக அமைச்சர் டக்ளஸும், நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரும் வடக்கு மாகாண சபை ஒதுக்க வேண்டியது தானே என்று சாதாரணமாகச் சொன்னார்கள்.

வடக்கு முதலமைச்சரோ இருந்தால்தான் ஒதுக்க முடியும் என்றார் அப்பாவித்தனமாக. அதையே ஓர் அடிப்படையாக வைத்துக் கொண்டு அடுத்த பிரச்சினையைக் கிளறினார் சந்திரகுமார், வடக்கு மாகாண நிதிச் செயலாளர் எங்கே? என்று தேடினார். வடக்கு மாகாணத்தின் நிதிச் செயலாளர் பிரதம செயலாளர் தான் என்பதை அவர் அறிந்திருக்க வாய்ப்பில்லை போலும். பிரதம செயலாளர் கூட்டத்துக்கு வந்து விட்டு இணைத் தலைவர்களிடம் சொல்லி விட்டு வெளியேறியதை அவர் கண்டு கொள்ளாமல் விட்டிருக்க வேண்டும்.

இதன்பின்னர், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் மாகாணத்துக்கு ஒதுக்கிய நிதியின் இலட்சணத்தை புட்டுப் புட்டு வைத்தார். இதற்கிடையில் சந்திரகுமார், "வடக்கு மாகாணத்தில் வாகனங்கள் வாங்கின காசை இதுக்கு ஒதுக்கியிருக்கலாம்" என்று போடு போட, அதற்கு அவைத் தலைவர் அந்தரப்பட்டுக் கொண்டு பதிலளித்தார். "நாங்கள் புதுசு" என்று சொல்ல அமைச்சரோ "என்னத்துக்கு" என்று நக்கலாக கேட்டார். "நாங்கள் வாகனம் வாங்கிறம். அது எங்களுக்கில்லை. வடக்கு மாகாண சபைக்குத்தான்" என்று சொல்லி ஒருவாறு சமாளித்தார்.

இதன் பின்னர் செம்மணியில் அமைக்கப்பட்டு வரும் பெற்றோல் செற் அமைப்பதற்கான நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார். இதன்போது அவைத்தலைவர் அவை பெரியாள் என்றபடியாத்தான் எல்லாத்தையும் மீறி அங்க கட்டுறார் என்று சொல்ல, சிறீதரனோ, அமைச்சர் டக்ளஸைப் பார்த்து "உங்கள விட பெரியாளா இருக்க முடியுமோ' என்று நக்கலாக ஒரு போடு போட்டார். அமைச்சரும் சிரிச்சுக் கொண்டு "நன்றி நன்றி என்னைப் பற்றி இவ்வளவு தெரிஞ்சு வச்சிருக்கிறியள்" என்று சொல்லி முடிவுக்கு கொண்டு வந்தார். இதன் பின்னர் அமைச்சர் டக்ளஸ், குறித்த வேலையை சட்டரீதியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொலிஸாரிடம் தெரிவித்தார்.

கடைசியாக கால்நடை பற்றிய விவாதம் நடந்தது. இதன் போது கால்நடைப் பிரதிப் பணிப்பாளர், இங்குள்ள கால்நடைகள் சட்டவிரோதமாக வேறு மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாகத் தெரிவித்தார். இதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்கின்றார்கள் இல்லை என்றும் குற்றச்சாட்டை முன்வைத்தார். வழமையாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சகல விடயங்களுக்கும் தனக்கு கொப்பி போடுமாறு தெரிவிப்பார். இந்த விடயத்தில், அமைச்சர் சொல்ல மறக்க, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் "அமைச்சருக்கும் ஒரு கொப்பியை போடுங்கோ" என்று சொன்னார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அதை திரிபுபடுத்தி உங்களைப் போடச் சொல்லினம் என்றார். உடனேயே சிறீதரன் "போடுறவைக்குத் தான் அதைப்பற்றித் தெரியும்" என்று நக்கலாகப் போட்டுத் தாக்கினார்.

இதன் பின்னர் நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் ஏதோவொரு விடயத்தை சொல்ல முற்பட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர் டக்ளஸும் "நீங்கள் யாரென்று சொல்லுங்கோ" என்று கேட்டனர். அதற்கு உடனே அவர் "நெடுந்தீவு பிரதேசசபைத் தலைவர்" என்று கூறினார். உடனே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், "நீங்கள்தான் புது ஆளோ வாழ்த்துக்கள்" என்று தெரிவித்துவிட்டு, "என்ன உங்கட ஆளையே உங்களுக்குத் தெரியுதில்லை" என்று அமைச்சரை நக்கலடித்தனர்.

அதற்கு அமைச்சர் டக்ளஸோ "எனக்கு கண் பார்வை சரியாகத் தெரியாது. உங்கட ஆக்கள் தானே என்ர ஒரு கண்ணை எடுத்திட்டினம்" என்று திருப்பியடித்தார்.

இதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பணிப் புறக்கணிப்பு விடயத்தை சபைக்கு கொண்டு வந்து, கூட்டமைப்பினருக்கு வில்லங்கத்தை கொடுத்தார்.

பொதுச்சுகாதார பரிசோதகர்கள் ஒரு மாதகாலமாக பணிப் புறக்கணிப்பில் இருப்பதால் பொதுமக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்று சுட்டிக்காட்டியதுடன், "ஆடும் உங்கட குட்டியும் உங்கட" என்று சொன்னார். வடக்கு மாகாண சபையும் உங்களுடையது, உள்ளூராட்சி மன்றங்களும் உங்களுடையது என்று மறைமுகமாகக் குத்திக் காட்டினார்.

இதில் கடந்த 2 ஆம் திகதி முதலமைச்சர் அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு ஏன் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்று அமைச்சர் டக்ளஸ் கேட்டார். இதன் போது உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் எல்லோரும் ஆளும் கட்சி - எதிர் கட்சி பேதம் மறந்து ஒன்றாகக் குரல் கொடுத்தனர்.

பிரதே சபைகளுக்கு பொதுச் சுகாதார பரிசோதகர் வெற்றிடம் இல்லை என்று சுகாதார அமைச்சின் செயலாளர் சொல்ல, இவ்வளவு காலமும் உங்களுக்கு அது தெரியேல்ல. இப்பதான் தெரியுதோ. வைத்தியர் சங்கம் சொல்லுறதுக்காண்டி நீங்கள் இவ்வாறு செயற்படுவது சரியல்ல என்றும் சந்திரகுமார் போடு போட்டார்.

இந்தப் பிரச்சினையும் இழுபட்டுக் கொண்டு சென்றதும், இறுதியில் அமைச்சர் டக்ளஸ், முதலமைச்சர் இது தொடர்பில் சுகாதார அமைச்சருடன் கலந்துரையாடுவார் என்று சொல்லி முற்றுப் புள்ளி வைத்ததுடன் கூட்டத்துக்கும் முற்றுப் புள்ளி வைத்தார். கூட்டம் இணைத் தலைமையில் ஆரம்பமானாலும், கூட்டத்தை ஆரம்பத்திலிருந்து இறுதிவரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே நடத்தினார். வடக்கு முதல்வர் வெறும் பார்வையாளராக மாத்திரமே ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இருந்தார். (ற)

## Words of Peace

To be quenched by this beautiful river that runs through you, all you have to do is turn within மேலும் அறிந்துகொள்ள அழையுங்கள் :-

**0117 250001**

(47109)(10) நேரம் : 3 pm - 10 pm



## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**நெல்சன் நித்தியானந்தன் சந்திரகாந்தா தம்பதியரின் புதல்வி டிலானி அவர்கள் [சுண்டுக்குளி மகளிர் கல்லூரி] 2013 ஆம் ஆண்டு நடை பெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சையில் 8A,C பெற்றுச்சித்தியடைந்தமையை**

**அக மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, தம்பி, சிவநேசன்மாமா குடும்பம், குணநேசன் மாமா குடும்பம், லிங்கேஸ்வரன் குடும்பம், வினிபிறட் குடும்பம், லிண்டா திவ்வியானந்தி குடும்பம், நவரட்ணராஜா ஜெயா குடும்பம், ஜே.அருளானந்தம் [தாத்தா] சிங்கராஜா-பரிபூரணம் [அம்மம்மா] (47091) (3.6.4)

றோ.க. பாடசாலை அருகில் உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.



## வெளிவந்துவிட்டது "வெற்றி" யின் 2 ஆவது வெற்றிகரமான வெளியீடு

"வெற்றி" யின் முதலாவது வெளியீட்டுக்கு அமோக ஆதரவு வழங்கிய ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி.

**உங்கள் பிள்ளைகள் தரம் 4,5 இல் கல்வி கற்கிறார்களா? உடனே அருகில் உள்ள புத்தக சாலைக்கு விரையுங்கள்!**

**வெற்றி பப்ளிகேஷன்ஸ்**
யாழ்ப்பாணம்.

(47113)(10) தொடர்புக்கு: 0776 408 622


## கண்ணீர் அஞ்சலி



முத்துமாரி நகைமாட உரிமையாளர்

அன்ரன் அனாசிஸ்(ராசா) அவர்களின் அன்புத் தாயார்

**செசிலியம்மா பொன்னையா அன்ரன்**

21.04.2014 திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தேவி கருமாரி ஜூவல்லறி உரிமையாளரும், ஊழியர்களும்.

171, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (47110)(5.6.3)

## மரண அறிவித்தல்

### மாப்பாணர் சின்னத்துரை

சாந்தாவீதி, தையிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், 4ஆம் மைல் கே.கே.எஸ்.வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாப்பாணர் சின்னத்துரை நேற்று (22.04.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

. அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின்- அன்புக் கணவரும், சியாமளாதேவி,நிர்மலாதேவி,தெய்வேந்திரம் ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மலிங்கம், தேவதாசன்,தயாபரி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயந்தன்-அனுஜா, சுனித்தா, கிருபாரகன்-காயத்திரி, கோபிநாத்-சுரேகா, கேஜிகா,நிமல்ராஜ்,கீர்த்திராஜ், நிகாஜினி, தசாத்மன் ஆகியோரின் அன்புப் பேரனும், அஜிஸ், லிபீசன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.04.2014) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெற்று,பூதவுடல் தாவடி இந்துமயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(47111)(5.6) தகவல்: குடும்பத்தினர்.

## சட்டவிரோத மதுபான தயாரிப்பு நிலையம் சுற்றிவளைப்பு

கொழும்பு.ஏப்.23

சீதுவ பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கிபுலாபோக்க பிரதேசத் தில் இயங்கி வந்த சட்ட விரோத மதுபான தயாரிப்பு நிலையம் சுற்றி வளைக்கப் பட்டுள்ளது.

வலான குற்றத்தடுப்பு பிரிவின ருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்றுமுன் தினம் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த இடத்திலிருந்து மது பானம் தயாரிக்கப் பயன்படுத்திய பல பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளது டன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நீர்கொழும்பு நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின் றனர். (ச)


## வீடு வாடகைக்கு

நெல்லியடியில் யாழ்.பருத்தித்துறை பிரதான வீதியில் (முன்னர் இலங்கை மின்சார சபை இருந்த வீடு) உள்ள வீடு வாடகைக்கு உள் ளது. அரச/ தனியார் நிறுவனங்கள் விரும்பத் தக்கது.

(சி/13615)(2.6) தொடர்பு - 077 608 8812



## வீடு வாடகைக்கு உண்டு

வாகன தரிப்பிட வசதியுடன் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: S.P. முத்து
555, புதுத் தெரு, உப்புக்குளம். (சி/13521) (10)
T.P: 077 032 6543, 077 775 9467


சிவமயம்

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

### கந்தையா வேலுப்பிள்ளை



**பிறப்பு: 01.12.1944**
**இறப்பு: 25.03.2014**

கடந்த 25.03.2014 செவ்வாய்க் கிழமை அன்று சிவபதமடைந்த எங் கள் அன்புத் தந்தை கந்தையா வேலுப் பிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 24.04.2014 வியாழக்கிழமை அதிகாலை 3.00 மணி யளவில் எமது இல்லத்தில் நடைபெற வுள்ளது. அதனைத் தொடர்ந்து நடை பெறவிருக்கும் சபிண்டீகரண கிரியை களிலும் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையி லும் தொடர்ந்து பி.ப 12.30 மணிக்கு நடைபெறும் மதிய போசன நிகழ்வி லும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பினை தனிப் பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளு மாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அம்பன், குடத்தனை. (சி/13522)(10) குடும்பத்தினர்.

## கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்

எமது வித்தியாலயத்தில் ஆசிரியையாகக் கடமை யாற்றும் திருமதி **இராஜபாலசிங்கம் கீர்த்திபா** அவர்களின் பாசமிகு தந்தை



**மாணிக்கம் மணிவாசகம்**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் சோகத்தில் பங்குகொண்டு அவரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம். (47115)(10)

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்.**

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி திருநாவுக்கரசு



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி திருநாவுக்கரசு 22.04.2014 செவ்வாய்க்கிழமை இறைபத மடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும், தவராணி, ஆறுமுகதாஸ் (லண்டன்), ஜீவ ராணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், சிறீகாந் தன், புஸ்பறீற்றா, சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமி யும், லண்டனைச் சேர்ந்த மயூரன், மயூரினி, கஜந்தினி, ஆரணி, வோஜினி, மேதினி, மோதிகா, திவேகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2014) புதன்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : தவராணி (மகள்)

தொடர்பு: 075 2088059 (47119)(10)


## அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஏல விற்பனை குருநகர் மரக்காலை

இடம் : மரக்காலை
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
கடற்கரை வீதி, குருநகர்.

காலம் : 25.04.2014 முற்பகல்: 10.00 மணி

தேக்கு, முதிரை, பாலை, வேம்பு, மருது, யாவறனை போன்ற மரங்களின் குற்றிகள் மற்றும் தீராந்திகள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

பிராந்திய முகாமையாளர்,
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்.

(சி/13573)(10) 021 222 2349, 021 222 0278



## தேவை

1. பணம் வசூலிப்பாளர்
   சிங்களம் தெரிந்திருத்தல் அவசியம். மாதாந்தம் கமிஷனாக ரூபா 30,000/= இற்கு மேல் வருமானமாகப் பெறலாம்.
2. விற்பனை முகவர்
   அடிப்படை வேதனம் மாதாந்தம் ரூபா 15,000/= உணவு, தங்குமிடம் இலவசம்.

**சுஜித் என்ரபிறைசஸ்** (சி/7676)(7.6.3)
பருத்தித்துறை வீதி, நுணாவில் சந்தி, சாவகச்சேரி.


## மரண அறிவித்தல்



## சின்னையா சிவஞானசுந்தரம்

முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும், இல.218/2, 4ஆம் ஒழுங்கை, உக்குளாங்குளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா சிவஞானசுந்தரம் 19.04.2014 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் செல்வநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், கமலநாயகியின் அன்புக் கணவரும், தனேஷ்காந் (கனடா), சுகன்ஜா (லண்டன்), பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும், மேனகனின் (லண்டன்) பாசமிகு மாமனாரும், வடிவாம்பிகை, தம்பிராசா, சரஸ்வதி, உருத்திராதேவி, மகேஸ்வரி, சிவானந்தம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கனகசீலன், செல்வகுமார், விமலா, கமலராணி, விஜயகுமார் (கிராம அலுவலர், கிறிஸ்தவகுளம்), விஜயகுமாரி, நந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், அமிர்தலிங்கம் (அதிபர் - விக்னேஸ்வரா வித்தியாலயம், பிரமனாளங்குளம்) அவர்களின் சகலனும், கலைச்செல்வி (முகாமைத்துவ உதவியாளர் - காணிப் பதிவகம், கச்சேரி, வவுனியா) அவர்களின் சகோத ரனும், நிதர்சன், நிவேதா (மாணவி - இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, வவுனியா) ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், சம்ஜா (லண்டன்) வின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.04.2014) வியாழக்கிழமை மு.ப..11.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தட்சணாங்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

024 222 6079/
077 631 3658 (சி/13704)(12)(3.6)

தகவல்: குடும்பத்தினர்.

# முடிவு எட்டப்படாது தொடர்கின்றது பொது சுகாதார பரிசோதகர் விவகாரம்

## பணிப்புறக்கணிப்புத் தொடரும் என்றும் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 23

பொது சுகாதார பரிசோதகர்களது பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாது இழுபறியிலேயே உள்ளது. அது தொடர்பில் கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற கூட்டத்திலும் தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை என்று தெரிவித்துள்ளதுபொது சுகாதார பரிசோதகர்களின் தாய்ச் சங்கம்.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது. அதில் வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் கிருபாகரன், பொதுசுகாதார பரிசோதகர்களின் தாய்ச் சங்கப் பிரதிநிதிகள், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நேற்றைய கூட்டம் தொடர்பில் பொது சுகாதார சேவைகள் சங்கம் மேலும் தெரிவித்ததாவது:

"முதலமைச்சர் கலந்து கொள்ளாததால் கலந்துரையாடலில் பங்குபற்ற பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் மறுத்து விட்டது. எனினும் உள்ளூராட்சித் திணைக்கள அமைச்சரான முதலமைச்சர் விக்னேஸ்வரனின் அமைச்சுச் செயலாளர் கலந்து கொண்டதால் நாம் அதில் கலந்து கொண்டோம்.

உள்ளூராட்சித் திணைக்களத்துக்குட்பட்ட பிரதேச சபைகளில் பொது சுகாதார பரிசோதகர்கள் பணியாற்றுவதற்கு வெற்றிடம் இல்லை. அதனால் அவர்களை அங்கு நியமிக்க முடியாதுள்ளது என்று வடமாகாண அதிகாரிகள் தரப்பால் கூறப்பட்டது. வடக்கில் சுகாதாரத் துறையிலோ அல்லது உள்ளூராட்சித் துறையிலோ வெற்றிடம் (காடர்) இல்லாது எவரும் பணியாற்றவில்லையா என்று பொதுச்சுகாதார பரிசோதகர்களின் சங்கத்தால் கேட்கப்பட்டது. அதற்கு அங்கிருந்த எவருமே பதிலளிக்கவில்லை.

பொதுச்சுகாதார பரிசோதகர்கள் பிரதேச சபைகளில் தொடர்ந்து பணியாற்றுவதாயின் அதற்குச் சம்பளம் இல்லை என்று அதிகாரிகள் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது. அப்படியாயின் கடந்த 2 வருடங்களுக்கும் மேலாக எவ்வாறு சம்பளம் கொடுத்து வருகிறீர்கள் என்று பொதுசுகாதார பரிசோதகர்கள் சங்கத்தினரால் கேள்வியெழுப்பப்பட்டது. அதற்கும் அதிகாரிகளால் எந்தப் பதிலும் கூறப்படவில்லை.

பொது சுகாதார பரிசோதகர்களால் சில விடயங்கள் கூறப்பட்டு அதனை மாகாண சுகாதார திணைக்களம் தற்காலிகமாக குறித்த பிரதேச சபைகளில் பணிபுரியும் பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கு மாதாந்தம் சம்பளம் வழங்கவும் பின்னர் வெற்றிடம் உறுதி செய்யப்பட்ட பின்னர் உள்ளூராட்சித் திணைக்களம் பொறுப்பேற்றுக் கொள்ளட்டும் என்றும் கோரினர். ஆனால் அதனை மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ்ப்பாண கிளையினருடன் கலந்துரையாடியே தீர்மானிக்க முடியும் என்று சுகாதார அமைச்சர் தெரிவித்தார். அதனுடன் கூட்டம் எந்த இணக்க முமின்றி முடிவடைந்தது.

அதில் வடமாகாண முதலமைச்சர் கலந்து கொள்வதாக முன்னர் கூறப்பட்டபோதும் அவர் கலந்துகொள்ளவில்லை. அதனால் தமது பணிப் புறக்கணிப்பைத் தொடர்வதாக பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்தது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரிக்கும் வலி.வடக்கு பகுதி பொது சுகாதார பரிசோதகருக்கும் இடையிலான தனிப்பட்ட பிரச்சினையில் மருத்துவ சங்க யாழ்.கிளையினர் தலையிட்டதை அடுத்து, பிரச்சினை பூதாகரமாகியது. அதையடுத்து பொது சுகாதார பரிசோதகர்கள் சுமார் ஒன்றரை மாத காலமாக தொடர்ந்து பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பிரச்சினையை தீர்த்துக்கொள்ள முடியாது வடமாகாண சுகாதார திணைக்களமும் உள்ளூராட்சித் திணைக்களமும் இழுபறிப்படுகின்றமை தொடர்பில் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். சுகாதார நடவடிக்கைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படாமையால் பொது மக்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டு வரும் நிலையில் தற்போது அது பற்றி விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர். "இந்தப் பிரச்சினை விரைவில் தீர்த்து வைக்கபடவேண்டும் என்றே நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வடக்கு அமைச்சர்கள் அனைவருமே இந்த விடயத்தில் நித்திரை கொள்கிறார்கள் என்றே நாம் கருத வேண்டியுள்ளது'' என்றும் பொதுமக்கள் கூறினர். (ந-4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அனைத்து

விரிசல் நிலை காணப்பட்டது என்று கூறப்படுகின்றது. இந்த நிலையிலேயே இலங்கையுடனான உறவுகளைச் சீர்ப்படுத்திக் கொள்ளும் வகையில் தென்கொரிய அரசின் விசேட பிரதிநிதியாக அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் இலங்கை வந்துள்ளார். அவர் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதுதொடர்பாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே, இலங்கையின் முன்னேற்றங்கள் குறித்து யு மியுங்க் - ஹ்வான் பாராட்டுத் தெரிவித்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளை சமூகமயப்படுத்தியமை மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை மிகத் துரிதமாக மீள்குடியேற்றியமையும் போருக்குப் பின்னர் நாடு அடைந்துள்ள முன்னேற்றத்துக்கு இரண்டு உதாரணங்களாக உள்ளன என்று ஹ்வான் தெரிவித்துள்ளார்.

முதன்முறையாக வடமாகாண சபைத்தேர்தலை சுதந்திரமாகவும் நீதியாகவும் நடத்தியமை பற்றியும், காணாமற்போனவர்கள் தொடர்பாக ஜனாதிபதிஆணைக்குழுஅமைக்கப்பட்டது தொடர்பாகவும் அரசுக்கு அவர் பாராட்டியுள்ளார்.

கலந்துரையாடலின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வட மாகாணத்துக்கு பயணம் செய்து அங்கு தற்போதைய நிலைமைகளை நேரில் பார்வையிடுமாறு கோரினார். 'அபிவிருத்தியின் போது நாம் தெற்கை விட வடக்கிற்கு அதிக முன்னுரிமை அளித்துள்ளோம். நீங்கள் அந்தப் பிரதேசத்துக்குச் சென்று அங்குள்ள அபிவிருத்தியைப் பார்க்க வேண்டியது முக்கியம்' என்றும் ஜனாதிபதி ஹ்வானுக்கு கூறினார்.

இலங்கையுடன் ஒத்துழைப்பையும் வலுவான இருதரப்பு உறவுகளையும் பேணுவதற்கு, தமது அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றது என்பதை யுமியுங்க் - ஹ்வான் இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதியிடம் விளக்கினார்- என்று கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது 116 கொரிய நிறுவனங்கள் செயற்பட்டு வருவதுடன், இலங்கைக்கு தென்கொரியா கணிசமான அபிவிருத்தித் திட்ட உதவிகளையும் வழங்கி வருகிறது. (ந-5)

### எங்கே

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்நேற்று முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெற்றது. அதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்கினேஸ் வரன் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைத்தலைமை வகித்தனர்.

கூட்டத்தின்போது கிளிநொச்சி மாவட்ட மீள்குடியமர்வு தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டபோதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மீள்குடிய மர்வு குறித்து விளக்கமளித்த கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்-

"இதுவரை 41 ஆயிரத்து 227 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 32 ஆயிரத்து 513 பேர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 66 குடும்பங்களும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 21 குடும்பங்களுமாக 90 குடும்பங்கள் இன்னமும் மீள்குடியமர்த்தப்படவுள்ளன. இவர்கள் தற்போது மீள்குடியமர்வுக்காக விண்ணப்பித்துள்ளனர்"- என்று தெரிவித்தார்.

அதன்பின்னர் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா,

"போர் ஆரம்பமாவதற்கு முன்னர் யாழ்.மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து சுமார் ஒரு லட்சத்து 29 ஆயிரம் பேர் வன்னியில் தங்கியிருந்தனர். அதில் ஒரு லட்சத்து 16 ஆயிரம் பேர் வரையானோரே யாழ்.மாவட்டத்துக்குத் திரும்பியுள்ளனர். எஞ்சிய மக்களுக்கு என்ன நடந்தது?

கிளிநொச்சி மாவட்டத்தில் 2008 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி சுமார் 50 ஆயிரத்து 90 குடும்பங்கள் இருந்தன. தற்போது 41 ஆயிரத்து 227 குடும்பங்கள் மாத்திரமே மீளக்குடியமர்ந்துள்ளன. ஏனைய குடும்பங்களின் விவரங்கள் ஏதாவது பதிவுகளில் உள்ளனவா? - என்று கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து அவர் கூறும்போது; "இலங்கை அரசு இடம்பெயர்ந்த அனைவரும் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டு விட்டனர் என்று சொல்லிக் கொள்கின்றது. ஆனால் இந்த மாவட்டத்தின் இரணை தீவு, பரவிப்பாஞ்சான் போன்ற இடங்கள் இன்னமும் விடுவிக்கப்படாமலேயே உள்ளன. சர்வதேச விதிமுறைகளுக்கு அமைவாக அவர்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட வேண்டும்"- என்றும் வலியுறுத்தினார்.

எனினும் இது தொடர்பில் எதுவித கருத்துக்களையும் வெளியிடாது இணைத் தலைவர்கள் இருவரும் மௌனம் காத்தனர். (ந-18-55-426)

### இந்தியா

அலுவலகமும் அவற்றை முற்றாக மறுத்துள்ளன.

இந்திய ஊடகங்களில் வெளியான செய்திகளில், இலங்கையிலுள்ள தமிழர்கள் பற்றிய கரிசனை மற்றும், இந்தியாவினது மூலோபாய நலன்களுக்கு இடையில் ஒரு சமநிலையை உருவாக்குவதற்காக, வடக்கு மாகாண முதல்வரை கூடிய விரைவில் புதுடில்லிக்கு அழைப்பதற்கு இந்திய வெளிவிவகார அமைச்சு முயற்சித்து வருகிறது. கடந்த மாதம், ஐ.நாவில் இலங்கைக்கு எதிரான வாக்களிப்பில் இந்தியா பங்கேற்காமல் விட்ட பின்னர், இந்திய வெளிவிவகார அமைச்சு இந்த அவசர முயற்சியில் இறங்கியுள்ளது. விக்னேஸ்வரன் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டால், இலங்கை தொடர்பான எமது கொள்கைகளை சமப்படுத்த உதவும் என்றும், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வாக்களிக்காது போனா லும், இலங்கைத் தமிழர்களைக் காக்க நாம் பாடுபடுகிறோம் என்றுகூறுவதற்கு உதவும்என்றும் மூத்த இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் தேர்தலுக்கு முன்னர் வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் பயணம் மேற்கொள்வது, இலங்கைத் தமிழர்களின் நலனின் அக்கறை கொண்டுள்ளது என்பதைகாட்டுவதற்குஉதவும்என்று காங்கிரஸ் நம்புகிறது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, அவ்வாறு இந்தியாவுக்கு செல்லும் பயணத் திட்டம் எதுவுமில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அதே போன்று இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகமும் அவ்வாறான அழைப்பு எதுவும் வடக்கு முதலமைச்சருக்கு விடப்படவில்லை என்று தெரிவித்துள்ளது. (ந-5)

### வடமாகாண

மிக்கப்பட்டிருந்தார். அவர் தற்போது ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவரை கொலை செய்த குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அதனையடுத்து ஈ.பி.டி.பி கமலேந்திரனை கட்சியை விட்டு நீக்கியது. அதன் தொடர்ச்சியாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் அவரை நீக்கியது. இதனால் வடக்கு மாகாணசபை உறுப்பினர் பதவியிலிருந்து கமலேந்திரன் நீக்கப்படுகின்றார் என்றும் அந்த இடத்துக்கு சி.தவராசா நியமிக்கபடுகின்றார் என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரால் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டது. அதனையடுத்து வர்த்தமானி பிரசுரம் மூலம் புதிய உறுப்பினராக சி.தவராசா நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்பாக, வடக்கு மாகணசபை உறுப்பினராக சி.தவராசா இன்றைய தினம் பதவியேற்கவுள்ளார், இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடக்கு மாகாண எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் மற்றும் யாழ்.மாவட்ட ஈ.பி.டிபிஅமைப்பாளர், யாழ்.மாநகர முதல்வர் ஆகியோர் பங்கெடுக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

### பரராஜசிங்கம்

- இவ்வாறு கூறியுள்ளார் நோர்வேயின் முன்னாள் சமா தானத் தூதுவர் எரிக் சொல் ஹெய்ம்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் படுகொலை தொடர்பாக, டுவிட்டர் சமூக வலைத்தளத்தில் நடந்த விவாதம் ஒன்றிலேயே எரிக் சொல்ஹெய்ம் இது குறித்துக் கூறியுள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரையும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் நீலன் திருச்செல்வத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளே படுகொலை செய்தனர் என்பதை அந்த விவாதத்தின் போது ஏற்றுக்கொண்ட சொல்ஹெய்ம், அதுபோலவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தையும், சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவையும் இலங்கை அரசே படுகொலை செய்தது என்று தனது 'டுவிட்டர்' பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நோர்வேயின் அனுசரணையுடனான போர் நிறுத்த உடன்பாடு நடைமுறையில் இருந்த சமயம், நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பில் உள்ள தேவாலயம் ஒன்றில் நத்தார் ஆராதனைகளில் கலந்துகொண்டிருந்தபோது சுட்டுகொல்லப்பட்டார். (ந-5)

### தொலைபேசி

படும் தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை, நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. யாழ். மாவட்டத்துக்கு அதற்குரிய தனியானதொரு அலுவலரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் அதன் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் பொருட்டும், அது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டும் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், உளவள உத்தியோகத்தர்கள், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதுகுறித்து அங்கு விளக்கமளிக்கும் போது. "யாழ்.மாவட்டத்தில் சரி நாடெங்கிலும் போதைப் பொருள் தொடர்பில் தகவல்கள் தெரிவிப்பதற்கு 1984 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். போதைப் பொருள் பாவனையாளர்கள் - அதற்கு அடிமையானவர்களை இனங்கண்டு அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகளை, கட்டுப்பாட்டுச் சபை மேற்கொள்ளும்"- என்று கூறப்பட்டது. (ந-5)

### பிரதம

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின்கீழ் உள்ளடங்கும் வெற்றிடங்களை விடவும் மேலதிகமாகப் பணியாளர்கள்உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர். அதனால் வழமையாக ஒதுக்கப்படும் பணியாளர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை விடவும் மேலதிகமாக 20 மில்லியன் ரூபா நிதி செலவிடப்படுகிறது.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது;

"வடமாகாண சபை தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் அந்த நியமனம் வழங்கப்பட்டதோடு அதற்கெனவே மாதாந்தம் 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படுகிறது. இதற்கு வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர் .விஜயலட்சுமியே பொறுப்புக் கூறவேண்டும். அவரே அவற்றுக்கு அனுமதி வழங்கி வந்துள்ளார். ஒப்பந்த அடிப்படையில் பலர் அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர். அதற்கான நிதி வடமாகாணத்திலிருந்தே வழங்கப்பட்டு வருகிறது. சில மாதங்களில் அதற்கான நிதியையும் வடமாகாண சபையே வழங்க வேண்டிய நிலைமை ஏற்படவுள்ளது''- என்று தெரிவித்தார். (ந-4)

### யாழ்.

நாட்டுக் கல்வியியலாளர்கள் கலந்துகொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

"இப்போது உள்ளூர் கல்வியியலாளர்களை வைத்தே இந்த மாநாடு இடம்பெறவுள்ளது. இதில் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழக பேராசிரியர்கள், பாடசாலைகளது அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்துகொள்ள உள்ளனர்" என்றார் அமைச்சர். (உ-4)

# அச்சுவேலி பிரிமியர் லீக்கில் 'புளூ பிரேங்ஸ்' பெரு வெற்றி

அச்சுவேலி, ஏப்.23
வலி.கிழக்கு பிரதேச சபைக் குட்பட்ட அணிகளுக்கிடையிலான அச்சுவேலி பிரிமியர் லீக் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் பிரவுண் புல்லர்ட்ஸ் அணியை வீழ்த்தி சம்பியனானது 'புளூ பிரேங்ஸ்' அணி.

அச்சுவேலி மத்திய விளையாட்டுக்கழகம் ஒருங்கிணைந்து நடத்திய 'அச்சுவேலி பிரிமியர் லீக்' போட்டிகளுக்காக பிரதேசத்தின் தெரிவு செய்யப்பட்ட வீரர்களிலிருந்து 8 அணிகள் உருவாக்கப்பட்டன. முதலாம்தவணை விடுமுறை தினங்களான ஏப்ரல் 6 முதல் 20 ஆம் திகதி வரை இடம்பெற்ற 56 லீக் ஆட்டங்களின் நிறைவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 'பிளே ஓப்' சுற்று நடைபெற்றன.

லீக் ஆட்டங்களின் புள்ளிப் பட்டியலில் முதல் நான்கு இடங்களைப் பிடித்த அணிகளான புளூ பிரேங்ஸ் அணி சுபேந்திரன் தலைமையிலும், பிரவுண் புல்லட்ஸ் அணி மதுசுதனன் தலைமையிலும் சில்வர் லயன்ஸ் அணிஹரிஹரன்தலைமையிலும், யெலோ ஈகிள்ஸ் அணி மதுசாந்த் தலைமையிலும் இறுதிச் சுற்றில் மோதின.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அச்சுவேலி மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் 'புளூ பிரேங்ஸ்' அணியை எதிர்த்து பிரவுண் புல்லர்ட்ஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற புளூ பிரேம்ஸ் அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தனர்.



வெற்றிக் கிண்ணத்தைப் பெறும் அணியினர்.

ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய சுபேந்திரன் மற்றும் கஜன் ராஜ் தொடக்கம் முதலே அதிரடி காட்ட, அணியின் ஓட்ட வேகம் சீராக அதிகரித்தது. பிரவுண் புல்லர்ட்ஸ் அணியின், பந்து வீச்சு, வியூகங்கள் எவையுமே பயனளிக்காத நிலையில் 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் இலக்குகள் இழப்பின்றி 91 ஓட்டங்களைக் குவித்தது புளூ பிரேங்ஸ் அணி. அணித் தலைவர் சுபேந்திரன் ஆறு சிக்ஸர்கள், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காத 50 ஓட்டங்களையும், கஜன் ராஜ் நான்கு சிக்ஸர்கள், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காத 34 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்.

கடினமான இலக்காக 92 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய பிறவுண் புல்லட்ஸ் அணியினர் ஆரம்பம் முதலே தடுமாறத் தொடங்கினர். ஒருமுனையில் சீரான இடைவேளையில் இலக்குகள் சாய்க்கப்பட்ட அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கஜந்தன் மறுமுனையில் அதிரடி காட்டினார். இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் வெற்றிக்குத் தேவையாக 35 ஓட்டங்களிலிருந்த நிலையில் கஜந்தன் ஆட்டமிழந்தார். 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில்73 ஓட்டங்களை 4 இலக்குகள் இழப்புக்கு பெற்றிருந்த பிரவுண் புல்லட்ஸ் அணியினர், 19 ஓட்டங்களால் தோல்வி கண்டனர். அந்த அணி சார்பாக கஜந்தன் நான்கு சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி அடங்கலாக 32 ஓட்டங்களையும், கென்வூட் மூன்று சிக்ஸர்கள் ஒரு பவுண்டரி அடங்கலாக 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் புளூ பிரேங்ஸ் அணியின் சுபேந்திரன் 2 இலக்குகளையும், சுபதாஸ் மற்றும் துசி தலா ஒவ்வொரு இலக்குகளையும் தகர்த்தனர்.

போட்டித் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக 14 போட்டிகளில்280 ஓட்டங்களைகுவித்த சுஜன்ராஜும் சிறந்த பந்து வீச்சாளராக 14 போட்டிகளில் 15 இலக்குகள் பெற்ற சுபேந்திரனும் தெரிவாகினர்.

மூன்றாமிடத்துக்கான போட்டியில் யெலோ ஈகிள்ஸ்' அணியை 14 ஓட்ட வித்தியாசத்தில் தோற்கடித்து சில்வர் லயன்ஸ் அணி வெற்றி பெற்றது. பரிசளிப்பு நிகழ்வில் விருந்தினர்களாக கலாபூஷணம் நா.கணபதிப்பிள்ளை, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் நா.மகேந்திரராஜா ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினர். (த-11)

# கோப்பாய் ம.வி. அணி கரப்பந்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப்.23
யாழ்.மாவட்டமட்ட பாடசாலைகளுக்கிடையேயான ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் நெல்லியடி மத்திய கல் லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இதில் 15 வயது ஆண்கள் பிரிவின் இறுதியாட்டத்தில் கோப்பாய் மகா வித்தியாலயத்தை எதிர்த்து ஆவரங்கால் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் நேர் செற் கணக்கில் கோப்பாய் மகா வித்தியாலய அணி 25:14, 25:22 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. 2 ஆம் இடத்தை ஆவரங்கால் மகா வித்தியாலய அணி பெற்றது.

3 ஆம் இடத்துக்கான போட்டியில் அளவெட்டி அருணாசலம் கல்லூரியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி மோதியது. அதில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி வெற்றி பெற்று 3 ஆம் இடத்தைப் பெற்றது.

**3 ஆம் இடத்துக்கான போட்டியில் அளவெட்டி அருணாசலம் கல்லூரியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி மோதியது. அதில் புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரி அணி வெற்றி பெற்று 3 ஆம் இடத்தைப் பெற்றது.**

15 வயதுப் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை வசாவிளான் மத்திய மகாவித்தியாலயமும், இரண்டாம் இடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும், 3 ஆம் இடத்தை பருத்தித் துறை சென்.தோமஸ் மகளிர் பாடசாலையும் பெற்றன. (த-422)

# தாச்சியில் வென்றது சுன்னாகம் வைகறை


சம்பியன் பட்டம் வென்ற வைகறை விளையாட்டுக்கழகம்

வலி.வடக்கு,ஏப்.23
சுன்னாகம் பொலிஸாரும் உடுவில் பிரதேச செயலகமும் இணைந்து புத்தாண்டு கொண்டாட்டத்தையொட்டி நடத்திய தாச்சிப் போட்டியில் சுன்னாகம் வைகறை விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் சிந்து விளையாட்டுக் கழகமும் சுன்னாகம் வைகறை விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் பலமிக்க அணிகளாகக் காணப்பட்ட நிலையில் முதல் பாதி ஆட்டத்தில் பழம் பெற எடுத்த முயற்சிகள் யாவும் மாறி மாறி முறியடிக்கப்பட்டபோதிலும்வைகறை விளையாட்டுக் கழகம்ஒரு பழத்தைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் பழம் பெற வேண்டும் என்ற துடிப்புடன் களமிறங்கியன. இரு அணிகளும் எடுத்த முயற்சிகள் யாவும் எதிரணியினரால் முறியடிக் கப்பட்டதால் பழம் எதனையும் பெறாத நிலையில ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் வைகறை விளையாட்டுக்கழகம் 1:0 என்ற பழக் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது. (த-86)

# இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஏப்.23
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் திக்கமுனை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று புதன் கிழமை பி.ப. 4.30 மணிக்கு இடம்பெறும் 2ஆவது காலிறுதியாட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து றேஞ்சஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.23
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் வெள்ளி, சனிக்கிழமைகளில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

அதில் வெள்ளிக்கிழமை இடம் பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. சனிக்கிழமை இடம் பெறும் 2ஆவது அரையிறுதியாட்டத்தில் திக்கம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங் கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# ஆவரங்கால் நடராஜா கரப்பந்தில் வென்றது

மாங்குளம், ஏப்.23
யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இதில் 17 வயதின் இறுதியாட்டத்தில் வசாவிளான் மகா வித்தியாலய அணியை எதிர்த்து ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி மோதியது. இதில் நேர்செற் முறையில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க அணி 25:22, 25:08 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையை எதிர்த்து அளவெட்டி அருணாசலம் அணி மோதியது. இதில் முதல் சுற்றில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், இரண்டாம் சுற்றில் அளவெட்டி அருணாசலம் அணி 25:17 என்றபுள்ளிகள் அடிப்படையிலும் வெற்றி பெற்று இறுதிச் சுற்றில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலைஅணி 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றது. (த-422)

# பெண்களுக்கான உதைபந்து வவு.வடக்கு சம்பியனானது

யாழ்ப்பாணம், ஏப்.23
வவுனியா பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கான உதைபந்தாட்ட தொடரின் இறுதியாட்டத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை வவுனியா நகர சபை விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் வவுனியா வடக்கு பிரதேச



செயலக அணியை எதிர்த்து வவுனியா பிரதேச செயலக அணி களமிறங்கியது.

இதில் வடக்கு பிரதேச செயலக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (ற-23)

# தென்மராட்சிக் கபடியில் கச்சாய் கலைமகள் வெற்றி

தென்மராட்சி, ஏப்.23
தென்மராட்சி பிரதேச கபடி அணிகளுக்கிடையில் இடம்பெற்ற சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் சாவகச்சேரி டிறிபேக் ஸ்ரார் அணியை தோற்கடித்து கச்சாய் கலைமகள் அணி சம்பியனாகியது.


போட்டியில் மோதிக் கொள்ளும் அணிகள்

சித்திரைப் புத்தாண்டையொட்டி சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் ஆண், பெண் அணிகளுக்கிடையிலான கபடிப் போட்டிகள் நடைபெற்றன. ஆண்கள் பிரிவில் கச்சாய் கலைமகள் அணி சாவகச்சேரி டிறிபேக் ஸ்ரார் அணியையும், பெண்கள் பிரிவில் சாவகச்சேரி புனித லிகோரியார் அணி மட்டுவில் ஐங்கரன் அணியையும் தோற்கடித்து சம்பியனாகின.

சாவகச்சேரி நகர சபையும் பொலிஸாரும் இணைந்து நடத்திய சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழாவில் இடம் பெற்ற கபடி இறுதிப் போட்டிகளில் இவை வெற்றி பெற்று சம்பியன்களாகின. (த-9)

## வெற்றியாளர் விவரம்

சாவகச்சேரிநகர சபையும்பொலிஸாரும் இணைந்து நடத்திய புத்தாண்டு விளையாட்டு விழாவில்வெற்றி பெற்றோர் விவரம்:


**தனிநபர் போட்டிகள்**

யானைக்கு கண் வைத்தல்- திருச்செல்வம் சாளினி. முட்டி உடைத்தல்- இந்திரகாந்தன் கனுஜன். போத்தலில் நீர் நிரப்புதல்- திருச்செல்வம் சாளினி. சமநிலை ஓட்டம்-பிரபாகரன் சுரேந்தினி. சங்கீதக்கதிரை-மகேந்திரன்மாலதி.

**குழுநிலைப் போட்டிகள்**


கபடி(ஆண்கள்)-கச்சா கலைமகள் அணி. கபடி (பெண்கள்)- சாவகச்சேரி புனித லிகோரியார் அணி. கிரிக்கெட்-மட்டுவில் வளர்மதி அணி. கரப்பந்து- மட்டுவில் ஐங்கரன் அணி. கயிறிழுத்தல்- கச்சாய்கலைமகள் அணி. மரதன் (ஆண்கள்)- எஸ்.சுகர் ணன் மரதன் (பெண்கள்)- ஏ.சிவ ஜெகதீபா. (த-9)

## டோனியை புகழ்ந்தார்
# மக்கலம்




உலகின் மிகச் சிறந்த அணித்தலைவர் டோனி தான் என சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாடி வரும் பிரன்டன் மெக்கல்லம் புகழாரம் சூட்டியுள்ளார்.
ஐ.பி.எல் தொடரில் நேற்று முன் தினம் நடந்த போட்டியில் சென்னைடெல்லி அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 93 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்டது.
முதலில் களமிறங்கிய சென்னை அணி 177 ஓட்டங்கள் எடுத்தது. சென்னை அணியில் வெய்ன் சுமித், சுரேஷ் ரெய்னா ஆகியோரின் ஆட்டத்தால் அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்ந்தது.
178 எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய டெல்லி அணியின் துடுப்பாட்டக்காரர்கள் சொதப்ப அணி அனைத்து இலக்குகளையும் இழந்து. 15.4 ஓவர்களில் 84 ஓட்டங்களில் சுருண்டது. இதன் மூலம் சென்னை அணி தனது முதல் வெற்றியை பதிவு செய்தது.
இது குறித்து நியூசிலாந்தை சேர்ந்த பிரன்டன் மக்கலம் கூறுகையில், அனைவரையும் மிகவும் பணிவாக வழிநடத்தும் டோனி, உலகின் சிறந்த அணித்தலைவர். சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் ஆடுகளம் தொடர்பாக தன்னிச்சையாக முடிவு எடுக்கும் திறன் படைத்தவர். அவரது தலைமையின் கீழ் விளையாடுவது மகிழ்ச்சி அளிக்கிறது. அவரிடம் இருந்து அதிக விஷயங்களை கற்று வருகிறேன் என்று தெரிவித்துள்ளார். (த)

## தப்பினார் கீமர் ரோச்




மேற்கிந்தியத் தீவுகள் அணி கிரிக்கெட் வீரர் கீமர் ரோச், கார் விபத்திலிருந்து அதிர்ஷ்டவசமாக காயமின்றி உயிர் தப்பியுள்ளார். இவர் இதுவரை 23 டெஸ்ட், 61 ஒருநாள் மற்றும் 11 ரி20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.
கீமர், பார்படோசில் உள்ள கிரிக்கெட் மைதானத்துக்கு அருகே காரை ஓட்டி சென்று கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாகக் கட்டுப்பாட்டை இழந்த கார், பல தடவை உருண்டு விபத்துக்குள்ளானது. அவர் உடனடியாக அம்புலன்ஸ் மூலம், மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அதிர்ஷ்டவசமாக பெரிய அளவில் அவருக்குக் காயம் ஏற்படவில்லை.
இது குறித்து ரோச் தனது டுவிட்டர் இணையத்தளத்தில், கார் விபத்தால் தனக்கு எந்த பிரச்சினையும் இல்லை என்றும், தற்போது நலமுடன் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (த)

## உலகத் தரம் வாய்ந்த வீரர் டி வில்லியர்ஸ்



எங்கள் அணியின் டி வில்லியர்ஸ் உலகத்தரமான துடுப்பாட்டக்காரர் என பெங்களூர் அணியின் வீரர் பார்த்திவ் பட்டேல் புகழாரம் சூட்டியுள்ளார்.
**இந்திய அணி வீரரான பார்த்திவ் பட்டேல் தற்போது ஐக்கிய அரபு எமிரேட்சில் நடந்து வரும் ஐ.பி.எல் தொடரில் பெங்களூர் அணி சார்பில் விளையாடி வருகிறார்.**
மும்பை அணிக்கு எதிரான போட்டியில் அணித்தலைவர் கோஹ்லி, யுவராஜ் என முக்கிய வீரர்கள் ஏமாற்றத்தைக் கொடுக்க, இவர் அரைச் சதம் அடித்து வெற்றிக்கு வழி வகுத்தார்.
அந்தப் போட்டியில் ஆட்ட நாயகன் விருது பெற்ற பட்டேல் அணியின் வெற்றி பற்றி கூறுகையில், எங்கள் அணியின் பந்துவீச்சாளர்கள், எதிரணியை 115 ஓட்டங்களில் சுருட்டினர். இது அவ்வளவு எளிதானதல்ல.
**போட்டியின் ஆரம்பத்தில் நெருக்கடிஏற்பட்டது. ஆனால், என்னுடன் கைகோர்த்த டிவில்லியர்ஸ் சிறப்பாகச் செயல்பட்டார்.**
இவர் உலகத்தரமான துடுப்பாட்டக்காரர், நாங்கள் இருவரும் ஓட்டங்கள் உயர்வைப் பற்றிக் கவலைப் படவில்லை. மீதியுள்ள பந்துப்பரிமாற்றங்கள் முழுவதும் துடுப்பாடவே முடிவு செய்தோம்.
தற்போது இரண்டு வெற்றி பெற்று, தொடரைச் சிறப்பாக தொடங் கியுள்ளோம் என்று கூறியுள்ளார். (த)

## மனைவி வருகையால் சந்தோசத்தில் கார்த்திக்



இந்திய அணியின் துடுப்பாட்டக்காரரான தினேஷ் கார்த்திக் தனது வருங்கால மனைவி தீபிகா வருகையால் தனக்கு அனைத்தும் நன்றாக நடப்பதாக தெரிவித்துள்ளார்.
தினேஷ் கார்த்திக் மற்றும் இந்திய ஸ்குவாஷ் நட்சத்திரம் தீபிகா பல்லீகலுக்கும் உள்ள காதல் அனைவரும் அனைவரும் அறிந்த ஒன்றே.
இருவருக்கும் நிச்சயம் செய்துள்ள நிலையில், விரைவில் திருமணம் நடக்கவுள்ளது.
இதனிடையே, இந்திய அணியில் இடம் கிடைக்காமல் தவித்து வந்த தினேஷ் கார்த்திக், ஐ.பி.எல்., நிர்வாகத்தால் டெல்லி அணியில் ரூபா 12.5 கோடிக்கு வாங்கப்பட்டார்.
**இது பற்றி அவர் கூறுகையில், தீபிகா பல்லீகல் தனது வாழ்க்கையில் வந்த பின், எல்லாமே நல்லதாகவே நடக்கிறது. பெங்களூர் அணிக்கு எதிரான முதல் போட்டியில், அணித்தலைவர் அந்தஸ்தும் தேடி வந்தது என்று தினேஷ் கார்த்திக் கூறியுள்ளார்.**
வரும் மே மாதம் இங்கிலாந்து சென்று இங்கிலாந்து ஓபன் ஸ்குவாஷ் தொடரில் பங்கேற்கவுள்ள தீபிகா இதற்கு முன் கிடைத்த நேரத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வந்து இங்கு நடக்கும் அனைத்து ஆட்டங்களையும் பார்க்கவுள்ளதாக தெரிவித்துள்ளார். (த)

## மஹேல, சங்கக்கார மீது ஒழுக்காற்று விசாரணை



இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் செயலாளர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி ஆகியோரை விமர்சிக்கும் வகையில், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர்களான மஹேல ஜயவர்த்தன மற்றும் குமார் சங்கக்கார ஆகியோர் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில், ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ள இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.
இந்தத் தீர்மானம் சபையின் நிறைவேற்று குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.
இலங்கை கிரிக்கெட் சபையின் பொருளாளர் நுஸ்கி மொஹமட் இதனை உறுதிப்படுத்தினார்.
எனினும், இந்த விடயம் தொடர்பில் தொடர்ந்தும் செயற்படுவதில்லை என இலங்கை கிரிக்கெட் சபை இதற்குமுன்னர் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## 49 வயதிலும் உலக சம்பியன்




உலக குத்துச்சண்டைச் சங்கம், சர்வதேசக் குத்துச்சண்டைச் சங்கம் ஆகியவற்றின் இலகு அதி பார (லைட் ஹெவிவெய்ட்) சம்பியன் பட்டத்துக்காக நடைபெற்ற போட்டியில் கஸகஸ்தான் வீரர் பெய்புட் ஷுமேனோவை அமெரிக்க வீரர் பேர்னார்ட் ஹோப்கின்ஸ் தோற்கடித்தார்.
அமெரிக்காவின் வொஷிங்டன் டி.சி. நகரில் நடைபெற்ற இப்போட்டியில் 11 ஆவது சுற்றின் முடிவில் 49 வயதான பேர்னார்ட் ஹோப்கின்ஸ் 116:111 புள்ளிகள் விகிதத்தில் வெற்றி பெற்றதாக இரு நடுவர்களும் ஷுமேனோ 114:113 விகிதத்தில வெற்றி பெற்றதாக ஒரு நடுவரும் தீர்ப்பளித்தனர். மூன்று நடுவர்களில் இருவர் ஹோப்கின்ஸுக்கு சாதகமாக தீர்ப்பளித்ததால் அவர் தனது சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தின் சம்பியன் பட்டத்தைத் தக்க வைத்துக்கொண்டதுடன் உலகக் குத்துச்சண்டைச் சங்கத்தின் சம்பியன் பட்டத்தை 30 வயதான பெய்புட் ஷுமேனோவிடமிருந்து கைப்பற்றினார்.
இதன்படி மிக அதிக வயதில் உலகக் குத்துச் சண்டை சம்பியன் பட்டமொன்றை வென்ற வீரராக பேர்னார்ட் ஹோப் கின்ஸ் விளங்குகிறார். இவர் இதுவரை 63 போட்டிகளில் பங்குற்றி 55 தடவை வெற்றியையும் 6 தடவை தோல்வியையும் தழுவியுள்ளார். 32 தடவை நொக் அவுட் முறையில் வென்றமை குறிப்பிடத்தக்கது. (த)



## இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் போல் பாப்ரேஸ் பதவி விலகினார்


இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் போல் பாப்ரேஸ் தனது பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளார்.

போல் பாப்ரேஸின் பதவி விலகல் கடிதம் தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளமையை இலங்கை கிரிக்கெட் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் சபையில் நியமனத்தைப் பொறுப்பேற்கும் பொருட்டு தான் உடனடியாக இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியில் இருந்து விலகிக்கொள்ள நேர்ந்துள்ளதாக போல் பாப்ரேஸ் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் சபை, போல் பாப்ரேஸை தமது அணியின் உதவி பயிற்றுவிப்பாளராக நியமிக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## அதிரடி காட்டினார் மக்ஸ்வெல் அசத்தியது கிங்ஸ் லெவன் பஞ்சாப்



சன் றைசர்ஸ் ஹைதராபாத் அணியை 121 ஓட்டங்களுக்குள் மடக்கி 72 ஓட்டங்களால் அபார வெற்றியைப் பெற்றது கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி. இதன் மூலம் தனது வெற்றிப் பயணத்தை அது தொடர்கிறது.

அந்த அணியின் அதிரடி ஆட்டக்காரர் கிளென் மக்ஸ்வெல் நேற்றும் தனது அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியதன் மூலம் அணியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் சென்றார். அவர் 43 பந்துகளில் 9 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கலாக 95 ஓட்டங்களை விளாசி ரசிகர்களை மகிழ்ச்சியில் திளைக்க வைத்தார்.

நேற்றைய ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் சன் றைசர்ஸ் ஹைதராபாத் அணியும் மோதிக்கொண்டன. சார்ஜா கிரிக்கெட் மைதானத்தில் இந்த ஆட்டம் இடம் பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சன் றைசர்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி ஆரம்பத்திலேயே அதிரடி ஆட்டத்தில் இறங்கியது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களான புஜாரா, சேவாக் ஆகியோர் அதிரடியை ஆரம்பத்திலேயே காட்டத் தொடங்கினர். புஜாரா 35 ஓட்டங்களையும், சேவாக் 30 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த மக்ஸ்வெல்-மில்லர் ஜோடி மீது பலத்த எதிர்பார்ப்பு இருந்தது. அதற்கு ஏற்றாற்போல் மக்ஸ்வெல் தனது அதிரடியால் சிக்ஸர் மழை பொழிந்தார். சன் றைசர்ஸ் பந்துவீச்சாளர்களைத் திணறடித்த அவர், அனைத்துப் பந்துகளையும் எல்லைக்கோட்டுக்கு வெளியே விரட்டினார். 43 பந்துகளில் மிக வேகமாக 95 ஓட்டங்களை அவர் குவித்தார். இதில் 9 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கும். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மில்லர் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கிங்ஸ் லெவன் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 193 ஓட்டங்களைக் குவித்தது.

சன் றைசர்ஸ் அணியின் பந்துவீச்சாளர்களான புவனேஸ்வர் குமார் 3இலக்குகளையும், அமித் மிஸ்ரா 2 இலக்குகளையும், டரன் சமி ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

194 என்ற இமாலய இலக்கை விரட்டிய சன் றைசர்ஸ் அணிக்கு ஆரம்பமே சொதப்பியது. அந்த அணியின் வீரர்களான அரோன் பிஞ்ச், சிகர் தவான், டேவிட் வோர்னர், இர்பான் பதான், டரன் சமி ஆகியோர் பெரும் ஏமாற்றத்தை அளித்தனர். லோகேஷ் ராகுல் அதிக பட்சமாக 27 ஓட்டங்களைப் பெற்றார். 19.2 பந்துப்பரிமாற்றங்களில் அந்த அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 121 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பந்துவீச்சில் பாலாஜி 4 இலக்குகளையும், மிச்செல் ஜோன்சன், அக்சர் பட்டேல் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், சந்தீப் சர்மா, ரிஷி தவான் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக 95 ஓட்டங்களை விளாசிய மக்ஸ்வெல் தெரிவானார். (த)

## தொடர்கிறது சூதாட்டம் இதுவரை 9 பேர் சிக்கினர்

கடந்த ஐ.பி.எல். போட்டிகளில் நடந்த சூதாட்டப் பிரச்சினை தொடரும் வேளையில், இந்த ஐ.பி.எல் தொடரிலும் பலர் சூதாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஐ.பி.எல். போட்டிகள் மெல்ல மெல்லச் சூடு பிடித்து வரும் நிலையில் மறு பக்கம் கிரிக்கெட் சூதாட்டங்களும் களைகட்டத் தொடங்கியிருக்கின்றன.

ஐ.பி.எல். சூதாட்டத்தில் ஈடுபட்டதாக இதுவரை மொத்தம் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக ஆகாஷ் மாத்தூர், கரன் சர்மா, முகேஷ் மீனா, வேத் பிரகாஷ், லால்சந்த், பைசல் ஆகிய ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். விசாரணையில், அவர்கள் உள்ளூர் வாசிகள் என்பதும், கொல்கத்தா மற்றும் டெல்லி அணிகளுக்கு இடையேயான போட்டியின் போது சூதாட்டத்தில் ஈடுபட்டதும் தெரிய வந்துள்ளது.

அவர்களிடமிருந்து 7 ஆயிரத்து 800 ரூபா ரொக்கப்பணமும், பல லட்சம் ருபாய் பணபரிவர்த்தனைக்கான வங்கிச் சிட்டைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும் அவர்கள் வைத்திருந்த கணினி, கைத்தொலைபேசி ஆகியவற்றையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். (த)



## நிச்சயம் கலக்குவேன்

காயம் காரணமாக டெல்லி அணியின் தலைவர் கெவின் பீற்றர்சன் ஐ.பி.எல் போட்டியில் விளையாடாத நிலையில், அடுத்த போட்டியில் களமிறங்க போவதாக நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடந்த இரு போட்டிகளில் காயம் காரணமாக கெவின் பீற்றர்சன் விளையாடாததால் ஐ.பி.எல் போட்டிகளில் டெல்லி அணிக்குப் பலத்த பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், அடுத்த போட்டியில் விளையாட தயாராகி விடுவேன் என்று தெரிவித்துள்ளார் இங்கிலாந்து அணியின் முன்னாள் அதிரடி ஆட்டக்காரரும், டெல்லி டேர்டெவில்ஸ் அணியின் தலைவருமான கெவின் பீற்றர்சன்.

அவர் மேலும் கூறுகையில், நாங்கள் மூன்று போட்டிகளில் விளையாடி ஒரு போட்டியில் வென்றுள்ளோம். என்னை அவர்கள் இழந்துள்ளனரா? என்பது பற்றி எனக்கு தெரியாது. இது ஒரு நீண்ட தொடர். என்னைப் பொறுத்தவரை அடுத்த போட்டியில் அணிக்குத் திரும்பி விடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது என்று கூறியுள்ளார். (த)


### மிக குறைந்த விமான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு – மதுரை | –15800 | RTN |
| கொழும்பு – சென்னை | –19900 | RTN |
| கொழும்பு – திருச்சி | –22000 | RTN |
| கொழும்பு – பெங்களூர் | –23300 | RTN |
| கொழும்பு – டோகா | –26000 | O/W |
| கொழும்பு – மாலைத்தீவு | –29900 | RTN |
| கொழும்பு – சிங்கபூர் | –30200 | RTN |
| கொழும்பு – லண்டன் | –70100 | O/W |
| கொழும்பு – பிரான்ஸ் | –66600 | O/W |
| கொழும்பு – மலேசியா | –30000 | RTN |
| கொழும்பு – சுவிஸ் | –112500 | RTN |
| கொழும்பு – கனடா | –105700 | o/w |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்
யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்
Nation Popular Travels & Tours
#128, Brown Road, Jaffna
128, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
0114375357, 0773083820
0214 920 920

ST.ANTONY'S COMPUTER SALE
HP CORE 2 DUO FULL SET - 29,750
HP MINI LAPTOP - 23,750
ONE YEAR WARRANTY
FREE - H- PHONE/ 8GB PEN
187, K.K.S ROAD, JAFFNA TOWN
T.P-2224865/0750698608
(ALL COMPUTER PARTS AVAILABLE)

### கேபிள் ரீ.வி. விற்பனைக்கு
வடமராட்சியில் இயங்கும் கேபிள். ரீ.வி விற்பனைக்கு உண்டு.
T.P-0774908268

### ஆங்கிலம் கற்க இலவச வாய்ப்பு!
ஆறு UNITS உள்ளடக்கிய ஆங்கிலக் கற்கைநெறியின் UNIT ONE முற்றிலும் இலவசமாகக் கற்பிக்கப்படுவதோடு UK நிறுவனத்தின் LEARNERS RECORD உம் கட்டணமின்றி வழங்கப்படும்.
பிரிட்டிஷ் கவுன்சிலின் பாடத்திட்டம்
மல்ரி மீடியா வசதியுள்ள வகுப்பறை
ஆன்லைனில் நேரடி செய்முறைகள்
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
முன்னுரிமை அடிப்படையில் வாய்ப்பு
பதிவுக் கட்டணம் ரூபா 300 மட்டும்
51/3, (பொற்பதிப் பிள்ளையார் கோவிலருகில்) பொற்பதி வீதி, கொக்குவில்.
தொடர்பு: 0779866409 / 0758567447
ALISON DIGILITE
Supported by YES! Suvadi

DIGITAL COLOUR PRINTING
hp Indigo
12 COLOUR - 2800dpi
New Syenthetic Album Print
10 x 30 -12 x 30 - 225.00
4R ( 4x6) - 8.50 - invitation, visiting card
A4 - 12.00 -A3 - 25.00
A2 - 75.00 -A1 -150.00
(minimum order 100 print)
200 YEARS NOT COLOUR FADE
மூர்த்தி டிஜிற்றல்கலர் லாப்
62/20, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம் ~ 0212221358

### சைப்பிரஸில் படிக்க மாதம் 1 லட்சம் வரை உழைக்க வெறும் 5 லட்சம் போதுமானது
ஐரோப்பிய நாடான சைப்பிரஸில் படிக்க மாதம் ஒரு லட்சம் வரை உழைக்க O/L தேவையில்லை ஆண், பெண் இருபாலாரும் பறக்கலாம். 6பேருக்கு மட்டும் அரிய வாய்ப்பு! 40 வயது வரை விண்ணப்பிக்கலாம். (நிபந்தனைகளுடன்)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
0212219016, 0214993502

LMC LONDON METROPOLITAN COLLEGE
VACANCY Lecturers
Closing Date: 28.04.2014
A reputed London Metropolitan college in Jaffna is seeking for qualified faculties for the following subjects:
Certificate level Courses highlights

| Hospitality Management | Travel and Tourism |
|---|---|
| International cookery | The tourism industry |
| HR Management | Tourism geography |
| F&B services | Customer service in industry |
| Accommodation services | Marketing in tourism industry |
| Housekeeping | Developing a visitor attraction |
| Front office Services | Reservation and ticketing |

Qualified lectures are requested to attach their application to nimal@expogroup.lk
Contact Key Person: 0714150995
#197, Arasady Road Jaffna | 0212227230

### பல்கலைக்கழக அனுமதிக்கான படிவம்
23/04/2014 இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணி முதல் படிவம் எமது இரண்டு விற்பனை நிலையங்களிலும் விற்பனை செய்யப்படும்.

பூபாலசிங்கம் புத்தகசாலை
4, பஸ் நிலையம்
யாழ்ப்பாணம்.
021-2226693

பூபாலசிங்கம் புத்தகசாலை
212, வேம்படிச் சந்தி
யாழ்ப்பாணம்.
021-2221637

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.